ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" — "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" — "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—எ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுஹு பங்குனிமீ உஉ (4-4-37) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—நசு.

## தோத்திரம்.

பாராதி யண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற பரவெளியி னுண்மை காட்டிப்
 பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னில்தோய்ந்த பாவியேன் பரிசு காட்டித்
தாராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச் சதாகால நிஷ்டை யெனவே
 சகசநிலை காட்டினை சுகாதீத நிலயந் தனைக்காட்ட நாள் செல்லுமே
காரார எண்ணரும் அனந்தகோ டிகள்நின்று காலூன்றி மழைபொழிதல் போல்
 கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங் கம்மியா னந்த வெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே தொண்டரைக் கூவு முகிலே
 சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் சோதியே சுகவா ரியே.

—தாயுமானசுவாமிகள்

## சத்தியச்சங்கு.

சத்தியம் நிலைக்குமென்று சங்கூதுவோம்
 சாந்தமே ஜெயிக்குமென்று சங்கூதுவோம்
நித்தியம் கடவுளென்று சங்கூதுவோம்
 நீர்க்குமிழாம் வாழ்க்கையென்று சங்கூதுவோம் (சத்)

நீதியே நிலைக்குமென்று சங்கூதுவோம்
 ஞாயமே கெலிக்குமென்று சங்கூதுவோம்
வாதுசூது பொய்மையாவும் ஒன்றேடொன்றாய்
 வம்புகொண்டு மறையுமென்று சங்கூதுவோம் (சத்)

புண்ணியம் பலிக்குமென்று சங்கூதுவோம்
 பொறுமையே கெலிக்குமென்று சங்கூதுவோம்
மண்ணிற்செய்த நன்மைதீமை யல்லாமலே
 மற்றதொன்றும் மிச்சமில்லை என்றூதுவோம் (சத்)

தருமமே நிலைக்குமென்று சங்கூதுவோம்
 தானமே தழைக்குமென்று சங்கூதுவோம்
கருமமே சிறக்குமென்று சங்கூதுவோம்
 கடவுளுண்மை வடிவமென்று சங்கூதுவோம் (சத்)

உண்மையைக் கடைப்பிடித் துயர்ந்தார்களை
 உலகமோசம் என்னசெய்யும் என்றூதுவோம்
தண்மையான சாந்திபெற்ற தக்கோர்முனே
 சஞ்சலங்கள் ஓடுமென்று சங்கூதுவோம் (சத்)

கோபமற்று குணமிகுந்த நல்லோர்முன்னால்
 கூர்மழுங்கும் ஆயுதங்கள் என்றூதுவோம்
பாபமற்ற வாழ்க்கையுள்ள பண்பாளரை
 பயமுறுத்த ஒன்றுமில்லை என்றூதுவோம் (சத்)

அன்புகொண்டு ஆசையற்ற நல்லார்களை
 அரசனும் வணங்குமென்று சங்கூதுவோம்
வம்புதுன்பம் வஞ்சமாயம் எல்லாமிதோ
 வழிகொடுத்து விலகுமென்று சங்கூதுவோம் (சத்)

கொல்லுகின்ற தில்லையென்ற நல்லோர்கள்பேர்
 குவலயத்தில் வாழுமென்று சங்கூதுவோம்
வெல்லுகின்ற போதுமாசை விட்டார்களே
 வீரர்தீரர் சூரரென்று சங்கூதுவோம் (சத்)

ஆன்மசக்தி கண்டுகொண்ட அன்பாளரை
 அடிமையாக்க யாருமில்லை என்றூதுவோம்
தான்மறந் தகந்தைவிட்ட தக்காரையே
 தலைவணங்கும் உலகமென்று சங்கூதுவோம் (சத்)

சாந்திசாந்தி சாந்தியென்று சங்கூதுவோம்
 சாத்திரங்கள் முடிவிதென்று சங்கூதுவோம்
காந்திகாந்தி காந்தியென்று நம்நாட்டிலே
 கால்நடக்கும் வேதமென்று சங்கூதுவோம் (சத்)

அன்புதான் தெய்வம் ஏழைக்
 கருள்வதத் தெய்வ பூசை
முன்புநாம் மஹமத் யேசு
 புத்தரும் மொழியக் கேட்டோம்
என்பெலாம் உருக ஏழை
 எளியவர்க் காக வாழும்
வம்பிலா மார்க்கந் தந்த
 காந்தியார் வாழ்க! வாழ்க!!

—நாமக்கல், வெ. இராமலிங்கம்பிள்ளை.

சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென், றெம்மா லறிதற் கெளிதோ பராபரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாருங்கள் ! எதிர்பாருங்கள் ! !

# "ஈழகேசரி ஆண்டுமலர்"

**ஈசுவரவருட சித்திரைத் திங்கள் க-ம் (13-4-37) நாவின்முன் வெளிவரும்.**

சிறந்த காகிதத்தில் 100 பக்கங்களுக்கு மேலுள்ளதாயும் இலங்கை, இந்தியாவிலுள்ள
சிறந்த பேரறிஞர்களின் அரிய பெரிய கட்டுரைகளுடனும்,
நிழலுருவப் படங்களுடனும் வெளிவரும்.


பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புவோர்
முற்பணமனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

பிரதி ஒன்றின் விலை சதம் **50** (அணா **8.**) மலாய்நாட்டுக்கு காசு 50.

தபாற்செலவு சதம் **25** (அணா **4.**) தபாற்செலவு காசு 20.

விற்பனைசெய்வோர் முன்னுடியே தெரிவித்தாலன்றி அனுப்பப்படமாட்டாது.

"ஈழகேசரி" அதிபர், சுன்னுகம்.

*Insist on the all-Steel British Made World Renowned*

## DAYTON CYCLES

FOR

**STRENGTH, SPEED & APPEARANCE.**

**'DAYTON' is the Cheapest British Made Cycle now available in the Market.**

**INQUIRIES INVITED. : : HIRE PURCHASE TERMS ARRANGED.**

பெலத்திற்கும், ஓட்டத்திற்கும், தோற்றத்திற்கும்
இங்கிலாந்தில் செய்யப்பட்ட
உலகக் கியாதிபெற்றது

## டெயிற்றன் சைக்கிலே!

உத்தரவாதமுள்ளது.
மார்க்கட்டில் மிகவுங் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய
பிறிட்டிஷ் சைக்கில் இதுவே!

இன்ஸ்ரோல்மென்ற் ஒழுங்குகள் செய்துகொள்ளலாம்.

வடமாகாண சோல் ஏசண்டேகள்

**மு. பாலகிருஷ்ணன் அன்ட் பிரதர்ஸ்**

(ஏசன்ஸ் டிறெக்ற் இம்போர்ட்டஸ் அன் மேர்ச்சன்ஸ்.)

சைக்கில்கள், அவைக்குரிய சாமான்கள், மோட்டார்க்கார், டிறக்ஸ்கள்,
இலெக்றிக் சாமான்கள், பற்றறிகள், கிருமபோன், றேடியோ,
சிங்கர் தையல் மெசின்கள், அவைக்குரிய சாமான்கள் புறுடென்ஸல்
வீமா கொம்பனி ஏசண்டேகள்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

*Sole Agents for Northern Province:*

**M. BALAKRISHNAN & BROS.**

*(Agents, Direct Importers & Merchants)*

*Dealers in Cycles and Accessories, Motor Cars, and Trucks, Electrical Goods & Batteries, Gramaphones & Radio Sets. Representatives to Prudential Assurance Co. Ltd. & Singer Sewing Machine Co.*

*GRAND BAZAAR, JAFFNA.*

(240) 3-1-37




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு „ அணா 1.
மலாய்நாட்டுக்கு „ காசு 7.

# ஈழகேசரி

**விளம்பர விகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
„ அரைக்கலம் „ 4-00
„ காற்கலம் „ 2-50
அரசியல்சம்பந்தமான
விளம்பரங்களுக்குச்
சலார் வேறு.

தொகுதி—எ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுஹ பங்குனிமீ உ௨ (4-4-37) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—நசு

## யாழ்ப்பாணப் புராதன குணதோஷ வாராய்ச்சி.

**By Daniel John, M. B.**

*(All rights reserved)*

**யா**ழ்ப்பாணப் புராதனத்தில் நாமறிந்த அதிபூர்வ சம்பவம் சிவ பெருமானோடு சம்பந்தப்பட்டது.

"பூர்வகாலத்தில் சிவன் பார்வதி சமேதராய் இவ்விடம்வந்து திருத் தலப்பதியில் வாசம் பண்ணினர். அப்போது தமது பாரியாகிய உமை ஸ்நானஞ் செய்வதற்காய்க் கண் ட தீர்த்தத்தை யிவ்விடமழைத்து வந்தனரென்றும், அதிற் தேவர்களும் ரிஷிகளும் பிறரும் வந்து தீர்த் தமாடிப் புண்ணியவான்களாய்ப் போயினரென்றும், அக்காரணத்தால் இந் நாடு புண்ணியபுர மென்றழைக்கப் பட்டதென்றும் சொன்னர்" என யோன் ஆசிரியர் கூறினர் (யோ. யா. ச. ப 4–5)

கீரிமலைக்கருகே பாயும் நன்னீ ரருவி சிவபெருமானுற் பரிசுத்தப்படுத் தப்பட்டபின், ஓர் பிரபல்லிய தீர்த் தமாயிற்று. இதுவே பண்டுதொட்டு அயற்தேச வாசிகள் யாழ்ப்பாணத் தைத் தரிசிக்கவந்த விசேஷ காரண மாம்.

### நகுல - நகுல கிரி - கீரிமலை.

ஆரியரால் ஓர் விசேஷ தீர்த்த மென மதிக்கப்பட்ட "நகுல" இது வே. நகுலகிரியென்னும் பெயரினுற் பதியைப்பற்றி யோன் ஆசிரியர் கூறுவது:—

"முசுகுந்தன் காலத்தில் அவ னும், கீரிமுக ரோகத்தனு யிருந்தமை யால் நகுல முனியெனப் பேர்பெற்ற தபத்தியும் கூடிவந்து, சக்கரவர்த்தி தீர்த்தமாடித் தன்னகர்செல்ல, நகுல முனி மலைக்குகையைத் தன்னரணுக் கிக்கொண்டு அவ்விடமிருந்தார். அத ஞல் அம்மலை நகுல கிரியெனப் பேர் பெற்றது" (யோ. யா. ச. ப. 5)

மாருதப்புரவீகவல்லி "நகுல முனிவரினுசி பெற்று" இருந்தனள் என்றுங் கூறுகிறர் (யோ. யா. ச. ப. 12) முசுகுந்தன்கால மெப்போ தென்று தெரியவில்லை. ஆனல், அவ ளோடு வந்த நகுலமுனி மாருதப்புர வீகவல்லி காலத்திலு மிருந்தாளென் றல் அவன்காலம் கி. பி. 800-ம் வரு ஷம் வரையில் என்று சொல்லப்ப டும். ஏனெனில், உக்கிரசிங்கன் இலங் கையின் வடபாகத்தைப் பிடித்தது கி. பி. 796-ல் (யோ. யா. ச. ப. 11) இதற்கு அனேக நூற்றுண்டுகளின் முன்னரே ஆரியர் இத் தீர்த்தத்தை "நகுல" வென்றழைத்த படியால், இம்முனிவரப்பெயரி னுற்பத்திக்குக் காரணமாகமாட்டார். முசுகுந்தன்கா லத்து முனியும் வெவ்வேறு முனிவர் களாயிருந்தால, வசித்த இடப்பெய ரினல் முனி அழைக்கப்பட்டாராகி நதுமன்றி ஒருவர் பின்னெருவராய்ப் பல முனிகள் அவ்விடத்தே யிருந் தார்களாகவும் தோன்றுகிறது.

"நகுலகிரி" யென்னும் பெய ரினுற்பத்தி சிவபெருமானினேர் பெ யராகிய "நக்கன்" என்பது என்னபி ப்பிராயம். நக்கன் + குலம் (மனை) — நக்குலம் — நகுலம். நக்கன் வசித்த இடம் நகுலமும் அவ்விடத்து மலை நகுலகிரியுமாயின. ஆகவே "நகுல" என்னும் சமஸ்கிருதச்சொல் "நக்கு லம்" என்னுந் தமிழ்ச்சொல்லிலிருந் து வந்ததாகிறது.

முதலியார் இராசநாயகமவர்கள் "நகுல" எனுஞ் சொல் நாகர் என் னுஞ் சனங்களின் பெயரிலிருந்து வந் திருக்கலாமெனக்கூறினர்.(A.J.p 35)

"நகுலம்" என்பதினுற்பத்தி யைக் கவனியாது, "நகுலகிரி"யைப் பொதுவழக்கத்தில் "கீரிமலை" என் றூர்.

### புண்ணியபுரம் — தர்ஷிஸ்

இந்நாடு "புண்ணியபுரம்" என்ற ழைக்கப்பட்டதற்குச் சிவபெருமா னின் பெயரான "புண்ணியன்" காரணமாகும். சலொமோன் இரா சாவின் காலத்து "தர்ஷிஸ்" என் னும் எபிரேய பெயர் "புண்ணியபு ரம்" என்னும்பெயருக்குச் சமமான வோர் தமிழ்ப்பெயரிலிருந்துற்பத்தி யான தென்பதென்னபிப்பிராயம். அச்சொல் "தரிசனஸ்தலம்" போற் தோன்றுகிறது. நளச்சக்கரவர்த்தி "ஸ்தலதரிசனஞ்" செய்தாரெனக் காண்கிறோம். (யோ. யா. ச. ப. 6)

தர்ஷிஸ் = Tars-ish = தர்ச(ன) ஸ்த(லம்)

ஓரிடப்பெயர், சமமான கருத் துள்ள பலபெயர்களால் வழங்கப் பட்டதாகவும், ஒலிப்படி பிறபாஷை யில் வந்ததாகவுந் தோன்றுகிறது. இவ்வாறு ஓர்காலம் நம்மூரில் வழங் கப்பட்ட பெயர் இப்போ மறக்கப் பட்டதாயினும் அந்நிய ஆசிரியரால் காக்கப்பட்டிருப்பதைப் பின்னுங் காண்போம்.

முதலியார் இராசநாயகம் அவர் கள் "தர்ஷிஸ்" என்னும் பெயர் "திருக்கேதீஸ்வரம்" என்னும் பெயரி லிருந்து வந்திருக்கக் கூடுமென்றூர் (A. J. p. 89) ஆனல், திருக்கேதீஸ் வரம சலொமோன காலத்திற் பேர் போன இடமாயிருந்ததென்பதற்கு அத்தாட்சியில்லை. "முன்னீஸ்வரம" என்னும் வேறேரிடம் அதன் தென் பகத்திலிருப்பதால் திருக்கேதீஸ் வரம் பின் ஸ்தாபிக்கப் பட்டதாகத் தோன்றுகிறது. இது கி. மு. மூன்றும் நூற்றுண்டின் பிரளயத்தின் (A. J. p. 9) பின்னர் போலும்.

### திருத்தம்பலைப்பதி—தாம்ரபர்ணி Taprobane—தம்பபன்னி

கீரிமலைத்தீர்த்தத்திற் "கனித் தாயவிடம் திருத்தம்பலைப்பதியெனப் பேர் பெற்றது"(யோ. யா. ச. ப. 4) "தம்பலம்" என்பது பொதுவாகத் தம்பழப்பூச்சி என்று வழங்கப்படும்

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

இலக்கணம்

## நாரைவிடு தூது.

(கொழும்பு, எம். ஆர். சேதுராமன் செட்டியார்.)

**நீ**ர் வளம் நிறைந்த இடங்க ளில், பரந்து திரியும் பறவைகளில், நாரையும் ஒன்றாகும். செங்காலும் வெண் சிறகும் அமைந்த சிறு நாரை, செஞ்சொற் கவிஞரது கருத்தைக் கவரும் அழகு வாய்ந்ததென்று கூறு வது மிகையாகாது. செங்கால் நாரை யின் செவ்விய அழகினை உணர்த்தப் போந்த ஓர் இயற்கவிஞர்,

"நாராய் நாராய்
செங்கால் நாராய்
பழம்படு பனையின்
கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச்
செங்கால் நாராய்"

என்று அப்பறவையின் செந்நிறம் வாய்ந்த கால்களையும், பனையின் கிழ ங்குபோல் பகுந்து குவிந்த வாயினை யும் பண்புற உணர்த்திப் போந்தார். பகற்பொழுதில் இரை தேர்ந்து, அந்தி மாலையில் ஆகாய வழியே பறந்து, மனையகம் சேர்ந்து மகிழும் நாரை, அன்பர் பால் தூது செல் லுதற்குரிய அழகிய பறவைகளில் ஒன்ருக ஆளப்படுகின்றது. காத லால் மயங்கித் தளரும், அன்பர்க் குரிய இடம் நெய்தல் நிலமாய கடற்கரையாதலால், அந்நெய்தல் நி லப்பறவையாய நாரை, காதலின் துயரறிந்து தூது செல்லுதல் மிகப் பொருத்தமுடையதாகும்.

இத்தகைய நலம் வாய்ந்த நாரை யை, அன்பால் அகங்குழைந்துரு கும் ஆன்றோர், இன்நலம் அமைந்த ஈசன்பால், தூதனுப்பும் முறை, மிகத்தூயதாய் இலங்குகிறது. இறை வனது இணையற்ற பெருமையை அறிந்து, அப்பெருமானுடன் இரண் டறக் கலந்து, இன்புறக் கருதிய திரு நாவுக்கரசர், செங்காற் சிறு நாரை யை நோக்கிக்கூறும் சொற்கள் சிந் தைக்கினியனவாம்.

"பொங்கோத மால்கடலிற்
புறம்புறம்போய் இரைதேரும்
செங்கால்வெண் மடநாராய்!
செயற்படுவ தறியேனன்
அங்கோலவளை கவர்ந்தான்
அணிபொழில் சூழ்பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத்
தார்அருளா தொழிவானே"

என்று அப்பரது அருங்கவி யெழுந் தது. நீர் பொங்கி அலையெறியும், நெடுங் கடலில இரை தேரும், நெய் தல் நிலப் பறவையை, "செங்கால் வெண்மட நாராய்" என்று செம்மை சான்ற மொழிகளால் அழைக்கின் றூர். தன்னை அன்பினல் ஆண்டு கொண்ட அழகிய இறைவன அகத் தில் ஈரமுடையவனதலால், குளிர் பூஞ்சோலையின் நடுவே உறைகின் றுன் என்னும் குறிப்புத் தோன்று மாறு, "அணிபொழில்சூழ் பழனத் தான்" என்று அன்பளாவிய மொ ழிகளால், இறைவனது இருக்கையை அடிகள் அறிவித்துப் போந்தார். அன் பால் நினைந்துருகும் அடியாரது துயர் கண்டு தரியாது, அவர் நினைந்த வடி வோடு விரைந்து சேர்ந்து, இறை வன் ஆட்கொள்வான், என்னும் திண் ணிய எண்ணம், அடிகளது உள்ளத் தில் திடம்பட ஊன்றி நிற்றலால் தான் அருளாது ஒழிவானே? என்று துணிந்துரைக்கின்றூர். இன்னும் மன முடைந்து உருகும் அன்பர்க்குப் பே ரின்பம் அளிக்கும் பெருமை வாய்ந்த இறைவன், அன்பினல் ஆட்கொள்வ தற்கு அறிகுறியாக அளிக்கும் அழ கிய மணமாலையை, "தம்கோலநறும் கொன்றைத்தார்" என்று போற்றிப் புகழ்கின்றூர். ஆகவே பூம்பொழில் சூழ்ந்த பழனத்தில் வாழும் பரமன், காதலால் கரைந்துருகும் அடியாரது கடுந்துயர் துடைத்து, எல்லையற்ற இன்பம் அளிப்பான் என்னும் இனிய கருத்தைச்செங்கால்நாரைக்குச்சொல் லும் செஞ்சொற் கவிஞரது சிலம் அறிந்து போற்றுதற்குரியதாகும்.

இன்னும் அடியாரது அன்பின் நலம் அறிந்த இறைவன், அவ்வன் பைப் போற்றி அருள் செய்வான் என்று அடிகள் அருளும் திறம் மிக அழகு வாய்ந்ததாகும்.

"துணையார முயங்கிப்போய்த்
துறைசேரு மடநாராய்
பணையார வாரத்தான்
பாட்டோவாப் பழனத்தான்
கணையார இருவிசும்பில்
கடிஅரணம் பொடிசெய்த
இணையார மார்பன்என்
எழில்நலம் உண்டுஇகழ்வானே"

என்று அப்பர் கூறும் அழகிய மொழிகள் ஆராய்ந்து மகிழத்தக்கன வாம். அன்பின் சுவையறிந்த நாரை யே, மெய்யன்பின் ஆழமறிந்து, பிறர்க்கு அறிவிக்கும் தகைமை வாய்ந்த தாதலால், "துணையார முயங்கிப் போய்த் துறை சேரும் மட நாராய்" என்று நாரையின காதல் திறத்தை வியந்துரைத்தார். அன்றியும் துணையோடு முயங்கிய நாரை, துணையின்றி மயங்கும் மற் றொரு உயிரின் நிலைகண்டு பரிவுறு தல் இயல்பாதலால், "துணையார முயங்கிய மட நாரை"யை நோக்கித் தன் துயரை அறிவித்த முறை பொருத்தமுடையதாகும். பண் ணென்ற இசை பாடும் அடியார்கள் நிறைந்த பழனத்தில் உறையும் பெருமானைப் "பாட்டோவாப் பழ னத்தான்" என்று போற்றுகின் றூர். இசையமைந்த இன்னகரில், ஈசன் இசையோடு உறைகின்றுன் என்று அடிகள் அருளும் மொழிக ளில், ஆர்வம் நிறைந்த அவரது உள்ளம், அழகுற இலங்குகிறது. இத்தகைய பதியிலமைந்த பரமன், காதலால் நலியும் அடியாரைக் கரு ணையால் ஆண்டு, இரண்டறக் கலந்து இன்பமளிப்பவன் ஆதலால், அவ் வன்பனது ஆரமணிந்த மார்பை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

மனவெழுச்சியில்லாதவர் இவ்வுலகத்தாருள் வன்மையுடையோமென்னும் மதிப்பைப் பெருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமதர்மம் என்றால் என்ன?

## மூட்டுப்பூச்சி போன்ற முதலாளிச் செல்வர்.

### ஒருவனுக்குக் கூழும் மற்றவனுக்கு இராஜபோகமும் ஏன்?

### உலகில் உயர்வுதாழ்வு இருத்தல் கடவுட் சம்மதமா?

(திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்கள்)

சமதர்மம், பொதுவுடைமை, அபேதவாதம் என்னும் சொற்களைக் கேட்டதும் மிகப் பெரும்பாலாரான தொழிலாளிகளின் இரத்தத்தை உறிஞ்சிக்குடித்துப் பணம் சம்பாதித்து அதனாற் செல்வர் என்று நாமம் கொண்டுதிகழும் ஒரு சிலர் வெருளுகின்றனர். அவர்களை ஆதாரமாகக் கொண்டு, அவர்களது செல்வாக்கில் அகப்பட்டு இருக்கும் அதிகாரவர்க்கம் இச்சொற்களைப் பிரயோகிக்கவும் விடாது, வாய்ப்பூட்டுச்சட்டம் இட்டு விடுகிறது. * *

உலகில் தோன்றியுள்ள மக்கள் யாவரும் ஒரே இறைவனின் சேயரே! எனவே அவர்களில் உயர்வு தாழ்வு இருத்தல் தேவசித்தமுமாகாது. இயற்கைக்கு முரணானது. ஆனால், இது கலியுகம்! அதர்மம் தலைவிரித்தாடும் காலம்! விதி, விதி என்று அழுதுகொண்டு, மக்கள் தமது பிறப்புரிமையை மறந்துவிடும் காலம்! விதி விதி என்று நின்ற படியினால்தான், எம் தேசம் இப்போது இத்தகைய கேவல நிலையில் இருக்கிறது. * *

எமது நாட்டை எடுத்துக்கொள்ளுவோம்! பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒரு நேரச்சோற்றுக்கும் — ஏன் கஞ்சிக்கும் — வழியில்லாது தவிக்கின்றனர். அறுவடைகாலத்தில் வயல்களுக்குச் சென்று, கேவலம் "அழிஞ்ச" புற்றுக்குள் இருக்கும் நெற்புதிர் கவரவேண்டிய அத்தகைய கேவல நிலைக்கு வந்துவிட்டார்கள். அவர்களைப் பனி, வெயில் என்பவற்றில் இருந்து காப்பதற்குத் தக்க குடிசைகள் இல்லை. அவர்கள் இருக்கும் "மனைகள்" என்று சொல்லப்படும் இடங்களில், பாம்பும், எலியும், எறும்பும், கறையானும் சகபாடிகளாக வசிக்கின்றனர். அவர்களது தேகத்தைக் காப்பதற்கு நான்குமுழக் கந்தைக்கேனும் வகையில்லை. அவர்களின் "மனை"களில் உள்ள அடுப்பங்கரைகள் சாம்பல்பூத்து இருக்கின்றன. காளானும், குப்பைமேனிக் கீரையும் வளர்ந்திருக்கின்றன. புஷ்டியுள்ள உணவு அவர்களுக்கு இல்லை. சாத்வீக குணத்தை ஏற்படுத்தும் உணவு அவர்களுக்கு இல்லை. அதன் பயனாக இச்சைகள் அதிகரிக்கின்றன. வருஷத்திற்கொருமுறை பிள்ளைகள் ஜெனிக்கின்றன. அவற்றின் தோற்றம் அம்மம்ம! அறையவும்படுமோ? ஆழ்ந்த குழியுள்ள கண்கள், என்பு பிதிடும் கன்னங்கள், உலர்ந்த உதடுகள், வற்றிய நா, கோவை கோவையாக வெளியே பிதிடும் விலாவென்புகள், சுருங்கியதேகம் — இதுவே அப்பிள்ளைகளின் அங்கலட்சணங்கள். இப்பிள்ளைகள்தானா, நாளை எம்நாட்டு மனுஷராய் வருபவர்களாம்! 100-க்கு 99 விகிதமான தொழிலாளிகளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அவர்கள் பலாது பிள்ளைகளோ, எவ்வித கல்வியறிவுமின்றிச் சுருட்டுத்தொழிற்சாலைகளிலும் வேறு சாலைகளிலும் வாடுகின்றனர்! வறுமை! கொடியவறுமை! நம நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. *

பல்லாயிரக்கணக்கானோர் இப்படி வாட, "கஞ்சி வரதப்பாவென்றால் எங்குவரதப்பா" என்று அரற்ற, மாதவருமானம் 7½ ரூபாவுக்குமேற் பெறுதிருப்ப, ஒருசிலர் — மிகச்சிலர் — கைவிரல் கொண்டு எண்ணத்தகுந்த ஓர்சிலர் செல்வத்தில் திளைத்து இராஜபோகம் அநுபவிக்கின்றனர். இவர்கள் தம் செல்வத்தைத் தாம் இப்புவியில் ஜெநநமானபோது தம்முடன் கொடுவந்தனரெனில், அவர்கள் அதனை அநுபவிப்பது நியாயமே! தம்முடன் தமது செல்வமும் கூட வந்தது என்று கூறத் துணிவுடைய ஒருவனும் இல்லை. இச்சிலர் தம் செல்வத்தை, ஆயிரக்கணக்கான ஏழைகள் மூலியமாகவே பெறுகின்றனர். ஏழைத்தொழிலாளிகளின் உழைப்பாலேயே ஒரு சிலர் செல்வம் அடைகின்றனர் அன்றி விதியின் பயனால் அல்ல. எனவே, இவர்கள் அனுபவிக்கும் செல்வம் இவர்களுடையது அல்ல. தம்முடையது என்று சொல்வரேல், அது பகற்கொள்ளைத்தனமாகும். பல்லாயிரக் கணக்கானோர்க்குரிய செல்வத்தை, ஒரு சிலர் அநுபவிக்கின்றார்கள். இச்சிலர்க்கு உலக இன்பம் அநுபவிக்க எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு உரிமை அவ்வின்பத்தைக் கொடுக்க ஏதுவாயுள்ள பணத்தை உழைத்துக் கொடுத்த ஏழைத் தொழிலாளிக்கும் உண்டு.

* * *

ஓர் உதாரணம்: எமது தேசாதிபதி இருக்கிறார். இவர்க்கு மாதந்தோறும் 10,000 ரூபாவரை வேதனமும் வேறு செலவுகளும் அநுமதிக்கப்படுகின்றன. அவர் சிலகாலம் கடமை பார்த்தபின்னர் இளைப்பாறுகின்றார். அவர் இளைப்பாறவேண்டியது நீதி. அவர் இளைப்பாறிய பின்னர் அவர்க்குப் "பென்ஷன்" எனப்படும் உபகார வேதனம் கொடுக்க வேண்டியதும் நீதி. ஆனால், இவர் பெறும் மாதவேதனத்திற்கும், உபகார வேதனத்திற்கும் பணம் எங்கிருந்து வருகிறது? அரசிறையில் இருந்து, அரசிறையை யார் இறுப்பது? தான் தினந்தோறும் உண்ணும் அரிசி மீதும், உடுக்கும் உடை மீதும் ஓர் தொழிலாளி இறுக்கும் வரி — அல்லது தீர்வைப்பணமே அரசிறையின் பெரும்பாகமாயுள்ளது. எனவே, தேசாதிபதி அல்லது மற்றும் உத்தியோகஸ்தர்களது வேதனத்துக்கோ அல்லது பென்ஷனுக்கோ இத்தொழிலாளியே பணம் இறுக்கின்றான். அப்படிப்பட்ட அவன் — நாட்டின் முதுகெலும்பு போன்ற அவன் — நாட்டின் சீவநாடியாயுள்ள அவன் — வருந்தி வாடுவதும் ஏனோ? அவன் ஏன மனரம்மியமாய் வாழக்கூடாது. அவன் தன் தள்ளாத பாரயத்தில் ஏன் பென்ஷன் பெறக்கூடாது? அவனுக்கு நோய் வந்தால், அல்லது காத்திராப்பிரகாரம் ஓர் ஆபத்து நேர்ந்தால் பட்டினியால் ஏன் வாட வேண்டும்? * *

இப்போதுள்ள நிலை — அதாவது ஒருவன் செல்வன், பல்லாயிரவர் நித்திய தரித்திரர் என்னும் நிலைமை — மாறவேண்டும். சமதர்மக் கொள்கை மேலோங்க வேண்டும். எவ்வுயிரும் இறைவன் சேய்; எனவே உயர்வு தாழ்வு இருக்கவொண்ணாது என்ற கொள்கை பொலிய வேண்டும். யாவும் [illegible] வேண்டும். "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்." எல்லாரும் உண்ணுதல் வேண்டும். எல்லாரும் உடுத்தல்வேண்டும். ராம ராஜ்யம் மிளிரவேண்டும். எமது எண்ணம் பகற்கனவா? *

இப்போது இந்த எண்ணம் பகற்கனவாய் இருக்கலாம். ஆனால் உலகெங்கும் சமதர்ம இயக்கம் பரவி வருகிறது. ருஷியாவில் — "ஸார்"ச் சக்கரவர்த்திகளது கொடுங்கோலாட்சியினால் ஓர் காலம் நசுங்கியிருந்த ருஷியாவில் — சமதர்மம் வேரூன்றிவிட்டது. ஜெர்மனியில் அதனை நசுக்க முதலாளிகளின் கையாளும், அதிகாரவெறி பூண்டவருமான ஹிற்லர் என்பவர் தம்மாலானமட்டும் செய்கின்றார். ஸ்பெயினில் முதலாளிவர்க்கத்தினரின் ஆட்டூழியத்தைச் சமதர்ம வீரர் எதிர்த்துச் சமராடி வருகின்றனர். சமதர்மக் கடல் பொங்கி வருகின்றது. வீரன் ஜவஹர்லாலின் தலைமையில் சமதர்மக்கடல் பரதகண்டத்திலும் புகுந்துவிட்டது. அக்கடலின் எழுச்சியைத் தடுக்கமுனைந்த ஜெமீந்தார்களும், சிற்றரசர்களும், குட்டித் தேவதைகளும் மண்கவ்விவிட்டார்கள்! சமதர்மக் கடலின் எழுச்சி இனி எங்கே [illegible] அதனைத் தடுப்பவர் யார்?

# மன்னார்ப் பிரிவின் இடப்பெயர்களும் அவற்றின் சத்தோற்பத்திகளும்

(முற்றொடர்)

179. மல்லிகன்னட்டி:-(i) மல்லி+கல்+நாட்டி. மல்லி மல்லர், மல்லன் என்பவற்றின் பெண்பால். மல்லர் வகுப்பைச் சேர்ந்த பெண்ணினுடைய கல் நாட்டப்பட்ட ஊர். (ii) மல்லி+கன்னட்டி, கன்னடர் அல்லது கன்னடியர், என்பதன் பெண்பால். ஆகவே மல்லிகன்னட்டி, மல்லி என்னும் கன்னடியப் பெண்ணின் ஊர் என்று பொருள்படும். கன்னட்டி என்ற சொல் பலவிடங்களிலும் வருவதாலும், கன்னடியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இப்போதும் ஆங்காங்கு இருப்பதாலும் பின்காட்டப் பட்டதே பொருத்த முடையதுபோல் தோன்றுகின்றது. இது நானாட்டான் மேற்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

180 மணற்குளம்:-மணல்+குளம். மணல் காணப்படும் குளம். இப்பெயரையுடைய இருகிராமங்கள், ஒன்று மாந்தைதெற்கிலும், இன்னொன்று முசலி வடக்கிலுமிருக்கின்றன

181. மணல் மோட்டை:-மணல்+மோட்டை, மோட்டை = சிறிய குளம், மணல் காணப்படும் சிறிய குளம், இது மாந்தை வடக்கிலுள்ள ஓர்சிற்றூரின் பெயர்.

182. மாணங்கவெளி:- மானங்கைவெளி, மா+நங்கை+வெளி. பெரிய அல்லது மாண்புள்ள பெண்ணினுடைய வெளிநிலம். இது முருங்கனுக்கணித்தாயுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

183. மனவஞ்சன்:-மனத்தில் வஞ்சனையுடையவனுடைய ஊர். இது பனங்காமத்திலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

184. மாறையன்குளம்:-இதைப்பற்றி 161-ம் இலக்கமிடப்பட்ட குமாறையன் குளம் என்பதற் கெதிரே பார்க்குக.

185. மண்டுகுமிண்டான்:-மண்டு+குமிண்டான். மண்டு என்னும் மரம் முளைத்த இடம். இது மாந்தை தெற்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

186. மங்கைதுவரங்குளம்: மங்கை+துவரை+குளம், துவரைச் செடிகள் வளர்ந்துள்ள, பெண்ணினுடைய குளம். இது மேற்குமூலைப்பகுதியிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

187. மண்கிண்டி: மண்+கிண்டி, மண் கிண்டப்பட்ட இடம், இது மேற்கு மூலைப்பகுதியிலுள்ள ஓர்கிராமத்தின் பெயர்.

188. மன்னப்பிள்ளைகட்டைக்காடு: மன்னப்பிள்ளை+கட்டை+காடு, மன்னப்பிள்ளை என்பவருக்குச் சேர்ந்த பதிந்த காடு. இது முருங்கனுக்கணித்தாயுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

189. மன்னர் முடிகாத்த மாநங்கைமடு. மன்னர்+முடி+காத்த+மா+நங்கை+மடு, மன்னருடைய முடியைப் பாதுகாத்த பெரிய பெண்ணினுடைய குளம். இது முருங்கனுக்கணித்தாயுள்ள ஓர் சிற்றூரின் பெயர். இதற்கு இப் பெயர் யாது காரணம்பற்றி வந்ததென்பது தெரியவில்லை. இவ்வூரை நீலமடு என்றும் அழைப்பதுண்டு.

190. மாக்காயர்ஊர்: மரக்காயர்+ஊர், முஸ்லீம் தனவந்தனுடைய கிராமம். இது முசலி வடக்கிலுள்ள ஓர் கிராமத்தின் பெயர்.

191. மரைவளர்த்தான் கண்டல்: மரை+வளர்த்தான்+கண்டல், மரை வளர்த்தவனுடைய குளம். இது முருங்கனுக்கணித்தாயுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

192. மறத்தி கன்னட்டி: (i) மறத்தி+கல்+நாட்டி, கல் நாட்டப்பட்ட மறவகுலப் பெண்ணினுடைய ஊர்.

(ii) மறத்தி+கன்னட்டி, மறத்தி என்னும் பெயரையுடைய கன்[illegible]ய அல்லது கன்னடப் பெண்ணினு[illegible] ஊர், இது மாந்தை வடக்கிலுள்[illegible] சிற்றூரின் பெயர்.

193. மறிச்சுக்கட்டி, மறித்துக்க[illegible] (i) மறித்து+கட்டி, மறித்துக் கட்[illegible] பட்ட இடம். ஆற்றை மறித்து அ[illegible] கட்டப்பட்ட இடம். (ii) ஆட்[illegible] மறித்துத் தடுத்த இடம் என்ற பொ[illegible]ளும் படும். மறிச்சுக்கட்டி [illegible] இடத்தில் பெரும் தொகைப் [illegible] திருடிக்கொண்டு சென்றவர்க[illegible] தொடர்ந்து சென்றோர் மு[illegible] மறித்ததாகவும், அவர்கள் அப்ப[illegible] தோர்க்கு அகப்படாமற் சென்[illegible] மீண்டும் மறித்துத் தடை[illegible] கொண்டுசென்ற பொன்னைப் பெ[illegible] பரப்பி என்ற அழைக்கப்படும் இடத்தில் தப்பி ஓடும் நோக்கமாகப் பரவி எறிந்துவிட்டுப் போனதாகவும் ஓர் கன்னபரம்பரைக் கதை உண்டு.

194. மருதோண்டிவான்வேளாகுளம், மருதோன்றி வான் வேளாகுளம்: மருதோன்றி + வான் + வேளா + குளம், மருதோன்றி என்னும் பூண்டு வளர்வதாகிய, வேளாளன் வகுப்பைச் சேர்ந்தவனுடைய குளம். இது மாந்தை வடக்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

195. மதிராடு, மருதமடு: மருது+மடு. மருதமரங்களுள்ள சிறிய குளம். இது முசலி வடக்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

196. மாவிலங்கந்துளம்: மாவிலங்கு+குளம். மாவிலங்கு மாமுள்ள குளம். இது மேற்கு மூலைப்பகுதியிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

197. மயிலிறகுளம், மயிலிறகுக் குளம்: மயில்+இறகு+குளம் மயிலிறகு கண்டெடுக்கப்பட்ட குளம். இது புளியடி இறக்கத்திற்கணித்தாயுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

198. மேத்தன்வெளி: மேத்தன்+வெளி மேத்தன் என்னும் பெயருடையவனின குளம். இது முசலி வடக்கிலுள்ள ஓர் கிராமத்தின் பெயர்.

199. மின்னநிறைஞ்சான், மின்னநிறைந்தான்: மின்ன+நிறைந்தான், மின்னல் தோற்றவும் நிறையும் குளம். இது மாந்தை வடக்கிலுள்ள ஓர்சிற்றூரின்பெயர்.

200. மின்னிநிறைஞ்சான், மின்னிநிறைந்தான்: இதுவும் மேற்சொல்லிய கருத்தை உடையது. இது மாந்தை தெற்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

201. மினுக்கன்: (i) பிரகாசிக்கின்ற இடம், (ii) மினுங்குகின்ற இடம், இது மாந்தை வடக்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

202. மிராக்கப்பண்ணை: மிராக்க+பண்ணை. மிராக்கமீன் உள்ளகுளம். இது மன்னார்த்தீவிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

203. மொடுத்தகம்: பட்டங்கட்டி குடியிருப்பு, மொடுத்தகம்+பட்டங்கட்டி+குடி+இருப்பு, மொடுத்தகம் = கத்தோலிக்க ஆலயங்களில் "மூப்பு" என்னும் உத்தியோகஸ்தனுக்கு அடுத்த நிலைமையிலுள்ள உத்தியோகஸ்தன். பட்டங்கட்டி = கரையார் வகுப்பைச்சேர்ந்தவர்கட்குள் வழங்கப்பட்டு வந்த ஓர் வரிசை, அல்லது பட்டம், அத்துடன் "பட்டங்கட்டி" ஓர் ஆள்ப்பெயராயும் பாவிக்கப்படும் சொல். ஆகையால் இவ்விடப் பெயர் இத்தன்மைவாய்ந்த ஒருவன் குடியிருந்த ஊர் என்றதையே குறிக்கின்றது. இது தலைமன்னாருக்கணித்தாயுள்ள ஓர் சிற்றூரின்பெயர்.

(தொடரும்)

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை, வெரூஉம் புலிதாக் குறின்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமதர்மம் என்றால் என்ன?

(ஸ்ரீமதி கமலாதேவி)

இலங்கைக்கு நான் மறுபடியும் சமுகம் கொடுக்கக்கூடியதாகச் சந்தர்ப்பம் அளித்ததற்காகத் துதி கூறுகின்றேன். இலங்கையின் இயற்கை வனப்பு எப்போதும் என்மனத்தில் நிலைகொண்டுள்ளது.

இலங்கையில் சமதர்மத்தை (Socialism) நிலைநாட்டும் பொருட்டுச் சங்கங்களை ஏற்படுத்தித் தொண்டாற்றும் இளைஞர்க்கு எனது வந்தனமுடையதாருக. உலகில் எங்குபார்த்தாலும் ஆரவாரமே தோற்றுகிறது. வருங்காலம் என்னவாகுமோ என்பது யாவர் கேள்வியுமாகிறது. இப்போது ஏற்படுங் கஷ்டங்கட்கெல்லாம் காரணம் யாதென ஆழ்ந்து நோக்கி ஆராய்ந்து இளைஞர் பார்த்தால் உண்மையை நிச்சயம் அறிவார்

## விடுதலைக்குவழி.

சமதர்மமென்பதைக்குறித்துப் புத்தகங்களிற் படித்து, சபைகளில் பேசிவந்தகாலம் அகன்று விட்டது. இப்போது யாவும் செயற்கையிலே செய்ய வேண்டியனவாக ஏற்பட்டுவிட்டன. அதன் உண்மைகளை அனுபவமாக நாம் அறியுங் காலம் இதுவே. இவ்வாறாக ஏழைச் சனங்களின் நன்மையகாடி, சமதர்மம் நிலைபெறும்படி செய்ய இலங்கையில் இச்சங்கத்தை ஏற்படுத்தினது பொருத்தமான விஷயமே. நமது சமுதாயவாழ்க்கை நாளடைவில் எவ்வளவு மாற்றங்களை அடைந்த தென்பதை நன்குஅறியவேண்டின், பலநூற்றாண்டுகட்கு முன் நமது நாடு இருந்த நிலைமையை நோக்கின் நன்குவிளங்கும். தொழில் அபிவிருத்தி ஏற்பட்டதன்பயனாக, நமது நாட்டிலெத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. யந்திரங்கள் புதிதாக ஏற்பட்ட பின்னரும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படலாயின. கீழைத்தேசங்களில் இன்னும் அடிமைமுறை முற்றாக நீங்கவில்லையென்றே கூறவேண்டும். இது வரையும் தனவந்தர் தாம் நினைத்தபடியே செய்து வந்தனர். ஆனால் தொழில் அபிவிருத்தி ஏற்பட ஆரம்பித்ததும் சமதர்மமும் பரம்புவதாயிற்று. தொழிற்றலைவர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளரைக்கொண்டு தம்தொழில்களை நடாத்திப் பெரும்பொருள் சம்பாதித்துக் கோடீசுவரர்களாக, ஏழைத்தொழிலாளர்க்கு நேரத்துக்குப் போதிய உணவின்றியும், தமது உடம்பினை மறைக்கத் துணியின்றியும் சொல்லொணுத் துயரை அடைந்து வருந்தவேண்டிவராயினர். மனிதராகப் பிறந்தும் அடையுங்கஷ்டங்கள் இவ்வாறாகின்றன. இப்போது அனுஷ்டானத்திலிருக்குஞ்சட்டங்கள் தனவந்தராம் தொழில் முதலாளிகட்கே (Capitalists) பெரிதும் உதவியாக விருக்கின்றன. ஏழைகட்குப் பொதுவாகப்பாதுகாப்பு உரிமை இல்லையென்றே சொல்ல வேண்டும்.

## குடியேற்ற நாடுகளில்

மேலைத்தேசங்களிலுள்ள பல்வேறு நாடுகளிலும் தொழிலபிவிருத்தி ஏற்படவே, அங்கே உண்டாக்கப்பெறும் சாமான்கள் விலைப்படுத்தற்கும் இடம் வேண்டியதாயிற்று. எனவே மேலைத்தேச வல்லரசினர் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்ற ஆரம்பித்தனர். யந்திரமுறையாகப் பொருட்கள் செய்யப்படாதிருக்கும் கீழைத்தேச நாடுகள்மீது நோக்குடையராய்த் தமது அதிகாரத்தை வல்லரசினர் அங்கு நாட்டமுயன்றனர். ஏகாதிபத்திய அரசியல் முறை இவ்வாறே ஆரம்பமாயிற்று. தமக்கிசையச் சட்டங்களை உண்டாக்கித் தம்நாட்டில் செய்யப்படும் மலிந்த பொருட்களைக் கீழைத்தேசங்களில் செலுத்தி விலைப்படுத்தினர். விஷயமிவ்வாறாகவே கீழைத்தேச நாடுகளில் நடத்தப்பட்டுவந்த சிறிய தொழில்கள் யாவும் நசுக்கப்பட்டு அழிந்தொழிந்தன. ஆயிரக்கணக்கான தொழிலாளராம் ஏழைகள் சீவியத்துக்கு உழைக்க வழியின்றித் தத்தளிப்பாராயினர்.

வியாபாரம், கைத்தொழில் காரணமாகப் பெரும் பொருள் ஈட்டிய மேலைத்தேச தனவந்தர்கள், தாம் ஈட்டிய பொருளை உறுதிப்படுத்த வழிகள் தேடப் புறப்பட்டனர். மேலைத்தேசங்களில் தொழிலாளர் தமது உரிமைகளையும் சிலாக்கியங்களையும் பெறக்கூடிய வன்மையைப் பெற்றுவிட்டபடியால், இனி மேலைத்தேசங்களில் தொழில்களை நடத்தி அதிகலாபம் அடையவியலாதெனக் கண்டனர். இப்போது கீழைத்தேசங்களில் வந்து தொழில் ஸ்தாபனங்களை ஆரம்பித்துப்பொருள் ஈட்டமுயற்சி செய்கின்றனர். இவர்கட்கு உதவியாக ஏகாதிபத்திய அரசியல் வாதிகளும் (Imperialists) கூடியளவு முயற்சி செய்தனர். ஐரோப்பிய மகாயுத்தத்தின் பின் பணக்கஷ்டம் ஏற்பட்டது. ஐரோப்பிய வல்லரசினர் ஏராளமாகப் பொருட்களைச் செய்தனரேயன்றி அப்பொருட்களை வாங்குவோரின் செல்வநிலையை உறுதிப்படுத்தினரில்லை. பொருள்கள் வேண்டியளவு இருக்கின்றன. அவைகளை வாங்கப்பணமில்லை. ஆகைபாற்றான், ஒரு பகுதியினர் பணக்காரராகவும் மற்றைய பகுதியினர் மிக்கவறியோராகவும் காணப்படுகின்றனர். செல்வம் யாவர்க்கும் சாசரியாகப் பகிரப்படாத நிலையிலிருக்கின்றது.

## வகுப்புப்பிரிவுகள் வேண்டாம்

ஒரு நாட்டில் வசிப்போர் பல்வேறு வகுப்புக்களாகப் பிரிக்கப்படாது இருப்பதே வேண்டப்படுவது. உயர்ந்தோர், சிறியோர், வறியவர் செல்வர் என்ற பாகுபாடுகள் செல்வங் காரணமாகவே ஏற்படுகின்றன. இந்நிலை ஏற்படுங்காலம் எப்போது வருமோ? குடியேற்ற நாடுகள் அந்நிய நாட்டினரின் ஏகாதிபத்திய அரசியல் முறையிலிருக்கும் வரையும் நம்நாட்டிற்கு மீட்சியேது? ஏகாதிபத்திய அரசியல்முறை பொதுவாக ஏழைமக்கட்குப் பாதகத்தையே உண்டாக்குவதாகும். நாட்டிலுள்ள கமக்காரரின் நிலைமையிலேயே அந்நாட்டின் செல்வவிருத்தி தங்கியுளது. அவர்கள் தமது தொழில்களில் இலாபமடையாது இருப்பின் அந்நாடும் பொருளாதார நிலையில் சீர்குன்றியதேயாகும். நம் நாடு செல்வமுடையதாய் வரும் வரையும் தொழில்களை ஆரம்பித்து நடத்துவதும் இயலாத காரியம். எனவே நாட்டின் வருங்கால நன்மை பொதுவாக கமக்காரரையே பொறுத்துளது.

உலகில் எந்நாட்டினைப் பார்ப்பினும், தற்போது தனவந்தர்களால் நடத்தப்படும் பெருந் தொழில்கள் நட்டமடைந்து வருவதைக் காணலாம். ஒவ்வொருநாடும் பொருட்களை விற்கக்கூடிய இடங்களைத் தேடுகின்றதேயன்றி விலைக்குப் பொருள் வேண்டவிரும்புகின்றில. 1929-ம் வருடம் பொருளாதார நிலையில் மிக உன்னத நிலையிலிருந்த அமரிக்கா இப்போதடைந்துள்ள நிலைமை மிகக் கேவலமாகும் அப்போது உலகிலுள்ள பொன்னில நூற்றுக்கு அறுபது விகிதம் அமரிகாவிலேயே இருந்தது. இப்போது அங்கே கோடிக்கணக்கானேர் உணவின்றி வருந்துகின்றனர். ஐரோப்பா எங்கணும் பொருளாதார நிலை சீர்குன்றி வருகின்றது.

## சர்வாதிகார அரசியல்முறை

சர்வாதிகார அரசியல் முறை ஏற்பட்ட ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் நிலையும் துக்கத்துக்கிடமாகும். அந்நாடுகளில் செல்வம யாவர்க்கும் சமமாக இருக்கவேண்டுமென்ற கொள்கை விருத்திபடையவிடமின்று. தனவந்தர் மென்மேலும் பணக்காரர்களாக வாவே அங்கே வசதிகள் உண்டு. பழைய அரசியல் முறையை நிலைநாட்டவே சர்வ அதிகார அரசியல் முறை விரும்பப்படுகிறது. பொதுசனங்களின் நன்மையைத் தாம் பாதுகாப்பதாக இந்நாட்டினர் கூறுவதெல்லாம் குதர்க்கவாதமே. ருஷியாவிலும் சமதர்மம் விரும்பியவாறு நிலைபெறவில்லை. அங்கும அநேக தீமைகள் தோன்றி ஏழைமக்கட்கு இன்னல்களை விளைக்கின்றன.

# அனுபவ ஆப்தவாக்கியங்கள்

(G. T.)

முன்னேக்கிச் செல்லுங்கால்நாம் ஒருபோதும் பின்னே பார்க்கக்கூடாது. கழிந்தனவற்றில் மனத்தை விடுவதால் புதியனவற்றை நாம் திறமையாகச் செய்யவியலாதவராகின்றேம். ஆரம்பித்த விஷயத்தை முன்பின் பாராது செய்து முடிப்பதேமுறை. பூரணமாக நாம் நேர்மையாக இருக்கவேண்டுமெனஎண்ணி விஷயங்களைக் குறித்து ஆலோசனைசெய்து காலத்தைத் தாமதிப்பின் ஈற்றில் நாம் மம்மதையும், தீக்குணமும், ஆத்திரமும் உடையராய் பெருநட்டம் அடைய நேரிடும். தற்பெருமையை ஒழித்து சர்வ வல்லவராகும் கடவுளில் நம்பிக்கை வைக்கவேண்டும். கடவுளை நாங்கள் மனிதர் செயல்களில் மிக இலகுவாகக்கண்டு கொள்ளலாம்.

## அந்தரங்க வாழ்க்கை

நமது வெளித்தோற்றங்கள் ஒரு பக்கமாக உண்மையான வாழ்க்கையே உள்நோக்கினைக் காட்டுகின்றது. எமக்குவரும் நன்மை தீமைகளிலிருந்து எமது உள்ளம் யாதென எவரும் அறிவர். இவ்வாறு நடந்துவருவதை அநேகர் கவனிப்பதில்லை. விஷயமிவ்வாறாகவே எமது அந்தரங்க சீவியம் தூய்மையடைய நாம முயலவேண்டும். எல்லா விஷயங்களிலும் நாம் நடுநீதி, தயை, இரக்கம் உயரிய நோக்கம், உண்மை என்பனவற்றை நிலை நாட்ட முயலவேண்டும். இக்குணங்கள் எப்போதும் எம்மிலிருந்து ததும்பி யொழுகிச் செல்லவேண்டும். எமது உண்மையான நிலை யாதோ அதுவே ஈற்றில் பயனை அளிப்பது.

## கூட்டுறவு.

ஒருவன் மற்றையோருடன் இடைவிடாமற் சம்பாஷிப்பதாலும், பழகுதலாலும், அவர்கள்போல் வருகிறான அல்லாவிடின் அவர்களைத தன்போலாக்குகிறான். எரிகின்ற காய்ந்த விறகுடன் பச்சை விறகினை வைத்தால் சிலபோது பச்சைவிறகும் எரிகின்றது. சிலபோது காய்ந்த விறகிலுள்ள தீயும் அவிக்கப்படுகிறது. விஷயமிவ்வாறாகையின் நட்புக் கொள்ளுங்கால் யாவரும் சாக்கிரதையாக விருப்பது அவசியம்.

## நன்மையை உரைத்தல்.

ஒருவர்மீதுள்ள நற்குணங்களை வேண்டுமாயின் எத்தனை முறையும் எடுத்துப் பாராட்டலாம். அக்குணமுடையார் மென்மேலும் நல்லவராக முயல்வர். தீக்குணங்களைக் கூறி ஒருவரை அதைரியப்படுத்தி கெட்டுபோகச்செய்வது நீதியாகாது. தீயவர்களின் சிறிய நற்குணங்களை எடுத்துரைப்பதனுல் அவர்கள் காலடைவில் நல்லவராவதும் நிட்சயம். நன்மையையெடுத்துரைத்து நன்மையை விருத்திசெய்ய வேண்டுமென்னும் விருப்பம் யாவர்க்கும் இருக்க வேண்டும்.

## தொண்டாற்றும் வன்மை

உலகத்திலுள்ள யாவரும் தாம் மிகவும் பெலங்குறைந்தவர் யுத்தங்கள் ஏற்படின் தம்மால் யுத்தஞ்செய்ய இயலாது என்று கூறின, அரசினர் போர்வீரர்களை எங்குபெறுவர்? தாம் மிகவும் பெலங் குறைந்தவரென்ற போலி அபிப்பிராயத்தை உதறிப் புறக்கணித்து திடமாக நிமிர்ந்து நிற்பினன்றி தேசமக்கட்கு மீட்சியேது? இவ்வாறு கூறுவதனுல ஒவ்வொருவரும தெய்வத் தன்மையடைந்து மகத்தான கைங்கரியங்களைச் செய்வதென்பது கருத்தல்ல. உலகத்திலுள்ளவர் தமது கடமையை மிகத் திறமையுடன் செய்யவேண்டுமென பதே எவர் விருப்பமுமாகும்.

## பெண்கள் கடமைகள்

இல்லங்கட்குப் பெண்களால் ஏற்படுவன யாவை? வீட்டில் கிரமங்கள் நிலைபெறுதற்கும் கஷ்டங்கட்கெல்லாம் சாந்தியேற்படுதற்கும், வனப்பு ஏற்படுதற்கும் பெண்கள காரணராகின்றனர். வீட்டிற்கு வெளியே அமைதியின்மை ஏற்படுதற்கும, கஷ்டஙகள் சம்பவித்தற்கும், உண்மைக் காதல் ஏற்படாதிருப்பதற்கும பெண்கள் தான காரணா. மக்களின இருதயத்தில அதிகாரத்தைப் பெற வேண்டுமென்ற பெரியவோர் சக்தியிருக்கின்றது. அதனை நல்வழியில் உபயோகிப்பின் வாழ்க்கையைத தூய்மைப்படுத்தி உயர் நிலையை அடையச் செய்யும. தீயவழியில உபயோகிப்பின் பெருவ வெற்றியை வருவிக்கும். அந்த அதிகாரந்தான் யாது? கடவுளால அது தாபிக்கப்பட்டது. மனிதரைத் தீயவழியிற்செல்லவிடாது அவர்கள் கஷ்டஙகளை நீக்கி அவர்கள் மீட்சியடையச் செய்து காப்பாற்றுஞ் சக்தியே அதுவாகும்.

## உண்மை வணக்கம்

இற்றைக்குப் பல்லாண்டுகட்கு முன் கடவுளைப போதியளவு திருப்திபடையச் செய்யவேண்டில மிருகபலி செய்வதே ஏற்றதென எண்ணி வந்தனர். நாளடைவில் தாழ்மையான நிலைமையும, சாந்தமான இருதயமும உடையராயின் அவர்களே கடவுளிற்கு ஏற்பவராமென எண்ணப்பட்டனா. கடவுளுக்குப் பெருந்தொகைப பொருட்களை அர்ப்பணஞ் செய்தல், சமயக்கிரிகைகளை விரிவாகச் செய்தல் முதலியனவற்றை அபிமானித்து வந்தவர்கள் அநேகர் உளர். இவைகளை இப்போது விடுவிட்டு அநாதைகட்கும், உதவியற்றவர்கட்குமபண்டிருக்கும வேண்டிய உதவி புரிகின்றனா பலர். உண்மையான தாமஞ் செய்தலே. உண்மைச் சமய அபிமானிகளின் கிரியையாகும.

## புத்தகங்களை வாசித்தல்.

உலகத்தவரால் நாம அவமதிக்கப்படாதிருக்க வேண்டில அநேகபுத்தகங்களை வாசித்தல வேண்டும. கஷ்டங்களை அநுபவிப்பவர்கட்குப புத்தகங்களே ஆறுதலை வழங்குந் துணைவர்களாவர். புத்தகத்தை வாசிப்போர் சந்தோஷத்தைததான அடையாவிடினும் துன்பங்கள் துயர்கள் ஏற்படுங்கால் அவைகளைத தாங்கிக்கொள்ளக் கற்றுக்கொள்ளுகின்றனர்.

யானை பெரிதுங் கொப்புடைய [illegible]லாமையால் புலியடுக்கிலஞ்சும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கட்சியினர் பதவிகளை ஏற்கவில்லை.

## தேசாதிபதி உறுதிகூற மறுத்துவிட்டனர்.

### மகாத்மாகாந்தியின் அபிப்பிராயம்.

பல்வேறு மாகாணங்களிலுமுள்ள தேசாதிபதிகள் தமக்குப் புதிய திட்டப்படி அளிக்கப்பட்டுள்ள விசேஷ அதிகாரங்களை, நினைத்தவாறு உபயோகிப்பதில்லையென வாக்குக்கொடுக்க மறுத்துவிட்டமையால், காங்கிரஸ் கட்சியினர் மந்திரி முதலிய பதவிகளை ஏற்க மறுத்துவிட்டனர். அரசியலை நடத்தும்பொருட்டுத் தேசாதிபதி தமக்கு இசைந்த சிலரை யழைத்து, மந்திரி சபைகளைச் சிருஷ்டிக்கின்றனர். காங்கிரஸ் கட்சியினர் கூடிய தொகையினரைக்கொண்ட ஆறு மாகாணங்களிலும், எப்போதாவது ஏற்படாத பிணக்குக்கள் ஏற்படுமென நிச்சயமாகக் கூறலாம். தேசாதிபதிகள் நடந்துகொண்ட முறையைக் கண்டித்து, மகாத்மா காந்தியடிகள் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு:—

"காங்கிரஸ் தலைவர்கள் கேட்ட விஷயங்கட்குத் தேசாதிபதி உறுதி வாக்குக்கொடுக்க மறுத்த விஷயமாக நான், நெடிது ஆலோசித்தேன். இவ்விஷயத்தைப்பற்றி, எனது அபிப்பிராயத்தைக் கூறுவது அவசியமென உணர்கின்றேன். இவ்விஷயமாக எனது அபிப்பிராயம் யாதென உசாவி மூன்று தந்தி நிருபங்கள் லண்டனிலிருந்து எனக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. சென்னையிலுள்ள நண்பர்களும் எனது அபிப்பிராயத்தைக் கூறுமபடி கேட்டுள்ளார். பதவி ஏற்கும் விஷயமாக, அகில இந்திய காங்கிரஸ் சபையினில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், என்னால் தயாரிக்கப்பட்டதாகவே எனது அபிப்பிராயம் கூறுதிருப்பதெப்படி? தேசாதிபதியின் வாக்குறுதியும் வேண்டுமென எடுத்துக் காட்டியதும் நானே"

**பெருந்தன்மையான சமரசமே வேண்டும்**

"பதவியை ஏற்குமுன், உறுதி கூறும்படி தேசாதிபதிகளைக் கேட்ட விஷயம் செய்யமுடியாததொன்றல்ல. தேசாதிபதிகள் இலகுவில் ஏற்கக்கூடிய நிபந்தனையே கேட்கப்பட்டது. புதிய அரசியற்றிட்டத்தின் அம்சங்கட்கு மாறுகச் செல்லக்கூடிய ஒரு நிபந்தனையுங் கேட்கப்படவில்லை. அப்படியான நிபந்தனையைத் தாம் கேட்கப்படாதென்றும், கேட்கவில்லையென்றும் காங்கிரஸ்வாதிகள நன்கறிவர். புதிய அரசியற்றிட்டத்தைத் திருத்தவேண்டுமெனக் காங்கிரஸ்வாதிகள் விரும்பவில்லை. சிறிதும் உதவாத அத்திட்டத்தை முற்றுக ஒழிக்கவேண்டுமென்பதே அவர்கள் விருப்பம். பதவிகளைப் பெற்றும் அரசியற்றிட்டத்தை முற்றுக அழிக்கவியலாதென்பதையும் காங்கிரஸ் வாதிகள் அறிவர். காங்கிரஸ்கட்சியினர் பெலனை நாட்டில் வலுவடையச்செய்யும் நோக்கமாகவே, புதிய திட்டத்தை ஏற்று நடத்தலாமென அக்கட்சியினர் எண்ணினர். எல்லா அதிகாரத்தையும் காங்கிரஸ் கட்சியினர் பெறும்வரையும் ஒன்றுஞ்செய்ய வியலாது. இத்திட்டம் இனிது நடைபெறவேண்டில், தேசாதிபதியவர்கட்கும், மந்திரிமார்க்குமிடையில் பரஸ்பர ஒற்றுமை ஏற்பட வேண்டும். சட்டததுள் நின்று காங்கிரஸ் மந்திரிகள் தொண்டாற்றின், தாமெவ்விதத்திலும் அவர்கள் கொள்கைகளில் தலையிடுவதில்லையெனத் தேசாதிபதிகள் உறுதிகூறவேண்டும். அப்படிச் செய்யாவிடின், மாகாணத்த சோளுமன்றங்களில், எல்லாவிஷயங்களிலும் சங்கடம்ஏற்படும். இச்சங்கடத்தைத் தவிர்க்கவே நாங்கள் உறுதிமொழி கேட்டோம்."

**உறுதி கோரேப்பது சட்டத்துக்கு மாறல்ல.**

"தேசாதிபதிகட்குத் தாம் நினைத்தபடி செய்ய அதிகாரம் புதிய திட்டப்படி அளிக்கப்பட்டுள்ளது. சட்டப்படி நின்று அரசியலை நடத்துங்கால் தாம் விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதில்லையெனத்தேசாதிபதி கூறுவதும், அரசியற்றிட்டத்துக்கு மாறுன விஷயமன்று. தேசாதிபதிக்குள்ள எல்லா அதிகாரங்களையும் உபயோகியாதிருக்கும்படி நாங்கள் கேட்கவில்லை. பொதுமக்களின் அனுதாபத்தைப்பெற்ற, கூடிய தொகையினராகும் காங்கிரஸ்கட்சியினர் உறுதிமொழியின்றிப் பதவிகளை ஏற்றுப் பின் காலைக்கு அல்லல் படுவதா? இவ்விஷயத்தை வேறு விதமாக விளக்குவாம். தேசாதிபதிகள் மந்திரிகள்மாட்டு மதிப்புடையராயிருத்தலா? அன்றேல் அவமதிப்பதா? தேசாதிபதிகள் தமது விசேஷ அதிகாரத்தை உபயோகித்து மந்திரிகள் செயல்களை நிராகரிப்பின், அது மந்திரிகட்கு அவமதிப்பினை உண்டாக்கியதாகாதா? கூடிய தொகையினரின் ஆதரவைப்பெற்ற மந்திரிமார் தமது கொள்கைகளில் தலையிடாதிருக்க உறுதிகூறும்படி கேட்பது நீதியே யாகும். தேசாதிபதிகள் தமது அதிகாரங்களைக் கண்டபடி உபயோகியாரென்று சேர் சாம்யேல்ஹோரும், மற்றும் மந்திரிகளும் பன்முறைகூற நான் கேட்டிருக்கிறேன். இதையே காங்கிரஸ்கட்சியினர் இப்போதுகேட்டது. இதற்கு மேலாக ஒன்றுங் கேட்கவில்லையே".

**மந்திரிமாரின் பொறுப்பு**

"புதிய சட்டப்படி மாகாணச் சுயாட்சி, பிறிட்டிஷ் அரசினரால் வழங்கப்பட்டிருப்பதாகப் பன்முறை சொல்லப்பட்டுளது. அப்படியாயின் மாகாணத்தை மிகத் திறமையாக அரசுபுரியும் பொறுப்பு மந்திரிமாருக்கே உளது. தேசாதிபதிகட்கு அன்று. பொறுப்பினை ஏற்ற மந்திரிமார் தமது நடமையை நன்குணர்ந்தவராயிருக்கும் வரைக்கும் தேசாதிபதி தம் கொள்கைகளில் தலையிடுவதை விரும்பார். இப்போது நான்எண்ணுவதென்னவெனில், பிறிட்டிஷார் இன்னுமொரு முறையாகத் தாம் காதுக்குள் சொன்ன உறுதிமொழிகளை ஹிருதயத்தால் அவமாக்கிவிட்டனரென்பதே. இந்தியர் துணிவாகநின்று எதிர்க்கும் சக்தியைப் பெறும் வரைக்கும் பிறிட்டிஷார் தாம் நினைத்தவைகளைச் செய்தே முடிப்பார் என்பதற்கு ஐயமின்று. ஆனால் இப்படியாக நடப்பின் மாகாணச் சுயாட்சியரசியல் நடக்கிறதென எப்படிக் கூறலாம்.

**களங்கமற்ற நேர்மை**

"பிறிட்டிஷார் தாமே சிருட்டித்த அரசியற்றிட்டப்படி ஏற்பட்ட கூடிய தொகையினராம் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்தமையால், தாம் ஏற்படுத்திய மாகாணச் சுயாட்சி யரசியலையும் பரிகாசமாக்கிவிட்டனர். இனி நடக்கவிருக்கும் அரசியல் கையில் வாள்கொண்டே நடத்தப்படும். கூடிய தொகையினராம் பிரதிநிதிகள், பேனை என்பவற்றின் உதவி தேவையின்று. இதுவே எனது உண்மையான அபிப்பிராயமாகும். அரசினர் செய்கையைக் குறித்து வேறு அபிப்பிராயம் யான் கொள்ளவழியில்லை. காங்கிரஸ் சபையினர் என்து அபிப்பிராயப்படி நிறைவேற்றிய திட்டம், பூரணநேர்மையுடனும் விசுவாசத்துடனும் நிறைவேற்றப்பட்டது. அது தேசாதிபதியால் ஏற்கப்பட்டிருப்பின் இச்சங்கடங்கள் ஏற்பட்டிரா. இயற்கைமுறையில் அதிகாரவர்க்கத்தினரிடமிருந்து அதிகாரம் பொதுமக்களின் பிரதிநிதிகள் கையில் சேர்ந்திருக்கும்."






கடிதம்

## சிகாக்கோ திருடன் யார் தெரியுமா?

### பொலிஸ்பகுதியார் இவரில் நடபடிக்கை எடுப்பார்களா?

"ஈழகேசரி"ப் பத்திராதிப !

சென்ற மாசம் 28-ந் திகதி ஈழகேசரியில் "உரும்பராயில் சிகாகோ திருடன்" என்ற தலையங்கத்துடன் வெளிவந்த விஷயத்தைக் கண்ணுற்றேன். குறித்த கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்ட உயரம், நிறம், உடை முதலிய யாவும் பொருந்திய வாலிபர் ஒருவர், இற்றைக்கு 3 வாரங்களின் முன் வறுத்தலைவிளானிலுள்ள அப்புக்குட்டி யென்னும் ஒருவரிடம் சென்று அவரது மருமகன ஓர் பார்சல் தன்னிடம் கொடுத்தனுப்பியதாகவும், தான் அதைக் கொண்டுவரவில்லையென்றும், தமது இருப்பிடம் மானிப்பாய் தபால் கந்தோருக்குக் கிட்டவென்றும், தான் கீரிமலைக்குப் போகும்பாதையில் தனது சைக்கிள் பழுதாய்ப்போய்விட்டதென்றும், அதைத் தெல்லிப்பழை சந்திப்பிலுள்ள ஓர் கடையில் வைத்துவிட்டு வந்ததாகவும் கூறி அவரிட இருந்து 3 ரூபா பெற்றுக்கொண போய் விட்டார். மறுநாள் அப்புக்குட்டி மானிப்பாய்க்குச் சென்று வரை விசாரித்து, அகப்படாமல் மாற்றமடைந்து திரும்பிவிட்டா இதேமாதிரி, இவர் சங்கானை, இடைக்காடு, சிவியாதெரு, நல்லூர் முதலிய இடங்களிலும் பலரை ஏமாற்றி இருக்கிறார். இவ்விடங்களிலுள்ளார் இவரைத் தேடித் தெல்லிப்பழைக்குப் பலமுறை வந்திருக்கிறார்கள்.

இவர், சென்றமீ 22௳ வறுத்தலைவிளானிலுள்ள ஓர் வீட்டுக்குச் சென்று, தாம் தலவாக்கொல்லையில் ஓர் புடவைக்கடை வைத்திருப்பதாகவும் தமக்குத் தாய்மாமன்மார் நால்வர் உளர் என்றும், அவர்களுக்குப் பல பெண்கள் இருக்கின்றனர் என்றும் ஆனல் அவர்கள் அழகில்லாதவர்களாயிருப்பதால் தாம அவர்களை விரும்பவில்லையென்றும், அதன் பொருட்டு வறிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாயினும் இலட்சணமுள்ள பெண்ணைப் ஒருத்தியை விவாகஞ் செய்து தனது காணிகளையும் எழுதிக் கொடுக்க விரும்புவதாகச சொல்லி அங்குள்ள ஒரு பெண்ணுக்கு விவாகப் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவர் தனது இருப்பிடம் சூராவத்தை யென்று சொல்லி, மல்லாகம் கோவில்பற்று பதிவு காரியஸ்தர் திரு. து. பொன்னமபலம் அவர்களை அழைததுச் சென்று, கலியாண நோட்டிஸ் முதலியன போடப்பட்டு, மணபபெண்ணுக்கு உடை முதலியன கொடுத்து மாறியபின், சாப்பாடு முடித்துககொண்டு தெருவில் உலாதத வெளிபபட்டனர். தற்செயலாகக் கடைக்குச்சென்று கொண்டிருந்த அப்புக்குட்டி இவரைப் பிடிததுக கொண்டு சத்தமிடப்பலரும் வந்து கூடி விட்டனர். இவரைப் பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கொண்டு செல்ல ஆயத்தப்படுதறியபோது, அவரில் இரககம் கொண்ட சிலா அவரை விலக்கிவிட்டனர். இவருடைய பெயர் சிவகுரு செல்லததுரை. சூராவததையில் இருப்பவர். மல்லாகம ஆங்கில வித்தியாசாலையில் கல்வி பயின்றவர். குறிதத றிசிஸ்ரார் திரு. பொன்னம்பலம அவர்கள் இவரை நன்கு அறிவார். இவரைப்பற்றிப் பலரும எச்சரிக்கையாயிருப்பதோடு, பொலிஸ் பகுதியாரும இவரில் நடபடிக்கை எடுக்கும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம்
தெல்லிப்பழை K. P.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'அரசியற் குழந்தை 'ஜி. ஜி.' யின் ஊசலாட்டம்.'

## "உள்ளதையும் கெடுக்கும் நொள்ளைக் கண்ணர்கள்"

### இந்திய சரித்திரத்தில் புதிய சகாப்தம்

## காங்கிரஸின் தியாகம்

### முன்சுயாட்சிக்கு வாதாட்டம் பின் விசேஷ உரிமைக் கூட்டம்

### இலங்கையில் சமதர்மக்கட்சித் தலைவர்

(நமது கொழும்பு நிருபர்)

கொழும்பு 1

இந்திய அரசியல் சரித்திரத்தில் இன்றைய தினம் ஒருபெருநாள். பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட புதிய அரசியல் திட்டம் இன்றைக்கே இந்தியாவில் அங்குரார்ப்பணம் செய்யப்படுகிறது. முப்பத்துமூன்று கோடிமக்களின் வாழ்க்கையைப் பா...க்கக்கூடிய ஒரு அரசியல் திட்டத்...ன் ஆரம்பநாள் இன்றாதலின், இந்...ராவுக்கு மாத்திரமல்ல உலகமக்க...ங்கே இன்றோர் விசேஷ தினம் ...று கூறலாம். நாட்டிலே அதிக செல்வாக்குள்ள காங்கிரஸ்ஸ்தாபனம் இப்புதியதிட்டத்தை வேண்டாமென்று தள்ளி விட்டபோதிலும், மற்றைய அரசியல் கட்சியினர் திட்டத்தை ஏற்று நாட்டின்பேரால் நிர்வாகம் நடத்தி விடுவார்களென் றெண்ணி, காங்கிரஸ் தேர்தலில் பங்குபற்றி ஆறுமாகாணங்களில் பிரமாதமான வெற்றியடைந்து விட்டது. சட்டசபைகளில் அங்கத்துவம் வகித்தாலும் உத்தியோகம் வகிப்பது முறையா என்ற விஷயம், காங்கிரஸ்வாதிகள் பலரைச் சஞ்சலப் படுத்திற்று. மகாத்மாகாந்தியின் புத்திப்படி, மாகாண கவர்னர்கள், தமது விசேஷ உரிமைகளை உபயோகித்து, காங்கிரஸ் மந்திரிகளின் வேலைக்கு இடையூறு செய்யாதிருக்கும்படி, ஒருவாக்குறுதி காங்கிரஸால் கேட்கப்பட்டது. கவர்னர்கள் அதற்கு மறுத்தனர். அதனால் காங்கிரஸ் வாதிகள் தாங்கள் மந்திரிசபையைக்கூட்ட முடியாதென மறுத்து விட்டனர். உடனே கவர்னர் தங்களுக்குச் சாதகமாயிருக்கும் பிரமுகர்களை அழைத்து மந்திரிசபை கூட்டுமாறு கேட்டிருக்கின்றனர். இதுவரையில் இந்தியாவின் புதிய திட்டம் நிர்வாகத்துக்கு வந்திருக்கும். இன்றே தினத்தில் இத்திட்டத்தை எதிர்த்து காங்கிரஸ்வாதிகள் இந்தியாவெங்கும் 'ஹர்த்தால்' அனுசரிக்குமாறு முயற்சிகள் செய்திருக்கிறார்கள். அரசாங்கமும் மெல்ல மெல்ல அடக்குமுறைச் சட்டங்களைப் பிரயோகிக்கத் துவங்கிவிட்டது. இந்தியர் தமது நாட்டின் சுதந்திரத்தை உன்னி, இதுவரை செய்த தியாகங்களெத்தனை? எத்தனை பெரியார் சிறையில்வாடி உயிர்விட்டனர். எத்தனை ஆயிரம் வீரர்கள் இறந்தனர். இன்னும் எவ்வளவு தியாகங்கள் செய்யவேண்டியிருக்குமோ தெரியவில்லை. "வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ"

இந்திய சுதந்திர இயக்கம் இவ்வாறிருக்க, இலங்கையின் சுதந்திர இயக்கத்தை நோக்குமிடத்து இந்நாட்டவரின் கேவல நிலைமையை நினைந்திரங்க வேண்டியிருக்கிறது. சிங்களர், தமிழர் என்ற பாகுபாடு நாளுக்குநாள் வரவர அதிகரிக்கிறது. இருதிறத்துத்தலைவர்களும், திரைமறைவில் எனஎன சூழ்ச்சிகள் செய்துவருகிறார்கள். தமிழர் பிரதிநிதிகளுள் மிக வீறுடைய அந்த அரசியற் குழந்தை "ஜி ஜி" இப்பொழுதுள்ள சொற்ப ஒற்றுமையைக்கூட ஒருசேர முடித்துவிடவேண்டுமென்று ஊசலாடிக் கொண்டு திரிகிறது. தமிழ் அரசியல் வாதிகள் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். சிறுபான்மையினருக்கு, சிங்களரால் சலுகை காட்டப்படவில்லையென்பது சமீபகாலச் சம்பவங்களிலிருந்துபிரத்தியட்சமாயிருக்கின்றன. அடிமைகளாயிருப்பதனாலும் இந்நிலைமை ஒருவாறு வலிமையடையலாம். பிரிததாலும் சூட்சி இதற்கு உதவி புரியும். இந்நிலைமையில் தமிழர்களுடைய விசேஷ உரிமைகட்கும், சலுகைகட்கும் வாதாடுவதா? அல்லது நாட்டின் பெரிய விஷயமான சுயாட்சியைப் பெற்றபின் அவ்விஷயங்களைக் கவனிப்பதா? என்ற இரு கேள்விகளும் ஆராயப்பட வேண்டும். இத்தருணத்தில் தமிழர்கள் தங்கள் விசேஷ உரிமைகட்கு வாதாடுவதானல், இலங்கையின் அரசியல் முற்போக்குத் தடைப்படும். கேட்கப்படும் அரசியற் சீர்திருத்தங்கள் மறக்கப்படும். ஒற்றுமையில்லாத நிலைமையில், சீர்திருத்தக் கோரிக்கைகள் வலியிழந்துவிடும். சமீபத்தில் யாழ்ப்பாணத் தமிழர்கள் ஒன்றுகூடி தமிழரின் விசேஷ உரிமைகளைப் பாதுகாக்க ஒருபெரும் கூட்டம் கூடப்போவதாகப் பத்திரிகைகளில் செய்தி அறிவிக்கப்பட்டது. முன்னொரு காலத்தில் இவ்விசேஷ உரிமைகளை மறந்து, சுயாட்சிக்கே வாதாடிய ஒருவரே, இக்கூட்டத்தைக் கூட்டுவிக்கப் பெருமுயற்சி செய்கின்றனரென்றும் வதந்தி. இலங்கையில் அரசியல் முற்போக்கைப் பெரிதும் விரும்பும் தமிழர்கள் சிறுபான்மையினராயிருப்பது ஒருதலை. மேலும் அவர்கள் சிங்களரால் சலுகை காட்டப்படாது புறக்கணிக்கப்படுவது இன்னொன்று. அவர்களையே மறுபடியும், சிங்களரை நம்புங்கள், நம்பாவிட்டாலும், அவர்கள் செய்வதைச் செய்யட்டும், நீங்கள் சுயாட்சிக்காக ஒற்றுமைப்பட்டு நில்லுங்கள் என்று கேட்பது அதிகமே. இருந்தும், நாட்டின் உண்மையான முற்போக்குக்காக, இந்த "அதிகத்தை"த் தமிழர் கொடுக்க வேண்டியவராகவே இருக்கின்றனர். சிங்கள அரசியல் வாதிகள் "கோணி" விட்டார்கள். சர். ஜயதிலகருடைய மற்றைய பெருங்குணங்கள் எவ்வாறிருந்தபோதிலும், வயதுவகாலம் அவரிடம் துட்டகைமுனுவின் கொள்கை தாவிவிட்டது.

சிங்களவரிடத்துச் சாதியபிமானம் வளர்வது நல்லது. ஆனல் நாட்டிலிருக்கும் மற்றைய சாகியத்தவரின் உரிமைகளையும், செம்மைகளையும் பாதிக்கும் முறையில் அந்த அபிமானம் செல்லக்கூடாது. இந்நிலைமையை எல்லாம் சமாளிப்பதற்கு விரிந்த நோக்குள்ள தலைவர்கள் வேண்டும். அரசாங்கசபை ஸ்தானத்தையும், மந்திரி பதவிகளையும் நோக்காகக்கொள்வோர் நல்ல தலைவர்களாகமாட்டார்கள். சுயாட்சி நம் கையில் வந்துவிட்டால், ஏனைய சிறு விஷயங்களாகிய உரிமை பங்கிடும் விடயங்களை ஆறுதலாகச் செய்துகொள்ளலாம்.

ஆனல், கண்ணுக்கு முன்னே நடைபெறும் அநீதிகளை என்னசெய்வது? சுயாட்சி, சுயாட்சி என்று தமிழர் கழறிக்கொண்டிருக்கச் சிங்களவன் தமிழனை இல்லையாம்படி செய்து விடுவான் என்று கூறுவாரும் உண்டு. இந்நிலைமையை நீக்குவதற்கு வழி சாதிக்கட்சியை மாற்றி அரசியல் கட்சிகளை உண்டாக்க வேண்டியதே.

சென்றவாரம், இலங்கை சமசமாசக்கட்சியினர் இந்திய சமதர்மக் கட்சித் தலைவரான, ஸ்ரீமதி. கமலாதேவியை இலங்கைக்கு வரவேற்றனர். சமதர்மமென்ற விஷயமாக ஸ்ரீமதி. கமலாதேவி கொழும்பு நகரமண்டபத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். சமதர்மம் சம்பந்தமான எண்ணங்கள் இந்நாட்டில் பரவுவது நல்லதே. உலகத்து அரசியல்களின் நோக்கமெல்லா மென்ன? எல்லாச் சனங்களுக்கும் உண்ண உணவும் உடுக்க உடையும் சுகிக்கப் போகங்களும் கொடுத்து, எடுத்த ஜன்மத்தைப் பயனுள்ளதாக்கிக் கழிக்கச் செய்வதன்றே? சமதர்மத்தின் அடிப்படையான கொள்கை வேற்றுமையின்றி எல்லாச் சனங்களுக்கும் பெருகிய சுகவாழ்வை அளிப்பதே. இதுவே ஹிந்துதர்மத்தின் மூலாதாரமான கொள்கையும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்." மனிதசேவையே மேலான ஈஸ்வரதியானமுமாம். அந்த முறையில் சமதர்மவாதம் புதிதாக ஒன்றையும் விதிக்கவில்லை. கர்மத்தில் ஒருவர் நம்பினபோதிலும் இம்மாதிரியான சமதர்மத்தை உலகில் பரப்ப முயற்சி செய்வது அக்கொள்கைக்கு மாறாகாது. ஆனல் இச்சமதர்மத்தோடு நம் நாட்டுப் பாரம்பரியத்துக்கும் ஆசார சீலத்துக்கும், ஒழுக்கமுறைக்கும், கடவுட் கொள்கைகட்கு மேலாத சில எண்ணங்களும் சேர்ந்திருக்கின்றன. நாஸ்திகம், உலோகாயதம் முதலிய வாதங்கள் இடையிடையே தலைகாட்டவுங் கூடும். இம்மாதிரி எமது நாட்டவரின் கொள்கைகட்கு ஏலாத எண்ணங்களை விலக்கி, நம்நாட்டுக்கு ஏற்ற ஒரு சமதர்மத்தைக் கிரகித்து நிலைநிறுத்தப் பார்ப்பதே ஏற்ற முறை. இலங்கைச் சமசமாசக் கட்சியினர் எவ்வளவு தூரம் இம்முறையில் ஈடுபடக்கூடுமோ, அவ்வளவுக்குச் சமதர்மம் இலங்கையில் பலனளிக்கும். அந்நிலையில் ஸ்ரீமதி. கமலாதேவியின் பிரசங்கங்கள் ஏற்ற பயனை உதவுமா? இந்தியாவில் இருப்பது போல் இலங்கையில் ஏகாதிபத்தியத்தைத் தகர்ப்பதற்கான முயற்சிகளொன்றும் நடைபெறவில்லை. இதுவரையில் பேச்சு நடைபெற்றுக்கொண்டுவந்திருக்கிறதேயல்லாமல், காரியமளவில் ஒன்றும் நடைபெற்றதாயில்லை. ஒருவிதமான திட்டமாவது கைக்கொள்ளப்படவில்லை. அந்நிலைமையில் வெறும் பேச்சுகள் கொஞ்சநாளையில் அர்த்தமற்ற வீணொலிகளாகவே மாறிவிடக்கூடும். விஷய ஞானம் பெறுவது அவசியமே, அவ்வளவில் இப்பேச்சுகள் நன்மை பயக்கலாம். ஆனல் "ஞானம்பார, கிரியாம், வினை" என்றதுபோல் செய்கையை மேற்கொள்ளாத ஞானம் வெறும் பாரமாகவே முடியும்.

யாழ்ப்பாணத்துக்கு ஸ்ரீமதி கமலாதேவி பிரசங்கம் செய்யும விஷயத்தில் கூட்டங்களை ஒழுங்குபடுத்தக்கூட மூந்திய ஆர்வமில்லாதுவிட்டதெனக் கேள்விபட்டோம். இது என்ன உண்மையைப் புலப்படுத்துமோ தெரியவில்லை. பேசாமல் கருமங்களைச் செய்வதும் கூடாது; கருமத்தைச் செய்யாமல் சும்மா பேசிக் கொண்டிருப்பதும் கூடாது.

இத்துடன் இவ்வாரக்கடிதத்தை முடிப்பாம்.

## சலிக்காத யுத்தவீரன்

### ஸ்ரீமான் வித்தல்பாய்படேல்

சென்ற திங்கட்கிழமை(29-3-37) சென்னையிலுள்ள இந்திய இளைஞா சங்க மண்டபத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் V. J. படேல் அவர்களின் உருவப்படம் கீர்த்தி வாய்ந்த காங்கிரஸ் வாதியாகும் ஸ்ரீமதி லீலாவதி மன்ஷி என்னும் பெண்மணியாற் திறந்து வைக்கப்பட்டது. அப்போது அவர் பேசியது பின்வருமாறு:—

"வடஇந்தியாவில் எத்தனை நாடு கடத்தப்பட்டவர்கள் உளர். சட்டத்தை மீறினதே அவர்கள் செய்த குற்றம். அவர்களுள் குஜராத் வாசிகள் இருவர் உளர். அவர்களை எவர் தான் அறியாதார். இரு வீரர்களாரும் வித்தல்பாய்படேல, வல்லாபாய் படேல ஆகும் இருவரும் பொதுசன உரிமையைப பாதுகாபபவர். இந்திய சட்டசபையின் தலைவராக வித்தல் பாய் படேல் டெல்லியில் இருந்த காலத்து உத்தியோக வர்க்கததினர் நடுக்குவது வழக்கம். உண்மையாக இவர்கள் அவரைக் கண்டு அச்சமடைவதுண்டு. இவர் மிக நுண்ணிய அறிவு வாய்நத விவேகி. இவர்பால் எப்படி நடந்துகொள்ளவேணடுமென அவர் அறியார். மறைந்து நின்று இவரைப்பற்றிக் குசுகுசுப்பர். இவரைப்பற்றிக் கதைகள் பரப்புவர். இவருடன் நட்புக்கொண்டாடி அளவளாவுவதில்லை. ஒருவருக்கும இவர் அஞ்சமாட்டார். தான செய்வது சரியோ பிழையோ வெனபதை நன்கறிவா. மற்றையோரின் குறைகளையும விரைவலறியும சக்தியுடையர். நேரத்துக்கிசைய நடக்கும் சாமர்த்தியம் வாய்நதவர். மற்றவர்களிற் குறைவாடவரெனத தம்மை ஒருபோதும் நினைப்பதில்லை. எதிரிகளை இலகுவில ஓடச் செய்யும் இயல்புடையர். இவர் போன்ற சட்டசபைத தலைவர்களிருந்தால் தேசாதிபதியின் விசேஷ அதிகாரங்களும் ஒன்றுஞ் செய்யமாட்டா."

## இலங்கையின் புதிய தளகர்த்தர்

இலங்கைப் படைகளுக்குப் புதிய தளகர்ததராக நியமிக்கபபட்டிருக்கும் கர்னல் ஒலிவர் தர்பர்ன் அடுத்த ஆகஸ்ட் 11-ல் பதவி ஏற்பார். அவருக்கு வயது 53 ஆகிறது.

அவர் 1903-ம் ஆண்டு டிசம்பர் 23-ல் ராயல் பீரங்கிப் படையில் உத்தியோகம் பெற்றார். மூன்று வருடங்களுக்குப் பின் அவர் லெப்டினெண்டு பதவி பெற்றார். 1914-ம் ஆண்டு அக்டோபர் 30-ல் அவர் காப்டனானார். 1933-ம் ஆண்டு ஜெனவரியில் லெபடினெண்டு கர்னல் உத்தியோகத்தைப் பெற்றார். அவர் எகிப்திலும் சூடானிலும் ராணுவ உத்தியோகம் பெற்றார். அவருக்கு மிலிட்ரி சிலுவையும் யுதத மெடல்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஒருவனுக்குத் திண்ணிய அறிவுடைய மனவெழுச்சியும் இல்லாதவர் மரங்களுக்கொப்பாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டொருவர் மில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

— அப்பர்சுவாமிகள்

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
தாது ஹு பங்குனிமீ ௨௨

# தமிழரும் அரசியற்றிருத்தங்களும்

இலங்கைத்தேசம், அரசியல் முறையில் மிக உன்னதநிலையை அடைந்து, தேசமக்கட்குப் பெருநன்மையை அளிக்கக்கூடிய காலம் எப்போது வருமென யாவரும் சிந்தித்துப் பெருமூச்சுவிட்டிருக்கும் இச்சமயத்தில், அதற்குப் பாதகத்தை உண்டுபண்ணக் கூடிய முயற்சிகளைச் சிலர் விடாப்பிடியாக நின்று செய்வது பன்மடங்காக வியாகுலத்தை அதிகரிப்பதாகும். இலங்கை அரசியல், பொதுமக்கள் கையில் வரும்வரையும் உண்மையான முன்னேற்றம் தொழிற்படாதென்பதை நன்கறிந்தும, சில அறிவிலிகள் சுயநலத்தால் உந்தப்பெற்றுப் பேரிடையூற்றினை வருவிக்க எத்தனிக்கின்றனர். இலங்கையில் வாழும் பல்வேறு வகுப்பினரும் தம்முள் ஒற்றுமையடைந்து நாடிய திருத்தங்களை இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியன என்பதை, நாம் ஒருபோதும் மறவாதிருத்தல் வேண்டும்.

சென்ற திங்கட்கிழமை, யாழ்ப்பாண நகரில், சில தமிழ்மக்கள் ஓர் சிறு கூட்டம் கூட்டி, அரசியற்றிட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களைப்பற்றி ஆலோசிப்பதற்கு ஒருமகாசபையை இம்மாதம் 10-மதிகதி கூட்ட முடிவு செய்துள்ளார். அக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட விருக்கும் விஷயங்களும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. விஷயங்களை நன்கு ஆழ்ந்து நோக்குமிடத்து, தமிழர், தாம் நினைத்த திருத்தங்களை வழங்கும்படி கேட்பதாகக் காணப்படுகிறது. இலங்கையில் கூடிய தொகையினராகும் சிங்களரிலிருந்து வேறுகப்பிரிந்து நின்று, தமிழர் விசேஷ உரிமைகளையும் சிலாக்கியங்களையும் அரசினரிடமிருந்து பெறலாமென்பதும், பின் அவைகளை நிலைபேறுகக் காப்பாற்றலாமென்பதும் சந்தேகத்துக்கிடமாகிறது. இலங்கை வாசிகளாகும் எங்களை, எப்போதும் கீழ்நிலையில் வைத்திருக்க வேண்டுமென்ற திடசித்தமுடைய பிறிட்டிஷாரிடமிருந்தா, நாம் உரிமைகளைப் பெறுவது? பெறினும் அது எப்படி நிலையானதாகும்? ஆகையால், நாம் உரிமைகளை நாடுதற்குமுன், வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டுவதே அவசியம். ஒற்றுமை கைகூடவே நமது எண்ணங்களும் இலகுவில் சித்திக்கும் அப்போது பெறும் உரிமைகளும் நமக்கு நிறைந்த நன்மைகளை உண்டாக்கி நிற்பனவாகும். இதுவே உண்மையாகும்.

ஆகையால், இப்போது மகாசபைகளைத் தமிழர்களாகிய நாம் கூட்டி, நமது குறைகளை எடுத்து அரசினர்க்குச் சமர்ப்பிப்பதிலும் பார்க்க, கூடிய தொகையினராம் சிங்களரோடும், மற்றைய வகுப்பினருடனும் ஒற்றுமையை நிலைநாட்டுதற்பொருட்டு, வேண்டிய எத்தனங்கள் செய்தற்கு வழிகளை நாட வேண்டும். இலங்கையரசியலில் வெவ்வேறு வகுப்பினர்க்கு எவ்வளவிற்கு உரிமையுளதாக வேண்டுமென்பதை முடிவுசெய்தற்கு, சர்வ கட்சியினரும் வகுப்பினரும் சேர்ந்து, ஒருவட்டமேசை மகாநாடு கூடி முடிவுசெய்தல் வேண்டும். இலங்கை வாசிகளாகும் நாம், இவ்விஷயத்தில் எமக்குள் முடிவுசெய்து சமரசத்தை அடையின், அரசினர் அதை எப்படி அங்கீகரியாதுவிடுவர்? எனவே, முதன் முதலாக வகுப்பு ஒற்றுமை நிலைநாட்டப்படின், பின் அரசியற்றிருத்தங்கள் பெறுவது கஷ்டமன்று. ஒற்றுமையாக இலங்கை வாசிகள் கோரிநிற்பின் பொறுப்பாட்சியை அரசினர் வழங்காதிருப்பது எப்படி? அதைவிட்டு ஒவ்வொரு வகுப்பினரும் பிரிந்து நின்று தத்தம் கோரிக்கைகளை அரசினர்க்குச் சமர்ப்பித்தலால் எய்தும் பயன் ஒன்றுமின்று. அரசினரும் பராமுகஞ்செய்வர்.

சிங்களரும் வகுப்பொற்றுமையை நாட்டிக்கொண்டே சுதந்திரங்களைப் பெற முயலல்வேண்டும். இவ்விஷயத்தை எல்லாவகுப்பினரும் நன்குணர வேண்டும். இப்போது அரசாங்கசபையில் தமிழ்ப் பிரதிநிதிகளாயுள்ளவர்பலர், இலங்கை வாசிகளின் ஒற்றுமைக்குப் பங்கஞ் செய்வதே தமது கடமையாகக்கருதுகின்றனர். வகுப்புத்துவேஷமின்றி இவர்கள் ஒரு வசனத்தானும் அரசாங்கசபையில் பேசுகின்றிலர். சிங்களப் பிரதிநிதிகள், மந்திரிகள் செய்வன பேசுவன யாவற்றிலும் - இவர்க்கு வகுப்புத் துவேஷமே தோற்றுகின்றது. இவ்வாறு நித்தியம் போர் நடந்துகொண்டிருக்கும் வரையும், நாம் உண்மையான உரிமைகளை அரசினரிடமிருந்து பெறுவதென்பது எப்படி? வகுப்புவாதத்தைக் கிளப்பித் துவேஷத்தை உண்டாக்கலாம். ஆனல் ஒற்றுமையை நாட்டுவதே கஷ்டமான காரியம்.

வகுப்பு வாதம், இந்தியாவில் செய்யும் கொடுமைகளைக்கண்டும் நம்மவர் இன்னும் புத்தி யெய்தப்பெருதது பெருந்துக்கமே. சிறுபான்மை வகுப்பினராகும் தமிழர்க்குப் பாதுகாப்பு வேண்டுமென நாம் பிறிட்டிஷாரைக் கேட்பது எவ்வளவு நகைப்புக் கிடமாகின்றது. இருவகுப்பினரும் தாம் தாம் ஒற்றுமையாகத் திட்டங்களை இயற்றின், அதனை அரசினர் அங்கீகரியாது விடுவாரா? இருவகுப்பினரும் பரஸ்பர நம்பிக்கையுடன் செய்துகொண்ட சமாதானத் திட்டங்களே எப்போதும் நீங்காத நன்மையைப் பயக்கக்கூடியன. அதைவிட்டு அரசினரை நமக்குரிமைகளை வழங்கும்படி கேட்பதாற் பெறும் பயன் யாது?

இலங்கைவாசிகள் ஒற்றுமையடையவேண்டும். அப்போதுதான் இலங்கைக்கு மீட்சியுண்டென வாதிக்கும் கொள்கையினர் சிலர், அரசாங்கசபையில் இருப்பது சிறு நம்பிக்கையைக் கொடுக்கின்றது. வகுப்புவாதத்தால் மிகவும் பீடிக்கப்பட்டோரால் ஈற்றில் பெருந்தீமையேயன்றி நன்மை ஒருபோதும் ஏற்படாது. தமிழர்கட்குள் மாத்திரமன்று, சிங்களத் தலைவர்களுட் சிலரும் கொழுத்த வகுப்பு வாதிகளாகக் காணப்படுகின்றனர். இவர்கள் இப்போது தமக்குக்கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு, மற்றைய வகுப்பினரை நசித்துவிட்டுத் தாம் முழுநன்மையையும் பெறலாமென எண்ணுகின்றனர். நமது அரசினர் நடுவில்நிற்கும்வரைக்கும் ஆர்ப்பாட்டங்களால் உபயோகம்யாதுமின்று? இன்று சிங்களரைத் தோளிற் தட்டிநிற்கும் அரசினர் நாளைக்குத் தமிழரின் இரட்சகராக நடித்து, சிங்களரின் ஆதிகத்துக்கு இடையூறு விளைவிக்கலாம். ஆகையால், எல்லா வகுப்பினரும் - பிரதானமாகத் தமிழரும் சிங்களரும்ஒருமித்து நின்று, சுதந்திரங்களைக் கேட்கும் வரையும் உண்மையான முன்னேற்றம் ஒருபோதும் நமது நாட்டிற்கு இல்லையென்றே கூறுவாம்.

தமிழர்கள் தமது சாகியத்தவரின் விருத்தியை நாட்ட மகாசபைகளைக்கூட்டி, நடபடிக்கைகளைக் கையாள்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை. கல்வி, நாகரிகம், பழக்க வழக்கம் என்பனவற்றின் விருத்தி நாடித் தமிழர் தொண்டாற்றுவது ஏற்றதே. ஆனல் பிரத்தியேகமாக நின்று, அரசியலில் சிலாக்கியங்கள் பெறமுயல்வதையே நாம் ஆட்சேபிக்கின்றும்.

விஷயமிவ்வாருகவே, இப்போது தமிழ் வகுப்பினர் செய்யவேண்டியது யாதென்பதும் நன்கு பெறப்படுகின்றது. மற்றைய வகுப்பினருடன் (பிரதானமாகச் சிங்களர்) சமாதானத்தை நாட்டுதற்கு ஏற்ற வழிகளைத் தேடி நிற்பதே அவசியம் வேண்டற்பாலது. அது சித்தியடையின்; பின் பெறவியாலாதது தான் யாது? அதைவிட்டுக் காலத்துக்குக் காலம் மனுப்பத்திரங்களை அரசினர்க்குச் சமர்ப்பிப்பதால் ஒரு நன்மையும் ஏற்படாது. தமிழர்களாகும் நாம், இவ்விஷயத்தை இலக்காகக் கொள்ளுதல் தேசநன்மைக்கும் மிக அவசியமாகும். இப்போது மூன்று கட்சிகள் உண்டு. அரசினர், சிங்களர், தமிழர். இம்மூன்று கட்சியும் நீங்கி அரசினர், இலங்கை வாசிகள் என்ற இருகட்சிகள் மாத்திரம் ஏற்படுவதற்கு முயலல் வேண்டும். வகுப்புவாதத்தை ஒழித்து, ஒற்றுமையை நாம் அடையாது அரசியற்றிருத்தங்கள் வேண்டுமெனல், களவாடிய வெண்ணெயைத் தமக்குள் பகிர்ந்து அருந்தாது, மத்தியட்சத்தைநாடிக் குரங்கினை யடைந்த பூனைகட்குச் சமமாவோம் என்பதையே ஒக்குமல்லவா? நம்தலைவர்கள் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டி ஏற்றவழியில் தொண்டாற்றின் நன்மை ஏற்படாதிருக்குமா?

## ஸ்ரீமதி கமலாதேவி

இந்திய மாதாவின் விடுதலையை நாடி இடைவிடாத் தொண்டாற்றி நிற்கும் ஸ்ரீமதி கமலாதேவி, தற்போது கொழும்பு நகரில் வந்து அநேக சொற்பொழிவுகள் நடத்துகின்றனர். தேசாபிமானமும், துணிவும் வாய்ந்தபெற்ற இம்மாதுசிரோமணியை அறியாதாரில்லையெனலாம். முன்னரும் இலங்கைக்கு வந்து அரசியல் விஷயமாகச் சிறந்த சொற்பொழிவுகள் செய்து தேசீய உணர்ச்சியை நம்மவர்க்கு ஊட்டிவைத்த பெருமை இவர்க்கு உண்டு. காங்கிரஸ் சமதர்மக் கட்சியில் சேர்ந்து இம்மாது செய்துவரும் தொண்டு பெரிதும் மெச்சப்படவேண்டியதே. தொழிலாளர் நிலை பெரிதும் முன்னேற்றமடைய வேண்டுமென்பதும், நாட்டின் பொருளாதாரநிலை உறுதியடையவேண்டுமென்பதும் சமதர்மக் கட்சியினரின் பிரதம கொள்கைகளாகும். சமதர்மக் கட்சியினர் சில தேசங்களில் கையாளும் முறைகளும், கொள்கைளும் அங்கீகரிக்கப்படக் கூடியனவன்று. நம்நாட்டின் நிலைக்கும், நாகரீகம் பழக்கவழக்கத்திற்கு மியைய சமதர்மம் ஏற்படுவதை எவரும் ஆட்சேபிக்கார். யாழ்ப்பாணத்திற்கும் ஸ்ரீமதி கமலாதேவி வருவாரெனக் கூறப்படுகிறது. நாமும் அவரை அன்புடன் வரவேற்கின்றோம். சுதந்திரப் போரில் அனுபவம் வாய்ந்த அரசியல் வாதிகளுடன் நேரே பழகுவதாலும் அவர்கள் சொற்பொழிவுகளையும் அனுபவங்களையும் அறிவதாலும் தேசீய உணர்ச்சி நம்நாட்டில் நிலைபெற்று விருத்தியடையுமென்பதே எமது அபிப்பிராயமாகும். இத்தேசாபிமானியாகும் பெண்மணிக்கு எமது வந்தனம் உரித்தாகுக.

# இந்தியச்செய்திகள்.

## இந்தியா எங்கணும் துக்கமயம்

சென்ற வியாழக்கிழமை புதிய அரசியற்றிட்டம் அனுட்டானத்துக்கு வந்த தினமாகும். அத்திட்டம் சிறிதும் உதவாதெனக் காங்கிரஸ் கட்சியினரும் மற்றைய தேசீயவாதிகளும் ஒதுக்கினர். அனுட்டானத்துக்குவந்த அத்தினம் ஒரு துக்க தினமாக இந்தியா எங்கணும் கருதப்பட்டது. எங்கு பார்த்தாலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தனவாம். இந்தியர் யாதொரு தொழிலும் நடத்தாது துக்கங் கொண்டாடினர். வியாபார ஸ்தலங்கள் மூடப்படலாயின. கடைகள் வித்தியாசாலைகளும் மூடப்பட்டன. பொதுக் கூட்டங்கள் கூட்டிப் புதிய அரசியற்றிட்டம் தலைவர்களால் கண்டிக்கப்பட்டது. இந்தியச் சட்டசபையின் கூட்டத்துக்குக் காங்கிரஸ் அங்கத்தவர்கள் சமுகமளிக்கவில்லை. சந்தைகளும் வேலைத்தலங்களும் ஒருவருமற்ற தனியிடமாகக் காணப்பட்டன. விடுதிச்சாலைகள், போசனசாலைகள் அமைதியாக விருந்தன. பல இடங்களில் இந்துக்களும் மகமதியரும் சேர்ந்து கொண்டாடினர். இவ்வேலை நிறுத்தம் காரணமாக எவ்விடத்திலேனும் சண்டை சச்சரவு ஏற்ப[illegible]வில்லை யென்பது நல்ல புதின[illegible]. கறுப்புக்கொடிகளுடன் காங்கிர[illegible] தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்[illegible] புதிய திட்டத்தில் தமக்குள்ள வெறுப்பை வெளியாகக் காட்டினர்.

## எவ்வளவு அநீதி

இம்மாதம் முதற்றிகதியுடன் பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டாயிற்று. பர்மா ஓர் தேசாதிபதியின் கீழ் அரசு புரியப்படும். தேசாளுமன்றத்தின் நேர் மேற்பார்வையிலிருக்கும். ஆனல் தற்போதைப பர்மா அரசினர் சமீபத்தில் கைக்கொள்ளும் அரசியல்முறைகள் மிகவும் பிற்போக்கானவைகளாகக் காணப்படுகின்றன. இதுவரையும் இந்தியாவிற்கும் பர்மாவுக்குமிடையில் தபாற்கட்டணம் ஒரு அணுவாக விருந்தது. இப்போது இக்கட்டணம் இரண்டரை அணுவாக உயர்த்தப்பட்டது. மேலும் இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு இரண்டணு தபாற்செலவில் அனுப்பப்பட்டு வந்த பார்ஸலுக்கு இனி ஒன்றே கால்ரூபா கட்டணமாகும். இவைகளை விடத் தந்திக்கட்டணமும் உயர்த்தப்பட்டது. இவ்விதமான முறைகளைக் கைக்கொண்டு இருநாட்டவர்க்கிடையிலுமுள்ள சம்பந்தத்தை அரசினர் முற்றுகத் தொலைக்கப்பார்க்கின்றனர். இவ்வாறு கட்டணங்கள் உயர்த்தப்பட்டதைக் கண்டு வியாபார சமுதாயத்தவர் பெரும் ஆத்திரமடைந்து அரசினர்க்கு விண்ணப்பஞ் செய்துள்ளார். இந்திய அரசினர் இவ்விஷயத்தில் பொதுசன அபிப்பிராயத்தையே சார்ந்துள்ளார். பர்மாவிலும் பொதுமக்கள் இதை அங்கீகரிக்கவில்லை. விஷயமிவ்வாருக இப்பிணக்குகள் யாவர் திருவிளையாடல்களோ? கட்டணங்கள் வேண்டுமாயின் சிறிதுசிறிதாக உயர்த்தப்படலாம். இருந்தாப்போல் தூக்கியடிப்பின் பெருநட்டம் ஏற்படுமே. பர்மா அரசினர் இவ்விஷயத்தை பொதுசன அபிப்பிராயத்தை நாடிச் சீர்ப்படுத்துவாராக.

குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னு, மாசூர மாய்ந்து கெடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய மலாய்நாட்டுப் பிரதம தபால் நிலையத் தலைமை அதிபர்

திரு. T.N. அப்பாத்துரை அவர்கள்.

ஐக்கிய மலாய் நாட்டுத் தபால் நிலையங்களில் தலைவராகவும், தபால் பகுதிக் கணக்குப் பரிசோதனைத் தலைவ (Accountant)ராகவும், குவாலலம்பூரில் பிரதம தபால்நிலையத் தலைமை அதிபராகவும் 29 வருடம் யாவர் மதிப்பும் பெற்று உத்தியோகத்திலமர்ந்திருந்த யாழ்ப்பாணம் மல்லாக வாசர் திரு. T. N. அப்பாத்துரையவர்கள் தற்போது இளைப்பாறி உபகாரச் சம்பளம் பெற்றுத் தமது சுயதேசம் வந்திருப்பதை யறிந்து உவகை யடைந்தோம்.

இவர் உத்தியோகத்திலமர்ந்திருந்த காலத்தில் மலேயாவிலுள்ள பற்பல சங்கங்களிலும் அங்கத்தவராகவும், தலைவராகவும், உபதலைவராகவும், காரியதரிசியாகவும் கௌரவ கடமைகளைச் செவ்வனே செலுத்தியுள்ளார். இவரது குணாதிசயங்களையும் உத்தியோகத்திறன்களையும் ஐக்கிய மலாய்நாட்டில் அறியாதார் ஒருவருமில்லையென்று கூறுதல் மிகையாது. இவர் இளைப்பாறும் வேளையில் தபால் நிலையத்தலைவர்களும் மற்றையோர்களும் இவருக்கு வெவ்வேறிடங்களில் செய்துள்ள பிரியாவிடை உபசாரணைகளும், நன்றியறிதற் பத்திரங்களும், பத்திரிகைகளில் காணப்பெற்ற குறிப்புரைகளும் இவர் அங்கிருந்து பெற்றிருந்த மரியாதைக்கும் மதிப்புக்கும் போதிய சான்றாகும்.

இவர் தமது சுயநாட்டிலிருந்து தேச அபிவிருத்திச் சனசமுதாய முன்னேற்றத்தின் பொருட்டுத் தொண்டாற்றிப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

## "ஈழகேசரி" அறிக்கை

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு அடுத்தகிழமை (11-4-37) வெளிவர வேண்டிய 'ஈழகேசரி' வெளிவராதென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அதிபர், ஈழகேசரி

## கௌரவ V. S. ஸ்ரீநிவாச சாஸ்திரியார் என்ன கூறுகிறார்?

காங்கிரஸ் கட்சியினர் கேள்விக்குத் தேசாதிபதி இணங்காமையைக் குறித்து மிதவாதக் கட்சித் தலைவருள் ஒருவராகும் ஸ்ரீமான் V. S. ஸ்ரீநிவாச சாஸ்திரியார் கூறுவது இங்கு நோக்குந்தரத்து. கூடியதொகையினராகும் காங்கிரஸ் கட்சியினர் அபிப்பிராயத்தைத் தேசாதிபதிகள் பொருட்படுத்தாததுபற்றித் துயரடைந்துள்ளார். இந்திய மந்திரியார் இவ்விஷயத்தில் கையாண்ட முறை முற்றாகப் பிழையென்றும், ஒவ்வொரு மாகாணத்தின் நிலைமைக்கிசைய அவ்வூர்த் தேசாதிபதிகள் காங்கிரஸ் தலைவர்களுடன் பேசிச் சமாதானத்தை யடைய அவர் இடங் கொடுத்திருக்கவேண்டுமென்றுங் கூறினர். அரசினர் இவ்வாறாகக் கூடிய தொகையினரை அமத்தினால் வருவிக்கும் தீமைகளுக்கும் இம்மாத்திரமன்று எனக் கூறினர். கூடியகட்சியினராகும் காங்கிரஸ்கட்சியினர் விலகிநிற்க, சிறுகட்சியினர் பதவிகளை விரும்புவது எப்படியிருக்கின்றதெனின், இன்னொருவரின் பழைய உடுப்பினைக் களவாடி அணிவதற்கு ஒப்பாகும். இதனால் ஈற்றில் அவமரியாதையும் தண்டனையுமே கிடைக்கும். மேலும் மூன்றாவது வட்டமேசைக் கூட்டத்தின் பின் பிரிட்டிஷ் அரசினர் இந்திய விஷயமாக செய்துவரும் பிழைகட்கோரளவில்லை யென்றனர் சாஸ்திரியார். பிரிட்டிஷார் அயர்லாந்து விஷயத்தில் கற்றுக்கொண்ட படிப்பனைகள் யாவும் வீணாயின. பிரிட்டிஷார் கையாளும் முறையின் தீமைகள் யாவை யென்பது அடுத்து விரைவில் வரவிருக்கும் உலகமகாயுத்தம் காட்டும். எவ்வளவுக்கு இந்தியரின் அரசவிசுவாசம் பங்கமடைந்துள தென்பதைப் பிரிட்டிஷார் அறியவருவர்.

# இந்தியாவில் புதிய அரசியற்றிட்டம்

இம்மாத ஆரம்பத்துடன் புதிய அரசியற்றிட்டம் அனுட்டானத்துக்கு வந்தது. மாகாணச் சுயாட்சி அரசியல் ஏற்படுமாம். ஆறுமாகாணங்களிற் கூடிய தொகையினராம் காங்கிரஸ்கட்சியினர் மந்திரி முதலிய பதவிகளை ஏற்க மறுத்துவிட்டனர். இம்மாகாணங்களிற் தேசாதிபதிகள் இதுவரையும் தமக்குச் சார்பாக நின்ற சுயநலப்புலிகளை அழைத்து மந்திரிசபைகளை ஏற்படுத்தும்படி கேட்டனர். அவ்வாறே மந்திரிசபைகள் அமைக்கப்படலாயின. *

பொறுப்பாட்சி அரசியல் என்றால் என்ன? மந்திரிகள் பொறுப்பில் அரசியல் விடப்படுவதே. மந்திரிகள் மாகாணத் தேசாளுமன்றங்கட்கே பொறுப்புடையர். இப்போது தேசாதிபதியால் சிருட்டிக்கப்பட்ட மந்திரிசபையினர் எத்தனை நாட்களுக்கு வேலை பார்ப்பது? தேசாளுமன்றத்தினரால் தமக்கு மந்திரிகள் மாட்டு நம்பிக்கையில்லையென ஓர் தீர்மானம் நிறைவேற்றப்படின் அவர்கள் பதவிகளை விடவேண்டியதே. பின் யாது சம்பவிக்கும்? தேசாதிபதியே அரசியலை நடாத்துவர். தமக்குப் பிரியமான உத்தியோகத்தரை நியமித்து அரசியல் யந்திரத்தை நகரச்செய்வர். இந்தியாவுக்கு மாகாணச் சுயாட்சியைத் தாம் வழங்கிவிட்டதாக உலகத்தவர்க்குப் பறைசாற்றி நின்ற பிரிட்டிஷாரின் உண்மை நிலை இப்போது யாவரும் அறிந்துவிட்டனர். பேஷ்! பேஷ்!!

* * *

மந்திரிப் பதவிகளைக் காங்கிரஸ் கட்சியினர் வகிக்காதுவிடினும், மாகாணத் தேசாளுமன்றங்களின் தலைவர் (Speaker) பதவியையாவது காங்கிரஸ் கட்சியினர் வகித்தல் நிற்பது உசிதமென ஸ்ரீமான் சத்தியமூர்த்தி டெல்லியிலிருந்து செய்தி அனுப்புகிறார். அப்பதவியிலிருந்து புதிய திட்டத்தைத் தகர்க்கலாமென்றும் அரசினரின் அக்கிரமங்களைத் தடுக்கலாமென்றும் சத்தியமூர்த்தி கருதுகின்றார். *

கூடிய தொகையினராகும் காங்கிரஸ் சபையினரின் சம்மதமின்றித் தேசாதிபதிகளால் சிருட்டிக்கப்பட்ட சபையை மந்திரிசபையெனச் சொல்வது நகைப்புக்கிடமாகிறது. தேசாளுமன்றத்தில் தாம் மந்திரிகள் என்று இவர்கள் நடிக்க யார் இடங்கொடுப்பர்? ஒரு நிமிடத்துக்குத்தானும் இவர்மீது நம்பிக்கை ஏற்படாது. எனவே புதிய திட்டத்தைக் காங்கிரஸ் கட்சியினர் உடைத்தெறியுமுன் தேசாதிபதிகள் தாமே தகர்த்துவிட்டனர். கூட்டங்கள் கூடிப் புதிய திட்டத்தைக் கண்டிக்க வேண்டியதில்லை. புதிய திட்டத்தின் பிரயோசனமின்மை தேசாதிபதிகளால் நன்கு காட்டப்பட்டதாகும். * *

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் பத்திரிகைகள் மகாத்மாகாந்தியின் நியவிவேகமே எல்லாச் சங்கடத்தையும் கொண்டுவந்ததென அவரை வாய்க்குவந்தவாறு திட்டுகின்றன. மகாத்மா வெளியிட்ட அறிக்கையை நன்கு வாசித்து விளங்கியிருப்பின் அவ்வாறு சொல்லத் துணிவார்? மந்திரிப்பதவியை ஏற்றுத் தமக்கு நன்மைகளைச் செய்யக் காங்கிரஸ் கட்சியினர் தவறியதால் இனிக் காங்கிரஸ் கட்சிக்கு ஆதிக்கம் நாட்டவர்பால் இல்லாமற் போய்விடுமெனவும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் சந்தோஷங் கொண்டாடுகின்றன. இவ்வாறு இப்பத்திரிகைகள் எண்ணியே பன்முறை அவம்போயின. காங்கிரஸ் தலைவர் இந்தியாவின் பெரிய நன்மையை நாடி உழைப்பவரென்றும் அவர்கள் செய்வன நாட்டிற்கு இன்றியமையாதனவென்றும் இந்தியப் பொதுமக்கள் அறிவாரென்பதை இப்பத்திரிகைகட்கு விளங்கவில்லைப்போலும். காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்படுமென்று பிரிட்டிஷார் நம்புவதும் வீணேயாகும். * *

புதிய திட்டம் காங்கிரஸ் கட்சியினர் விருப்பப்படி நடத்தப்பட இடங்கொடுக்கப்படாவிடின் விரைவில் இந்தியாவில் சமதர்மக் கொள்கை (Socialism) பாம்பிப் பெருநட்டத்தை யாவர்க்கும் இழைக்குமென்பது தாராள நோக்குடைய சில பிரிட்டிஷாரின் கருத்தாகும். காங்கிரஸ் கட்சியினர் கேட்டதாகும் உறுதி மொழியைக் கூறுதற்கு இருந்த தடைதான் யாதென சில பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் பிரமையடைகின்றனர்.

இந்தியர்மாட்டு உண்மையான அனுதாபங் காட்டி நிற்கும் 'மான்செஸ்டர் காடியன்'' பத்திரிகை இவ்விஷயமாகக் கூறும் அபிப்பிராயமும் எளிதில் புறக்கணிக்கத் தக்கதன்று. "இந்தியா பழைய நிலையில் இருக்கின்றது. எதைச் சொன்னாலும் கேட்கும். எத்திட்டமும் அங்குள்ளோரால் அங்கீகரிக்கப்படு"மென பிரிட்டிஷார் எண்ணின் அவர் நம்பி மோசம் அடைவர் என மேற்படி பத்திரிகை கூறுகின்றது. மேலும் வங்காள அரசினர் இச்சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் தலைவர்களைச் சிறைப்படுத்துவதால் இந்தியாவில் அமைதியின்மையும் அதிருப்தியும் அதிகரிக்குமென்பது இப்பத்திரிகையின் அபிப்பிராயமாகும். *

பிரிட்டிஷார் இந்தியாவை ஏகாதிபத்தியத்தன் வைத்துக்கொள்ள விரும்பின் சிறிதுசிறிதாகவாவது பொறுப்புரிமையை பிரிட்டிஷ் அரசினர் இந்தியர்க்கு அளிக்க உடன்படவேண்டுமென்பது "காடியன்" பத்திரிகையின் அபிப்பிராயமாகும். * *

பிரிட்டிஷார் இந்திய ஏழைகள் எப்போதும் வறுமையில் வாழவேண்டுமென எண்ணின், பண்டிதர் ஜவஹர்லால்நேரு என்ன எண்ணுகிறார்? சமுதாய வாழ்க்கை முறையிலும், பொருளாதார நிலைமையிலும் பெரிய புரட்சி ஏற்படவேண்டுமென்பது அவர் அபிப்பிராயம். அரசினர் காங்கிரஸ் கட்சியினர் அதிகாரத்தைப் பெறாது தடைசெய்வதால் நட்டமேயன்றி நயமில்லையென்பது 'மான்செஸ்டர் காடியன்'' பத்திரிகையின் திடமான அபிப்பிராயமாகும்.

## மருத்துவப்பெண் தேவை!

மயிலிட்டிக் கிராமசங்கத்திற்கு ஒரு மருத்துவப்பெண் தேவை! விருமபினோர் 30-4-37க்கு முன் எமக்கு விண்ணப்பஞ் செய்க. மற்றும் விபரங்கள் எமது கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

சி. சுவாமிநாதன்,
தலைவர்,
மயிலிட்டிக் கிராமசங்கம், 1-4-37


## உஷ்ணப் பிரதேசங்களில் சூரிய வெப்பம் சரும அழகைக் குன்றச் செய்கிறது

### அதற்காகச் செய்யக்கூடிய பரிகாரம் என்ன?

1. பூவைப்போல் மெல்லிய தன்மை வாய்ந்த உங்கள் சருமத்தில் உஷ்ணப் பிரதேசங்களில் சூரியனின் வெப்பம் அதிகமாகப் படுவதினால் அழகைக் குன்றச் செய்கிறது. இதனால் சருமத்திலுள்ள இயற்கை எண்ணெய்ச்சத்து வற்றிப் பளபளப்புமாறி வரட்சியும் சுருக்குகளும் ஏற்படுகின்றன.

→ஆகையினால்←

உங்கள் சருமம் என்றும் பளபளப்பாகவும் இளமையாகவுமிருக்க முதல்தரமான ஒலிவ் ஈச்சமர எண்ணெய்களைக்கொண்டு தயாரிக்கப்படும்

**பாமொலிவ்** சோப்பையே உபயோகியுங்கள்

2. ஒலிவ், ஈச்சு, தென்னை முதலிய மரங்களிலிருந்து தயாரிக்கப்படும் சோப். இயற்கை மரங்களிலிருந்து எடுக்கப்படும் ஐந்து முதல்தரமான எண்ணெய்களைக் கொண்டு 'பாமொலிவ்' சோப் தயாரிக்கப்படுகிறது.




இது:
மிருகக் கொழுப்புக் கலப்பற்றது
தாவர எண்ணெய் பாவிக்கப்பெற்றது.
நீடித்தபாவிப்பும் நன்றாய் நுரைக்குந்தன்மையும் உடையது.
சருமத்திற்குக் குளிர்ச்சியைக்கொடுப்பது
உஷ்ணப்பிரதேசங்களுக்கு மிகவுமேற்றது

3. ஒவ்வொரு காலையிலும் இரவிலும், **பாமொலிவ்** சோப்பின் நுரையை உங்கள் முகத்திலும், கழுத்திலும், தோள்களிலும் நன்றாய்த் தடவி சருமத் துவாரங்களை அடைத்திருக்கும் அழுக்குகளைச் சுத்தஞ்செய்து உள்ளே ஊடுருவிச் செல்ல விடுங்கள். பின் லேசாக உலரவிடுங்கள். பிறகு உங்கள் சருமம் எவ்வளவு மிருதுவாகவும், அழகாகவும் இருக்கிறதென்பதைக் கவனியுங்கள்.

4. பாமொலிவ் சோப் உங்கள் ஸ்நானத்தின்போது உபயோகிக்கத்தகுந்த சோப்
உடல் முழுவதும் எப்போதும் பரிமளித்துக்கொண்டே இருக்கும்
இன்றைக்கே ஒரு கட்டி வாங்குங்கள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலம்பகம்.

டிக்கோயா போர்ட்டைஸ் தோட்டத்தைச் சேர்ந்த ஓர் தொழிலாளியின் 8 வயதுப் புதல்வன் சென்ற மாதம் 26-ந் திகதி பெய்த பெருமழை காரணமாக ஓர் ஓடையில் ஏற்பட்ட நீரோட்டத்தினுல் இழுத்துச் செல்லப்பட்டானும்.

o o o

வதுளையிலுள்ள ஒருவர் இன்னெருவர் வீட்டில் கன்னக்கோல் வைத்ததாக வதுளைப் பெரிய கோட்டில் தொடரப்பட்ட ஓர் வழக்கில் 4 வருடக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டார். இத்தீர்ப்பை நீதிபதி கூறியதும் எதிரி, பக்கத்தேயிருந்த ஓர் நாற்காலியை எடுத்து வழக்கை நடாத்திய முடிக்குரிய பிறக்றர்மீது வீசியதுமன்றி அவதூருகவும் பேசினுனும். o o

பலப்பிட்டியில் வாணவெடி செய்வதற்காகச் சில மருந்துகள் தயாரித்துக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக ஒருவன் கொல்லப்பட்டான், மூவர் காயமடைந்தனர். வெடியின் வேகத்தால் இறந்தவனின் உடல் 26 அடி தூரத்திலும் ஒரு கை 120 அடி தூரத்துக்கப்பாலும் வீசப்பட்டிருந்தனவாம். o o

கண்டியில் மனுக்கள் எழுதிக்கொடுத்துச் சீவனஞ் செய்துவந்த ஒருவர் தன்னைத் தொழிலாளர் பகுதிக் காரியாலயத்திலுள்ள எழுத்தாளனென்பதாகக் கூறி குருவலைத்தோட்டத் தலைமைக் கங்காணியை ஏமாற்றியதாகத் தொடரப்பட்ட வழக்கில் 150 ரூபா அபராதமும் தவறினுல் இரணடுமாதக் கடுங்காவற்றண்டனையும் விதிக்கப்பட்டார்.

o o o

லாகூருக்கருகிலுள்ள மொகல புரத்தில், ஒருவனுக்குப் பேய்பிடித்திருப்பதாக அவைசசாந்தக்காரர் எண்ணி, அதற்கு ஒரு மந்தரவாதியின் ஆதரவைத் தேடினர். மந்திரவாதி ஓர் தனி அறையில் பேய்பிடித்தவனுடன் தானிருந்து கொண்டு அறையைப் பூட்டிவிட்டு மந்திரத்தைச் செபித்துக்கொண்டிருக்கும்போது பேய்பிடித்தவன் மாந்தரீகனமேற் பாய்ந்து அவனைக் கடித்துக் கிழித்துக் கொன்றுவிட்டானும். o o

ஹேனஸ்பார்க்கில் ஏற்பட்ட ஓர்சுரங்க விபத்துக் காரணமாக ஒரு ஐரோபபியரும் 34 சுதேசிகளும கொல்லப்பட்டனராம்.

o o o

பாஹல காகமுனுவைச்சேர்ந்த டொனமஹன்றி அலெக்சாணடர் சுபசிஙக என்பவா கடவதனைதப் பொலிஸ் குணவர்த்தன என்பவருககுக் காயம் வருவிததததாக வும, தனது மனைவிககு அவமானம உண்டாககும் நோக்கத்துடன அவனது தலைமயிரை வெட்டியதாகவும் தொடரபபட்ட வழககில் முதற குறறசசாட்டிற்கு 50 ரூபா அபராதமும், தவறினுல் ஒரு மாதச் சிறையும் விதிக்கபபட்டாா. இரண்டாவது வழககுத தீாப்பு 5-ந் தேதிக்குத் தவணையிடப்பட்டது. o o

லிவாப்பூரிலேயுள்ள ஓர் ஹோட்டலில் ஓர் பெண் சாபபிட்டுக்கொணடிருக்கும் போது மூட்டைப்பூச்சி ஒன்று கடிதது விட்டதாம. அதற்காக அப்பெண் ஹோட்டற்காரனமீது நஷ்ட ஈட்டுவழககுத தொடாந்துவிட்டது. நீதிபதி அந்த மூட்டைப் பூச்சி இருந்ததற்குச் சாட்சி எவருமில்லையென்றும அங்குவேறு மூட்டைபபூச்சிகள் காணப்படவில்லையென்றும கூறி வழக்கைத் தள்ளிவிட்டாராம. o o

நியூசிலாந்தில் 300 வயதுடைய மூக்கண்படைத்த மிருகமொன்று இருக்கிறதாம். அதன நீளம இரண்டு அடியாகும். அதன மூனறு கண்களில் ஒன்று பார்வையிலலாததாகவும், அம்மிருகததின முதுகின ஆமைககு இருபபதுபோல ஓடுகள் இருக்கின்றவாம. o o

உலகததிலேயுள்ள மரங்களிலெல்லாம் மிக உயாந்ததாக யூகலிப்டஸ் என்னும மரம் ஆஸ்திரேலியா தேசததிலுள்ள பள்ளததாககிலே யிருக்கின்றதாம. அதனுயரம 301-அடி 6-அங்குலம் o o

ஓா கப்பலை ஆதரவற்றதாக விட்டுச் சென்றதாக பாரணை வீட்மவுத என்னும் கபபலைசசேர்ந்த 3 வெள்ளைக்காரா்மீது தொடரப்பட்ட வழககில தனித்தனி 6 நாட் கடுங்காவற்றணடனை விதிக்கப்பட்டதாம.

o o o

மெக்சிகோவிலுள்ள "கோலிமா" என்ற ஒரு எரிமலையிலிருந்து ஐஸ் கக்கப்படுகின்றதாம். சில சமயஙகளில் பனிக் கட்டிகளும் வந்து விழுகின்றனவாம்.

# இந்துக்களும் இந்துமதமும்.

(நீர்கொழும்பு, திரு. W. S. சார்லீஸ் பேர்ணண்டோ)

(முற்றெடர்)

தாழ்த்தப்பட்டவர்களின் ஆலயப்பிரவேசத்திற்குத் தடையுத்தரவு பிறப்பித்திருக்கும் ஜாதிஇந்துக்களே! சிவாலயவழிபாடு ஜாதிமுறை கடவாது நடத்தவேண்டுமோவெனில் அவ்வாறு இந்துமதத்தில் எந்த இடத்திலாவது சொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவில்லையே. பாருங்கள் இந்துசகோதரர்களே! புலையர் குலத்தில் பிறந்த நந்தனர், சிதம்பரஞ் சென்றிருந்தபொழுது ஆலயத்துட் சென்று கடவுளை வணங்கமுடியாமையினுல் மனம் வருந்தி, நகர்ப்புறத்தே சென்று துயிலுகையில், ஆண்டவன் நந்தனுக்குத் தரிசனை கொடுத்து, "ஏ, நந்தா! நீ நாளை அக்கினியில் மூழ்கி ஆலயத்துள் வந்து என்னைத் தரிசிப்பாயென்க" நந்தனும் அப்படியே செய்து உய்தார் எனவும் இந்துமதங் கூறுகின்றதே. ஆனுல் ஆண்டவன் நந்தனை அக்கினியில் மூழ்கச் சொன்னதின் நோக்கம் விறகும் விளக்கெண்ணையும் கொண்டு தீ மூட்டித் தீக்குழிக்கச் சொன்னதல்ல. தேவசிநேக அக்கினியில் மூழ்கி ஆலயத்துள் வந்து என்னைத் தரிசிப்பா யென்பதேயாகும். அடுத்தபடியாகப் பஞ்சமகுலத்தினராகிய திருப்பாணுழ்வார் என்பவர், புனிதமான காவேரி நதியை மிதிக்க முடியாதென்றெண்ணி அக்கதிக்கரையின் தென்றிசையின் நின்று, வீணையுங் கையுமாகத் திருவரங்கப் பெருமானைத் துதிக்க, திருவரங்கப் பெருமாள், பாணுழ்வார்மீது மனதிரங்கி லோகசாரங்கமுனீந்திரரைப் பார்த்து நாளை நீ திருபாணுழ்வாரை உனது தோழ்மீதேற்றி எனதண்டை கொண்டுவருவாயெனக் கற்பிக்க லோக சாரங்கமுனீந்திரன் திருப்பாணுழ்வாரைக் கண்டு நமஸ்காரஞ்செய்து தான் வந்தகாரியத்தைப்பற்றிச் சொல்ல, திருப்பாணுழ்வார் தனது இழிகுலப் பிறப்பால், திருவரங்கப்பெருமானை அணுக இசைந்திலராயினும் லோகசாரங்கமுனீந்திரன் பலவந்த பாணுழ்வாரை திருவரங்கப் பெருமாளின் முன்னிலையில் கொண்டுவர பாணுழ்வார் அரங்கப் பெருமாளின் மங்கள விக்கிரகத்தைத் தரிசித்து ஆனந்தத்தால் பரவசமடைந்தாரென்றும் சரித்திரங்கள் இன்றைக்கு நின்றுகூறுகின்றதே.

சமதர்மத்தைப் போதிக்கும், இந்துமதத்தைத் தழுவும் இந்து சகோதரர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆண்டவனே தரிசனை கொடுத்து ஆலயப்பிரவேச உரிமை அளித்திருக்க, ஜாதி இந்துக்களாகிய நீங்களோவெனில் தாழ்த்தப்பட்டவர்களின், ஆலயப்பிரவேச உரிமைக்குத் தடையுத்தரவு பிறப்பித்திருப்பது நீதியா? தர்மமா? முறையா? அல்லது இந்துமத முன்னேற்றத்திற்கு வழியா என்பதை நீங்களே சொல்லுங்கள்.

வாசகநேயர்களே பிறன் உனக்கு எதைச்செய்யவேண்டுமென்று நீ விரும்புகிருயோ, அதை நீ பிறனுக்குச் செய். பிறன் உனக்கு எதைச் செய்ய வேண்டாமென்று நீ விரும்புகிருயோ, நீ அதைப் பிறனுக்குச் செய்யாதிரு, என்று இந்து மதமும, எந்த மதமுங் கூறுகின்றது. ஆனுல், நீங்கள் உங்களினது நன்மைகளுக்கு மாத்திரம் பாடுபட்டுத்திரிகிறீர்கள். பிறனுடைய நன்மைக்காக ஏதும் செய்வதாகத் தெரியவில்லை. பாருங்கள் ஐயா, அந்நிய அரசாங்கத்தார் நமக்கிட்டிருக்கும் அடிமை விலங்கை உடைப்பதற்காக படாத பாடெல்லாம் படுகிறீர்கள். ஆனுல் ஜாதி இந்துக்களாகிய நீங்கள் தாழ்த்தப்பட்டவர்களின் கால்களிலும், கரங்களிலும் விலங்கிட்டிருக்கிறீர்கள். அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் ஜாதி இந்துக்களின் கோயில்கட்கு வரவுந் தொழவும் படாதென்று சட்டம் பிறப்பித்திருக்கிறீர்கள், இருந்தும் இந்த முட்டாள் சட்டத்தைத் தட்டி உடைக்கவேண்டுமென்றும் அதன் பின்தான் நம்முடைய அடிமை விலங்கை அறுத்தெறிய முடியுமென்றும் அந்தப் பச்சைப்பயித்தியகாரன் காந்தி உங்களுக்குப் பன்னிப் பன்னிச் சொல்லியும கேளாததினுல், அவர் பன்முறை உண்ணுவிரதத்தை அனுஷ்டித்தார். இருந்தும் அந்தப் பயித்தியகாரக் கிழட்டுக் காந்தியின் விரதம் ஒருவகையாக முற்றுப்பெற்றுவிட்டது. முற்றுப்பெற்ற தினத்தை இந்து சகோதரர்கள் வெகு குதூகலத்துடன் கொண்டாடினுர்கள். என்றூலும் அந்தக் காந்திக் கிழவன் உண்ணுவிரதமிருந்து உங்களிடம் எதைக் கேட்டார். பொருளைக் கேட்டாரா? அல்லது புகழைக் கேட்டாரா? அல்லது, உங்களினது பட்டம் பதவிகளை விட்டுச் சிறை வாசஞ் செய்யச் சொன்னுரா? அல்லாவிடில் நீங்கள் உடுத்திருக்கும் பட்டாடைகளைக் களைந்துவிட்டுக் காடு முரடான கதராடையை உடுத்தச் சொன்னுரா? அல்லது காந்திக் கிழவனின் உண்ணுவிரதப பூர்த்தி விழாவை வெகு குதூகலத்துடன் கொண்டாடச் சொன்னுரா? ஐயோ! அவர் அப்படியும் ஒன்றும் சொல்லவில்லையே. ஆனுல் அவர் உங்களிடம் கேட்டதென்ன? இந்து சகோதரர்களே நீங்கள் காய்பூனை முதலிய அறிவற்ற மிருகங்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமைகளை அறிவுள்ள மனிதராகிய தீண்டாதாருக்குக் கொடுங்களென்றல்லவா மன்றுடினுர். இவ்வுத்தமரின் மன்றுட்டுக்கு இந்துக்கள் செவி கொடாவிடின் இவர் இன்னுஞ் சிலமுறை உண்ணுவிரதததை அனுஷ்டிப்பார் அல்லவா. இதுவிஷயமாக மகான் காந்தி உயிர் துறக்க நேர்ந்தாலும் நேரும். அப்படி நேருமேயாயின் காந்தி மகானின் உயிருக்கு உலை வைத்தவர்களும், இந்தியாவின விடுதலைக்கு விரோதிகளும், மதங்களுக்கெல்லாம் தாய் மதமாகிற இந்து மதத்திற்குச் சீர்கேட்டைத் தேடி வைத்தவர்களும் இந்துக்களே என்று உலகம் உங்களைப் பரிகசிக்கும். இந்த நிந்தனைக்கு இந்துக்களாகிய நீங்கள் ஆளாகப்போகிறீர்களா? என்பது தான் எனது கேள்வி,


## நியூ ஸ்டார் டோக்கீஸ்

(வண்ணை ரோயல் தியேட்டர்)

2-4-37 வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெறும்.

தென்னிந்திய நாடகமேடைத் திலகம்

ஸ்ரீமதி. T. S. வேலாம்பாளும்
வித்துவான் P. D. V. கிருஷ்ணனும்
மற்றும் சிறந்த நடிகர்களும் ஒருங்குசேர்ந்து நடித்த

## மகாத்மா கபீர்தாஸ்

என்னும் அரிய படத்தைக் கண்டானந்தியுங்கள்.

தினசரி இரண்டு காட்சிகள் காண்பிக்கப்படும்.

இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

தெய்வம்தான் நித்தியம். மற்றதெல்லாம் அநித்தியம் என்பது சகலமதங்களின் கொள்கை. உபநிஷத்து வாக்கியமும் இதுவே. இதை அனுஷ்டிப்பவர் அரிது அரிது. சேவையே பெரிதெனக் கருதி தன் மகனைத் தன் கையாலேயே கொன்ற தந்தையை நீங்கள் பார்த்ததுண்டா?

காசி, கங்கா, கயா, காலபைரவர், புத்தர் ஆலயம் இவைகளை எங்களுடைய வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள்.

வருகிறது! வருகிறது!

P. K. ராஜாசாண்டோ V. A. செல்லப்பா நடித்த

"வசந்தசேன"

எதிர்பாருங்கள்.

*Proprietor:* N. AT. L. நாச்சியப்பச்செட்டியார்.

(289) 4-4-37


### விவாக சோபனம்.

மட்டுவில் வடக்கு பிரமஸ்ரீ செல்லையர் அவர்களின் கனிஷ்ட புத்திரன் செல்வச்சிரஞ்சீவி பிரமஸ்ரீ சோமசுந்தர சர்மாவுக்கு நிகழும் தாது௵ பங்குனி௴ க-ந் ௳ (14-3-37) ஞாயிற்றுக்கிழமை பகல் சமாவந்தனமும் அன்றிரவு 12 மணி 43 மினிற்றின் வந்த தனுலக்கின சுபமுகூர்த்தத்தில் அராலி வாணிவிலாச புத்தகசாலை மனேஜர் பிரமஸ்ரீ நா. சிவசுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் சகோதரரும் வண்ணைப்புரம் விசாலாக்ஷியம்பாள் சமேத விசுவநாத சுவாமிகோயில் பங்காளரில் ஒருவருமாகிய பிரமஸ்ரீ நா. பஞ்சாக்ஷரக்குருக்களின் ஏகபுத்திரி சௌபாக்கியவதி வடிவழகாம்பாளை அநேக சுற்றமித்திர பந்துக்கள் சமுகத்தில் வைதீகமுறைப்படி திருமங்கிலியதாரணம் செய்யப்பெற்று அன்று முதல் நாலுநாள் வரையிலும் ஔபாஸநாதி கிரிகைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இப்புதிய தம்பதிகளிருவரும் அட்ட ஐசுவரியமும் சற்புத்திர சந்தானமும பெற்று நீடூழி வாழப் பரமபதி திருவருள் புரிவாராக. சுபமஸ்து.

(288) 4-4-37—1

### தேவை

கோவிலுக்குக் குருக்கள் தேவை, விபரத்துக்கு 'ஈழகேசரி' பத்திராதிபர் மேற்பார்வைக்கு எழுதவும்.

மணியம்,
C/o ஈழகேசரி
சுன்னுகம்

(292) 4-4-37-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாவரம், ஆசிரியர் மறைமலையடிகளின் பொதுநிலைக் கழக

## இருபத்தாறும் ஆண்டு நிறைவுவிழாவின்

# அறிக்கை.

நிகழும் 1937, ஜூன், 11-முதல் ஐந்து நாட்கள் நடக்கப்போகும் பொதுநிலைக்கழக 26-ஆம் ஆண்டு நிறைவு விழாவினைப்பற்றித் தெரிவிக்கும் முன், முன்நடந்த அதன் 20-ஆம் ஆண்டு விழாவினைப் பற்றிச் சிறிது கூறுகின்றோம்:—

1931 - ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் இரண்டாம் நாள்முதல் நான்கு நாட்கள்வரையிற் பொதுநிலைக்கழக இருபதாம் ஆண்டு நிறைவுவிழா நடைபெற்ற வரலாறுகள் அவ்வளவும் அதன் அறிக்கையில் விரிவாக வெளியிடப் பட்டிருக்கின்றன. அவ்விழாப் பேரவைக்கு ஆசிரியர் மறைமலையடிகள் அவைத்தலைவராயிருந்து நிகழ்த்திய விரிவுரை "அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை" என்பதும் அதனுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அக்கழகப் பேரவைக்கு இருபத்திரண்டு கல்வியிற் சிறந்த அறிஞர்கள் வருவிக்கப்பட்டு, அரிய பெரிய பொருள்களைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்புமுதலிய இடங்களிலிருந்துந், தென்னாட்டில் தென்திருவிதாங்கூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, இராமநாதபுரம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவையாறு, கும்பகோணம், பண்ணுருட்டி, காஞ்சிபுரம், சென்னை, ஆரணி, வேலூர், சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திண்டுக்கல், கோட்டையூர், அரிமளம், கொத்தமங்கலம், கீழச்செவல்பட்டி, முதலான இன்னும் பற்பல இடங்களிலிருந்தும் அன்பர்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

அங்ஙனம் வந்த அன்பர்கள் ஒவ்வொருவரும் நுழைவுச் சீட்டுக்கும் உணவுச்சீட்டுக்கும் ஆறுரூபா கழகத்திற்கு உதவினர். இன்னுங் கழக மாணவர் ஒவ்வொருவரும் 100ரூபா வரையிற் காணிக்கை செலுத்தினார்கள். சென்னையிலும் அயலூர்களிலும் உள்ள அன்பர்களிற் பலர் 25 முதல் 250 ரூபா வரையில் நன்கொடை அனுப்பி உதவினர்கள். கழகமாணவரில் முதல்வருங் கல்வி செல்வங்களிற் சிறந்தவருமான திருவாளர் C. N. முத்துரங்க முதலியாரவர்கள் கழகப் பேரவைக்கு என்று தம்முடைய சொந்தச் செலவிற் பந்தல் அமைப்பித்தல் முதலான ஒழுங்குகளைச் செய்வித்ததுடன் 100ரூபாயும் காணிக்கை செலுத்தினர்.

கழகவிழாவிற்கு வந்தவர்களெல்லார்க்கும் உணவு, இருப்பிடம் முதலான எல்லா வசதிகளும் எல்லாரும் உவக்கும்படி ஐந்து நாட்களுந் தாராளமாகச் செய்யப்பட்டன. அக்கழக விழாவிற்கான செலவு சிறிதேறக்குறைய இரண்டாயிர ரூபாயாகும். வரவு சிறிதேறக்குறைய மூவாயிரத்து முந்நூறு. இதனால் வந்தவர்கள் வசதிக்காக எவ்வளவு தாராளமாகச் செலவுசெய்யப்பட்டதென்பது நன்கு விளங்கும்.

விழாவிற்கு வந்திருந்து விழாவின் நிகழ்ச்சிகளை நேரே கண்டுங் கேட்டுங் களித்த அன்பர்களெல்லாரும் இக்கழக விழாவை ஆண்டுதோறும் பல்லாவரத்திலேயே நடத்தவேண்டுமென்றும், அதற்காகத் தாங்கள் மிகுதியாகப் பொருளுதவிசெய்வது திண்ணமென்றுஞ் சொல்லி வற்புறுத்தினார்களாயினும், இங்கே அடிகளால் ஓயாது நடத்தப்படும் நூலாராய்ச்சியினாலும், ஆராய்ந்த பொருள்களை நூல்களாக எழுதி நிலையத்திலுள்ள தமது அச்சுக்கூடத்திலேயே அடிகள் பதிப்பித்து வெளியிட்டு வருதலாலும், இவற்றிடையே வெளியூர்களில் நடைபெறும் அவைகளின் ஆண்டு விழாவிற்கு அடிகள் அடுத்தடுத்துப் போய் வருதலாலும் அன்பர்கள் விரும்பியபடி ஆண்டுதோறும் விழாப்பேரவையை நடத்துவது இயலவில்லை.

ஆனாலும், இப்போது அவ்விழா நடந்தேறி ஐந்து ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டமையால் இவ்வாண்டிலாவது அதனை நடத்தவேண்டுமென்று அன்பர்கள் வேண்டிக்கொள்வதால், அடிகளின் கட்டளையை மேற்கொண்டு அடிகளின் அடியவர்களாகிய நாங்கள் பல்லாவரம் பொதுநிலைக் கழக இருபத்தாறும் ஆண்டு விழாவை அடுத்த ஈசுவர ஆண்டு வைகாசித் திங்கள் 29, 30, 31, ஆனி 1, 2, ஆகிய ஐந்துநாட்களிலும் (1937, ஜூன், 11, 12, 13, 14, 15,) நடத்துதற்கு அம்பலவாணர் திருவருளை முன்னிட்டுப் பெரிதுமுயல்கின்றோம். இதனை நடத்துவதன் நோக்கங்கள்:

இப்போது தமிழ்நாட்டின் பல இடங்களிலும் நடத்தப்படும் அவைகளிற் செய்யப்படும் விரிவுரைகள், பழைய பொருள்களிற் பேசினவைகளையே பேசுவனவாயிருக்கின்றன. ஆகையால், அவற்றைப் பெரும்பாலும் விட்டு, இக்காலத்துப் பலதேய மாந்தர்களின் நாகரிக வளர்ச்சியை ஆழ்ந்துபார்த்துத், தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாது வேண்டும் பொருள்களை மிகுதியாய் எடுத்துக் காட்டுவது இதன முதல் நோக்கமாகும்.

இத்தமிழ்நாட்டிலுள்ள தமிழ் கற்றூர் எல்லாரையும் ஒருங்குகூட்டி, அவர்க்குட் கருத்தொற்றுமையினை விளைவித்துப் பொருள் வருவாயில் இடர்ப்பாடின்றி இந்நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பல துறைகளிலும் அவர்கள் முயலும்படி செய்வித்து, இந்நாட்டவரெல்லாரையும் நமது தாய்மொழியாகிய தமிழிலுந், நமது சமய உணர்ச்சியிலும், வாழ்க்கை செலுத்தும் முறையிலும், மேன்மேல் உயர்வதற்கான வழி துறைகளைக் காட்டுவது.

ஆசிரியர் மறைமலையடிகள் இதுகாறும் இயற்றியிருக்கும் தமிழ்உரைநடை நூல்கள், தமிழ் உலகத்திற்கு எல்லாத்துறைகளிலும் நல்லுணர்ச்சியினைத்தந்து பெரும்பயன்விளைத்திருக்கின்றன. முன்னேற்றத்திற்கு ஆகாதபழையபுராணச் செய்யுள் நூல்களும், அவற்றைப்பின்பற்றி எழுதப்படும் உரைநடை நூல்களும் மலிந்து மக்களை அறியாமையிலுங் குருட்டு வழிகளிலுந் துன்பவாழ்க்கையிலுஞ் செலுத்தும் இந்நாளில், அடிகளுடைய நூல்களைத்தவிர, மக்கள்வாழ்க்கையின் பலதுறைகளிலும் அறிவை விளக்கி இன்பத்தை ஊட்டும் தனித்தமிழ் உரைநடை நூல்கள் வேறில்லை. நீண்டவாழ்க்கை, பழைய சங்கச்செய்யுளாராய்ச்சி, சைவ சித்தாந்த முதலான ஞானவிளக்கம் தமிழாரிய நூல்களின் வரலாறுகள், பழம் தமிழ் நாகரிகம், உயிர்கள் இறந்தபின் அடையும் நிலை, உயிர்களின் நினைவாற்றல், தமிழாரியர் வரலாறு, மாணிக்கவாசகர்முதலான சைவவைணவ பௌத்த சைனஆசிரியர்தங் காலநிலை கொள்கைவரலாறு, நாடகங்கள், கதைகள், சிறுவர்கள் இளைஞர்கட்கான செந்தமிழ்க் கட்டுரைகள் முதலான இன்னும்பல அரும்பெரும் பொருள்களையெல்லாங் கற்கக்கற்க இனிக்குஞ் செந்தமிழ் உரைநடையில் எழுதி வருபவர்கள் மறைமலையடிகள் ஒருவரேயென்பது தமிழுலகம் முழுதும் நன்கறிந்த உண்மை.

இவ்வளவு சிறந்த நூல்களையும், மறைமலையடிகள் தாம் ஒருவராகவே தமிழ், ஆங்கிலம், வடமொழி என்னும் மும்மொழிகளிலும் உள்ள சிறிதேறக்குறைய நாலாயிரம் நூல்களைத் தமது செலவிலேயே இருபத்தையாயிர ரூபாய்க்கு வாங்கி அல்லும் பகலும் அவற்றை ஆராய்ந்து தெளிந்து, தம்மறிவாலுங் கண்ட அரியபெரிய புதுப்பொருள்களையுஞ் சேர்த்து எழுதி வந்திருக்கின்றனர். மேலும், இவைகளைத்தாமே அச்சிட்டு வெளிப்படுத்தியதில் இலட்சரூபாய்க்குமேற் செலவுஞ் செய்திருக்கின்றனர். தாமெழுதி வெளியிட்ட இவ்வரிய நூல்களிற் செலவாய்ப்போனவைகளையும் போமவைகளையுந் திரும்பவிரைவில் அச்சிட்டு முடிப்பதற்கும் புதியவாக எழுதுவனவற்றை அச்சிடுதற்கும் வேண்டிய அளவு பொருளில்லாமையினற் செலவழிந்த செலவழியும் நூல்களையும் புதுநூல்களையும் விரைவில் வெளிப்படுத்துதல் இயலவில்லை.

### மறைமலையடிகள் இயற்றிய நூல்களின் பதிப்புச் செலவு.

| | |
|---|---|
| திருவாசக விரிவுரை, 1200 பக்கம் | ரூ 2750 |
| மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், 1200 பக்கம் | 2750 |
| சிவஞானபோத ஆராய்ச்சி 500 பக்கம் | 1000 |
| சைவசித்தாந்த ஞானபோதம் முதற் பாகம் 320 பக்கம் | 860 |
| சைவசித்தாந்த ஞானபோதம் இரண்டாம் பாகம், 320 பக்கம் | 860 |
| திருவொற்றி முருகர் மும்மணிக் கோவையுரை, 350 பக்கம் | 900 |
| பழந்தமிழ்க்கொள்கையே சைவசமயம், 200 பக்கம் | 650 |
| கடவுளுக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, 150 பக்கம் | 600 |
| இறந்தபின் இருக்கும் நிலை 300 பக்கம் | 800 |
| தொலைவில் உணர்தல், 300 பக்கம் | 800 |
| மனிதவசியம், 300 பக்கம் | 800 |
| நூறாண்டுயிர்வாழ்க்கை, 600 பக்கம் | 1250 |
| பண்டைத் தமிழர் ஆரியர், 200 பக்கம் | 650 |
| முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர் 150 பக்கம் | 620 |
| சாதிவேற்றுமை. 150 பக்கம் | 620 |
| வேளாளர் நாகரிகம், 150 பக்கம் | 620 |
| முல்லைப்பாட்டாராய்ச்சியுரை, 110 பக்கம் | 400 |
| பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, 150 பக்கம் | 620 |
| குறிஞ்சிப்பாட்டாராய்ச்சியுரை, 150 பக்கம் | 620 |
| மலைபடுகடாம் ஆராய்ச்சியுரை, 200 பக்கம் | 650 |
| சாகுந்தல நாடகம், 220 பக்கம் | 700 |
| சாகுந்தலநாடக ஆராய்ச்சி, 200பக்கம் | 650 |
| கோகிலாம்பாள் கடிதங்கள், 308 ,, | 800 |
| குமுதவல்லி 600 பக்கம் | 1250 |
| அறிவுரைக்கொத்து, 250 பக்கம் | 725 |
| சிந்தனைக்கட்டுரைகள், 150 பக்கம் | 620 |
| சிறுவர்க்கான செந்தமிழ், 150 பக்கம் | 620 |
| இளைஞர்க்கான இன்றமிழ், 250பக்கம் | 725 |
| சோமசுந்தரக் காஞ்சியாக்கம், 150 பக்கம் | 620 |
| பொருந்தும்உணவும் பொருந்தா வுணவும், 120 பக்கம் | 450 |
| பொதுநிலைக்கழக அறிக்கையும் அம்பலவாணர் திருக்கூத்தும், 64 பக். | 360 |
| திருக்குறளாராய்ச்சி, 200 பக்கம் | 650 |
| 11 சிறுநூல்கள், 120 பக்கம் | 300 |
| The Conception of God as Rudra, 120 pages | 640 |
| Saiva Siddhanta, 96 pages | 600 |
| Lectures on Saiva Siddhanta, 160 pages | 725 |
| Aryan & Tamilian Forms of Marriage, 100 pages | 600 |
| Miscellaneous Essays, 150 pages | 700 |
| Ancient & Modern Tamil Poets, 64 pages | 300 |
| ஆகமொத்தம் | ரூ 30855 |

அடிகள் இயற்றிய நூல்களின் அச்சுச் [illegible] சிறிதேறக்குறைய முப்பத்தோராயிர ரூபா வேண்டியிருத்தலால், இந்நூல்களை எக்காலுந் தொடர்பாகப் பதிப்பிட்டு வெளியிடுதற்குக் குறைந்தபடி ஓர் இலட்ச ரூபாயாவது மூலப்பொருள் வேண்டுமன்றோ? ஆதலால், அடிகளின் நூல் வெளியீட்டு வைப்புக்கும், பொதுநிலைக்கழக 26-ம் ஆண்டு விழாச் செலவுக்கும் பயனுறும்படி அடிகட்குத் தக்க தொகை நன்கொடையாக உதவுமாறு அன்பர்களை வேண்டித் திருவருளை வழுத்துகின்றோம்.

இங்ஙனம்

பொதுநிலைக்கழகத் தொண்டர்கள்.

---

## காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாசாலை சரஸ்வதி ஆலயத் திறப்புவிழாவும் பெற்றூர் தினக்கோண்டாட்டமும்,

(பெற்றூர் தினம் நான்காம் ஆண்டு)

நிகழும் தாது ஆண்டு பங்குனித் திங்கள் 13-ம் நாள் (26-3-37) வெள்ளிக்கிழமை மாலை 5—30 மணியளவில் காரைநகர்தோப்புக்காடு கூனன்கலட்டி கட்டையன்கலட்டிஎன அழைக்கப்படும்வழவில்அமைக்கப்பட்டு அவ்வூரவர்களால்பராபரிக்கப்பட்டுவரும் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவிலில இருந்து மேற்படி வித்தியாசாலை மாணவர்களும் பெற்றோரும் சில பெரியார்களும் வித்தியாசாலை ஆசிரியர்களும் புடைசூழ, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. V. வீரசிங்கம் அவர்கள் சரஸ்வதியின் திருஉருவத்தை வந்திநிற்க பக்கவாத்திய சகிதங்களுடன் கோவில் வலம் வந்து வித்தியாசாலை முன்றிலில் ஓர் புகைப்படம் பிடிக்கப்பெற்ற பின்னர் மேற்படி திருஉருவத்தை மேற்படி வித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்பெற்ற சரஸ்வதி ஆலயத்தில் திறந்து வைத்தனர். அத்தருணம் ஓர் விசேட பூசையும் நடந்தேறியது.

பின்னர் வடபெரும்பாகத் தலைமைத்தமிழ் வித்தியாதரிசகர் திரு. M. தம்பிப்பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் தேவாரபாராயணத்துடன் பெற்றூர் தினம் ஆரம்பமாயது. வித்தியாசாலை மாணவர்களால் வந்தனோபசாரப்பா பாடப் பெற்றது. தலைவர் முன்னுரையின் பின் தலைமை ஆசிரியர் அவர்களால் சென்ற ஆண்டு அறிக்கை படிக்கப்பெற்று உறுதிப்படுத்தப் பெற்றது.

மாணவர் அப்பியாசங்கள் நடந்தேறின. தலைவர் அவர்களால் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப் பெற்றன.

திரு. V. வீரசிங்கம் அவர்களால் "பிள்ளைவளர்ப்பு" என்னும் விஷயமும், திரு. நா. பொன்னையா ('ஈழகேசரி'ப் பத்திராதிபர்) அவர்களால் "கலையாக்கம்" என்னும் விஷயமும், திரு. A. சரவணமுத்து வித்தியாதரிசகர் அவர்களால் "பெற்றோரும் பாடசாலையும்" என்னும் விஷயமும் கேட்டோர் இன்புறுமாறு மிகவும் தெளிவாகப் பேசப்பெற்றன. தலைவர் முடிவுரையின்பின் தலைமை ஆசிரியர் அவர்களால் நன்மொழி கூறியபின் கூட்டம் இரவு 10 மணியளவில் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவெய்தியது.

பின்னர் வித்தியாசாலை மாணவர்களால் "பக்தநந்தனார்" என்னும் நாடகம் சபையோர் இன்புறுமாறு மிகவும் பக்தியுடன் நடித்துக் காட்டப்பெற்றது.       கடித.

---


## தேவை

அரும் பெரும் தருணம்! சுதேச கைத்தொழிற்சாலை ஒன்று பங்காக நடத்தக்கூடியவர் தேவை. தக்க லாபம்! 15-4-37க்குள் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

"சித்தி"

C/o பத்திராதிபர், 'ஈழகேசரி'

சுன்னாகம்

(291) 4-4-37




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நாரைவிடு தூது

(3-ம். பக்கத் தொடர்ச்சி)

நினைந்து, அடிகள் அகமகிழ்கின்றார். மாலையணிந்த மணமகனை "இணையார மார்பன்" என்று எண்ணி அடிகள் இறும்பூதெய்துகின்றார். இத்தன்மை வாய்ந்த ஈசனிடம், அடியார் துயரை அறிவிக்குமாறு, திருநெறிச் செல்வராய திருஞானசம்பந்தர், நாரையைத் தூதுபோக்கும் முறை, நயம் சிறந்து விளங்கக் காணலாம்.

"கான்அருகும் வயல்அருகும்
கழிஅருகும், கடல்அருகும்
மீன்இரிய வரிபுனலின்
இரைதேர் வெண்மடநாராய்
தேன்அமர்ந்தார்ச் சிறுத்தொண்டன்
செங்காட்டங் குடிமேய
வான்அமரும் சாடையார்க்கு
என்வருத்தம் சென்றுரையாயே"

என்பது நாயனார் நற் கவியாகும். "வயலிலும், கழியிலும், கடலிலும், கானிலும் மீன் கொத்தி இரை தேரும் மட நாராய், சிறுத்தொண்டன் எனும் சீராளன் வாழ்ந்த செங்காட்டங் குடியில், செம்மேனி எம்மான் உறைகின்றான். அப்பெருமானிடம் நான்படும் பாட்டை, நாராய்! எடுத்துரையாயோ" என்று இரங்கிக் கூறும் மொழிகள், பேரின்பப் பெருந்துறையில் படிந்த பெரியார் உள்ளத்தைப் பளிங்குபோல் உணர்த்துகின்றன. செயற்கரும் செயல் செய்து செம்பொருளாய ஈசனுடன் இரண்டறக் கலந்த, சிறுத் தொண்டனைத் "தேன் அமர்ந்தார் சிறுத்தொண்டன்" என்று திருஞான சம்பந்தர் வாயார வாழ்த்துகின்றார். ஆனந்தத் தேன் சொரியும் ஈசன் அளித்த, மணமாலை புனைந்து, மாறிலா இன்பத்தில் மலர்ந்த அடியாரைத் "தேன் அமர்தார்ச் சிறுத் தொண்டன்" என்று நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் நவிலும் திறம் மிகுதியும் நயம்பயப்பதாகும். மற்றும், [தொடரும்]

## மயிலிட்டி தெற்கு ஐக்கிய வாலிப சங்கம்.

ஷை சங்கப் பொதுக்கூட்டமொன்று நிகழும் தாதுவருடம் பங்குனி மாதம் கரு-ம் திகதி (28-3-37) ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் மயிலிட்டி தெற்கு நாமகள் வாசிகசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. பொ. பரமானந்தம் ஆசிரியர் அவர்களது தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது.

அவ்வமயம் யாழ்ப்பாணம் பண்டித பயிற்சிக்கழக விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ நவநீத கிருஷ்ணபாரதியாரவர்கள் "எமதுநிலைமை" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு கடவுள்வழிபாடு, ஆத்மசக்தி, ஒற்றுமை, பரோபகாரம, என்னும் பொருள் பொதிய சபையோர் உளம் கொள விரிவுரை நிகழ்த்தினர்.

அதன்பின் ஆசிரியர்கள் திரு. சி. கந்தவனம் திரு. இ. நமசிவாயம் என்பவர்களால் குறிப்புரைகள் கூறப்பட்டபின் தலைவர் முடிவுரையுடனும், தேவார பாராயணத்துடனும் கூட்டம் 10 மணி 30 நிமிஷமளவில் இனிது நிறைவேறியது. —கடித

## சோதிட விளம்பரம்.

ஜாதகம், குறிப்பு, ரேகை முதலியன மூலம் பலாபலனைச் சுத்தமாயறிய விரும்புவோரும், ஜாதகம், குறிப்பு, விவாகப்பொருத்தம், கோவில், வீடு, கிணறு ஆதியாங் கருமங்களைப் பிழையறச் செய்வித்துக் கொள்ள விரும்புவோரும் எம்மிடஞ் செய்வித்துக்கொள்ளலாம்.

வை. ஆ. க. வைத்தியலிங்கம்
சோதிடர்
ஊரெழு, சுன்னுகம்.

(273)-21-2-37-24.

# சீர் - திருத்தம்.

1936-ம் வருடம் மாசிமாதத்திற்கு முந்திய ஒருவருடகாலத்தில் இங்கிலாந்திலே 13,234 பேர் மோட்டார்வண்டியினுற் காயப்படுத்தப்பட்டனர். இவர்களுள் 435 பேர் கொலையுண்டனராம். அதன்பின், சென்ற மாசிமாதத்திற்கு முந்திய ஒருவருடகாலத்திலே 13,491 பேர் காயப்பட்டனரென்றும் அவர்களுள் 461 பேர் கொலையுண்டனரென்றும் லண்டன் ரைம்ஸ் பத்திரிகை வெளியிடுகிறது. முந்திய வருடக்கணக்கிலும் பார்க்கப் பிந்திய வருடக் கணக்கு அதிகப்பட்டிருத்தலினுலே சீர்திருத்தமும் வரவர அதிகப்படுகிறதெனபது வெளிப்படை. ஸ்பேயின் தேசத்திலே அரசினர்கட்சிக்கும் கலகக்காரருக்குமிடையிற் கலகம் ஏற்பட்டநாள் தொடங்கி இற்றைவரையிலே 16750 பாதிரிமாரும் பதினெரு பிஷப்மாரும் கொலைசெய்யப்பட்டனரென இன்னெரு அறிக்கை வெளியிடுகிறது. ஆகவே மேல்நாட்டிலே விருத்தியடைந்துவரும் சீர்திருத்தமாவது மோட்டார்வண்டியினுலே சனங்களைக் கொலைசெய்வதும் குருமார்மீது குண்டுமாரிபொழிந்து சித்திரவதைசெய்வதுமேயாம. எந்தஉலகத்திலேனும் எந்தக்காலத்திலேனும் இப்படியாக நடைபெற்றதாகக் கேள்விப்பட்டதுமில்லை. இதுதான சீர்திருத்தமென்று நம்பி கீழ்நாட்டினர் தமது உண்மையான சீர்திருத்தத்தைக் கைபறியவிட்டு மேல்நாட்டுச் சீர்திருத்தத்தை அடைந்துவிடவேண்டுமென்று அடித்தலம் பிடர்அடித்திட ஓடுகின்றனர்.

* *

"லேடி கோடன்" "லேடிஹவலக்" என்னுங்கப்பல்கள் இலங்கையைச்சுற்றி ஓடிய (இற்றைக்கு முப்பது வருடங்களுக்குமுன்) நாட்களிலே சோடா லெம்னெட் போத்தல்கள் அடைக்கப்பட்ட இரண்டு சிறிய பெட்டிகள் கப்பல் மார்க்கமாக மாதமொருமுறை யாழ்ப்பாணத்துக்கு வந்ததுண்டு. அவற்றுள் ஒன்று யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள வாடி வீட்டுக்கும் (rest house) மற்றது காங்கேயன்துறையிலுள்ள வாடிவீட்டுக்குமாம். சிலகாலங்களிலே ஒருபெட்டி லெம்னெட் செலவழிய இரண்டு மாதகாலம் வரையிற் செல்லும். இக்குடிகள் அந்தநாட்களில் இங்குவந்து குடியேறவில்லை. இங்கேயுள்ளவர்களும் அவைகளைப் பொருட்படுத்தினுரல்லர். இந்தவிஷயமாகப் பணச்செலவுமில்லை. பணச்செலவின்றிச் சீவித்தல் சீர்திருந்தாமையைக் காட்டுகிறதென்னும் ஒருதவறுன அபிப்பிராயம் அநேகரிடத்தில் வேரூன்றிக்கொண்டது. அத்துடன் நவீன சீர்திருத்தக்கட்சியார் "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்னும் விதியின் ஈற்றிலுள்ள "தேடு" என்பதைக் கைபறியவிட்டு அந்த ஸ்தானத்திலே "சிதறு" என்பதைப் புகுத்திக்கொண்டனர். கடவுள் இல்லாத இடம் எங்காவது இருந்தாலுமிருக்கும். சோடாப்போத்தல் இல்லாத இடமோ ஒன்றுதானுமில்லை. இதற்கெல்லாம் பணமே வேண்டியதாயிற்று. இந்தமுறையாகவும் நாம் சீர்திருந்திவிட்டோம். பணம் பாழுக்கிறைக்கப்படுகிறது.

* * *

சென்ற மாதம் தொடக்கமாக, கம்பளை காலி குருநாக்கல் நீர்கொழும்பு முதலான இடங்களிலே மதுவிலக்குச் சபைக்கும் மதாபிமான சபைக்குமிடையில கடும்போர் மூண்டது. அநேக இடங்களிலே மதுவிலக்குச் சபை வெற்றியடைந்தது. அதிகாரிகள் மத்தியஸ்தராக ஏற்பட்டு அதிகமான சனங்களின் சம்மதத்துடன் மதுக்கடைகளை ஸ்தாபித்தும் நீக்கியும் சமாதானத்தை நிலைநாட்டினுர்கள். 1511 வாக்காளரையுடைய ஒரு பகுதியிலே சாராயத் தவறணை ஒன்றை ஸ்தாபிப்பதற்காகச் சனசம்மதம் பெறப்பட்டபோது 97 பேர் மாத்திரம் தவறணை வேண்டுமென்றார்களாம். ஆகவே வேண்டுமென்று நின்றோர் தோல்வி எய்தினர். கம்பளையிலே ஒரு அந்நிய நாட்டுக் குடிவகைக் கடையை ஸ்தாபிப்பதற்காக ஒருநாள் காலை ஏழு மணிதொடக்கம் மாலை ஐந்து மணிவரையும் சனசம்மதம் பெறப்பட்டதாம். சனங்களும் அதிகதொகையாகக் கூடி நின்றார்களாம். ஈற்றில் பெட்டியைத் திறந்து பார்த்தபோது சம்மதபத்திரம் ஒன்றுதானும் அதனுட் காணப்படவில்லையாம். இவ்விஷயங்கள் கொழும்பிலுள்ள ஆங்கில தினசரிப்பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டன. அறிந்தோ அறியாமலோ கண்டோ காணுமலோ அறியோம். இங்குள்ள பத்திரிகைகள் இவ்விஷயமாக யாதும் கூறு தொழிந்தன; அபிப்பிராயம் கூறு விட்டாலும் புதினமாகவேனும் பிரசுரித்தில. சபைகளும் அவைகளைப் பின்பற்றின.

* *

இது ஒரு புறம் கிடக்கட்டும்; பல வருடங்களுக்குமுன் எங்கள் தமிழ்நாட்டிலே சர்வாதிகாரம் பெற்றிருந்த மதுவிலக்குச் சபை, இங்குள்ள கள் சாராயம் அந்நியநாட்டுக் குடிவகைக் கடைகளையெல்லாம் வேரோடு அழித்தது; ஈற்றில் எஞ்சியிருந்த அந்நியநாட்டுக் குடிவகைக் கடை ஒன்றை யாழ்ப்பாணப்பட்டினத்திலிருந்து பருத்தித்துறை வரைக்கும் பிடர்பிடித்துந்திக் கொண்டுபோய்க் கல்லோடு கட்டிக் கட்டுமரத்திலேற்றி, கடலுள் அமிழ்த்திக் கொன்று, சுவர்க்கலோக பரியந்தம் தனது கீர்த்தியை நிலைநாட்டிய பின் புத்திரப்பேறின்றித் தேகவியோகமெய்தியது. இரண்டு மூன்று வருடங்களின்பின் பழையபடி எமது நாடு மதுநாடாகத் தொடங்கியது. இந்த முறைமைதானும் தக்கதன்றெனப் பின்னர்க் காணப்பட்டது. அப்பால் இப்பொழுது மரவரிக்காலம் நடைபெறுகின்றது. இது குடிகளுக்கு அதிக வசதியுடையதாம. மிகவும இழிவாகக் கருதப்பட்ட இந்த மது, புதிய சீர்திருத்தங்காரணமாக மேசைகள் மீதும மேடைகள் மீதும் அக்கிராசனம் வகித்து ஆதிக்கமெய்திவிட்டது. இராமாயண பாரத காலங்களுக்கும் முந்தியுள்ளதாகிய இந்தமதுவை இப்போது முற்றாக ஒழித்தல் வேண்டுமென்பது எமது கருத்தன்று. மதுபானம் என்னும் இது என்றென்றைக்குமிருக்கலாம். இருக்கவேண்டிய இடத்திலே இருக்கவேண்டும்; உரிமை உடையவர்களிடத்திலே மாத்திரம் நட்புடையதாய் இருத்தல் வேண்டும். ஆனுல் புறக்கோடுபோகக் கூடாது. தாழ்த்தபபட்டவர்கள் ஆலயப்பிரவேசம் செய்ய வொண்ணுதென வாதாடி நிற்போர் தாழ்த்தப்பட்டவர்களாற் கொடுக்கப்படும் (தாழ்த்தப்பட்ட) மதுவை இருகையேற்று வயிற்றை நிரப்பிய நடையாடும் தொழிலுடைய மதுக்குடங்களை ஏன் ஆலயத்துள் விடுகின்றார்களென்பது உண்மையாகவே புலப்படவில்லை. முன்னுளிலே இந்த நடைகுடங்கள் எல்லாராலும் எல்லா இடஙகளிலும் புறக்கணித்து ஒதுக்கப்பட்டுக் கிடந்தன. இப்போது நாம் அடைந்த புதிய சீர்திருத்தங்களுள் இதுவுமொன்றாகும். இனி, சமயவிஷயமாக நாமடைந்த சீர்திருத்தத்தைப் பற்றி ஆராய்வாம்.

# தெய்வாராதனை விளக்கம்

(சி. அகிலேஸ்வரசர்மா, மண்டைதீவு)

(முற்றொடர்ச்சி)

22. காதலுடன் கட்டழகும் வாய்ந்த நங்கை
கலந்து அகம தாநினைந்து தானேவந்து
பேதமுறப் பாசவலை வீசும் போதில்
பிரியமிகு நாயகனின் நிலைமை யென்ன
போதமுறத் தீவிரமாய் அன்பு கொள்ளும்
புண்ணியர்க்கு இறைவனருட் பிரபை வீசும்
ஆதவன்காண் அரவிந்தம் அலர்வ தென்ன
அன்பர்உளம் காதல்மலர் அலரும் அன்றே.

23. அன்றலர்ந்த பூக்கொய்து மாலை செய்து
அருள்வள்ளல் சிரசின்மேல் தூநீர் பெய்து
மன்றல்கமழ் வடிவீரம் துணியால் ஒற்றி
வனப்புமிகும் பட்டாடை உடைகள் சாத்தி
தென்றல்தரு சந்தனம்பொன் மேனி பூசித்
திருநுதல்மேல் நீறணிந்து திலதம் இட்டு
பொன்றுமிருள் ஒளிதீப தூபம் காட்டி
பூமாலை புனைந்துநிவே தனமுஞ் செய்வர்,

24. செய்வாரே அர்ச்சனைகள் தினமும் பூசை
செய்துமுடித் திடுமெல்லை ஏதுவோ மென்னில்
மெய்வாய்கண் செவிமூக்கு என்னும் ஐந்தால்
விளைகின்ற இந்திரியச் சுவைகள் எல்லாம்
பொய்தானென் றேயுணர்ந்தவ் விச்சை நீங்கில்
பூசைசெய்யும் ஆசையுமோ அகன்று போகும்
கைமேவு பொருள்துயிலில் நழுவல் போலும்
காதலன்பு மற்றொன்றாய் வளரும் தானே.

(தொடரும்)

## ஒத்துழைப்புச் சங்க புதிய உபவிதிகள்

பிரதி விலை சதம் 4

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " சாம்பிராணிச்சாமி. "

சுவாமிகளின் சகோதரன்
வித்துவான் சி. நாகலிங்கபிள்ளை
எழுதியது.

சாம்பிராணிச்சாமியார் 1857-ம் ஆண்டில் வட இலங்கையில் யாழ்ப்பாணத்திலே பிறந்தவர். இவர் பிறக்கும்போது இவருடைய தாயாருக்கு வயசு பதின்மூன்று. இவரோடு உடன்பிறந்தார் மூவர். வித்வான் சி. தாமோதரம்பிள்ளை அவர்களும் இம்மூவருள் ஒருவர். இவர் பிறந்து வளர்ந்து ஐந்தாம் வயசில் ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாவலரவர்களால் வித்தியாரம்பம் செய்விக்கப்பெற்றுக் கல்வி பயின்று வந்தார். வருங்காலத்தில் இவருடைய மனப்பான்மை புதிய போக்காகவே விளங்கியது. மிக முரட்டுக் குணமும் பிடிவாதமும் உடையவர். ஒரு தீபாவலி தினத்தில் வீட்டிலுள்ளார் யாவரும் எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்து கொண்டாடி விளையாட இவர் மட்டும் முகம் வேறுபட்டிருந்தார். அதுகண்டு தாயாரால் அறிவிக்கப்பட்ட பாட்டனார் அவரோடு விளையாடிக் களிப்பித்து உள்ளக்குறிப்பை அறிந்து விலை யுயர்ந்த சரிகை வேட்டியை வாங்கிக் கொடுத்து மகிழ்வித்தார். பிதாவின் பெயர் சின்னத்தம்பியார். மாதா அன்னம்மை.

### சுவாமிகள் துறவு பூண்டமை

பொன்னுத்துரைக்கு இளம் பிராயத்திலே நெஞ்சிலே பெரிய கட்டு ஒன்று கட்டி மிக வருத்தியது. நாயன்மாகட்டில் வைத்தியசாலையில் சத்திர வைத்தியம் நடைபெற்றும் குணமடையாமல் பின், விபூதியையே பரம ஔஷதமாக நாடோறும் குழுவி வரும் பெரும் புண்ணிற் பூசித் தாமாகவே மாற்றிக்கொண்டு குடும்பத்திலிருந்து விலகிக்கொண்டு கதிர்காம தலத்தை யடைந்தார்.

" அம்மலைப் பெருமை யாரே யறைதவ ராதி சேடச், செம்மலும் வல்ல ஞானன் றாணியில் யாவருள்ளார், அம்மையில் எண்ணில் காலம் ஆற்றிய தவப்பேறு உற்றால், இம்மையிற் கதிரை நண்ணி இக்கிரி காணலாமே. "

(கதிர்காம புராணம் பக். 76 செய். 34)

என்றவாறு பூர்வ புண்ணியத்தினாலே கதிர்காம தலத்தையடைந்து, சிந்தாமணி ஆலயத்தில் காமபீடமிசை வீற்றிருக்கும் காமேசன் திருவருட் கடலுலாழ்ந்து பின் வடதேச யாத்திரையில் ஈடுபட்டிருந்தார்.

### சுவாமிகள் சந்நியாசம் பெற்றமை

பின்பு பொன்னம்பல சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவ சந்நியாசம் பெற்றுக்கொண்டு திருப்பனந்தாளில் காசிமடத்தில் வாசஞ் செய்தனர். பின் திருச்செந்தூர் குலசேகரன் பட்டினம் திருநெல்வேலி முதலிய தலங்களில் வசித்து வந்தனர். சாம்பிராணிப் பணிவிடையை மேற்கொண்டு செய்து வந்தமையால் சாம்பிராணிச் சாமியென்று உலகம் போற்றி வழங்கியது.

### சாம்பிராணிச்சாமிகள் சமாதி அடைந்தது

தாது வருடம் மாசிமாதம் 22ந் தேதி சுக்கிரவாரமும், அபரபக்க அட்டமித் திதியும் கேட்டை நட்சத்திரமும் கூடிய சுபயோகத்தில் குலசேகரன் பட்டினத்தில் சிவயோகத் தமர்ந்தார்கள். அப்பொழுது சாம்பிராணிச் சாமிகள்பால் அன்பு வைத்த மெய்யடியாரால் சமாதி செய்யப்பட்டது.

சாம்பிராணிச்சாமிகள் திருவடி வாழ்க

நொவல்பகுதி

# தேவி திலகவதி

அல்லது

# குப்பையிற் குண்டுமணி

( திரு. ச. இராசரத்தினம் அவர்கள் )

[எவரையுங்குறித்து எழுதப்பெறுவதன்று] [பதிப்புரிமை ஆசிரியருக்கு]

(முற்றொடர்)

திருச்செல்வனே கடிதம் எழுதிய நாள்முதல் "அது என்ன விடையைக் கொண்டுவருமோ" வென்று ஏக்கியவனாய் அந்த நினைவிலிருந்தான். அவன் மனம் சுமக்கமுடியாத வோர் பாரத்தின் கீழ்க் கிடந்து நசுங்கியது. ஒருபோது நேர்க்கடிதம், பழைய நினைவுகள் கொண்ட முதலியார்பால் சினத்தை உண்டாக்குமென்று நினைத்தானாயினும், பேச்சாளர் துணையின்றித் தானே தன் மனநினைவுகளை நேரே எழுதியதுபற்றி ஓர் வித இன்பம் அவன் மனதிலுண்டானது. இச்செயல், தன் மைத்துனியை விவாகஞ் செய்யாதுவிடினும், பின்னேற்படப்போகும் குறைகளினின்று தன்னைத் தடுக்குமென எண்ணினான். திலகவதி, வேறு விவாகப் பேச்சுகளினால் என்ன செய்வதென்றறியாது தன் உயிரை விடின் என்செய்யலாம். "ஆண்பிள்ளையாயிருந்தும் தன்னெண்ணத்தை ஏன் என் அருமை மைத்துனர் தந்தைபால் தெரிவியாதிருக்கின்றனர்!" என்று திலகவதி மனம் வருந்துதலுங் கூடுமல்லவா? எனவே என் கடிதம், என் எண்ணத்தைத் தற்போது பூர்த்தி செய்யாவிடினும், பின்வரும் பழிச் சொல்களினின்று என்னைக் காப்பதற்கு ஏதுவாகுமல்லவா? என்று எண்ணி உள்ளம் புளகிப்பான். மறுநேரம், மகளைக் கொடுக்க முதலியார் மறுக்கின் என்செய்வது? பெற்றறியாது, பெறற்கரிய என் காதலி என்னுடன் தன் வீடுவிட்டு ஓடிவருவாளா? இச்செய்கை எமது நாமத்திற்கு இழுக்கை உண்டாக்குமே! என்று பிரலாபிப்பான். இப்படியே அவன் மனம் அலைவழியே அசையும் தோணிபோல அலைந்தது. முதலியாரின் விடையும் நாட்பல கழியுமுன் திருச்செல்வனின் கையை அடைந்தது. வாசித்தான்; என்ன செய்வதென்றறியாது திகைத்தான். "திலகவதியின் விவாகத்தைப்பற்றித் தாங்களோர் சிந்தனையுஞ் செய்யவில்லையாமே! சீனியர் பரீட்சையில் விவாகத்திற்குமுன் சித்திபெறவேண்டுமாமே! எனக்குத் திலகத்தைக் கொடுக்கின் சீனியர் பரீட்சை எதன்பொருட்டோ? உயரப்பறக்கும் பழைய எண்ணங்கள் இன்னும் அவரைவிட்டகலவில்லைப்போலும்! நன்று; யான் நேரே என் திலகவதிக்கு ஓர் கடிதம் எழுதுவேன். அவள் மனம் என்னவாயிருக்கும் பார்ப்போம்!" என்று தீர்மானித்தான். திலகவதியின் அந்தரங்க எண்ணம் யாதெனை அறியாது தான் வேறு விவாகத்திற்கு உடன்படுதல் தகாதென அவன் நெஞ்சிற்பட்டது. அன்றுகண்ட அவள் கலங்கிய கண்கள் அவன்முன் தோன்றின! அச் சிறுகடிதத்தின் ஒவ்வோர் சொல்லும் மனதில்வந்தன! "ஐயோ! என்செய்வேன்!" என்று பதைத்தான். பின் தன்மனதைத் தேற்றிக்கொண்டே "திலகவதி இன்னும் என்னையே மனதுள் வைத்திருக்கின்றுளோ? அறிவோம். சிலபோது குடும்பக் குணமே அவளிலுங் குடிகொண்டிருக்கலாம். பலபுருடர் தன்மேல் நேசம்வைத்தலில் இன்பமடைபவளாயிருத்தல்கூடும்; கணக்கில்லாக் கன்னியர் இவ்விபரீத எண்ணத்தைத் தம் தலைக்குட் கொள்ளுவதாற் கடைசியில் "அன்புடையான" ஒருவனும் தம்மை ஆதரிக்கவில்லாது அவஸ்தைப்படுகின்றனர். திலகவதியும் ஏன் இவர்களுள் ஒருவளாயிருத்தல்கூடாது? அவள் அன்னையே காமக்கொதிப்பில் தலையற்று நடக்கின்றனளே! ஐயோ! இக் கொடூர நினைவுடை நாரியரால் கெட்டழியும் வாலிபர்தான் எத்தனைபேர்? நான் இவைகளையறிந்தும், என் கழுத்தைவளைத்து நானே அதற்குச் சுருக்கிடலாமா? என்று பல எண்ணங்கள் திருச்செல்வன் மனதிற்பட்டு மறைய அணிதமைந்திருந்த மேசையை அண்டித் தன் ஆசைத் திலகவதிக்கு ஒரு நிருபம் வரையததொடங்கினான். இதற்குப் பதிலில்லையேல் தன்பாற் பாதகம் யாதுஞ் சேராதென்று அவன் மனதிற் பட்டதுமல்லாமல் தன் அன்னை தனக்கெனத் தெரிவித்த மங்கையை மணப்பதாக நிச்சயமும் செய்தான்.

காதலிக்குக் கடிதம் எழுதிப் பல நாட்கள் சென்றுவிட்டன; திலகவதியின் பதிற் திருமுகமோ வரவில்லை. காதலர் இருவருள் ஒருவராது கடிதத்திற்கு நேர்ந்த கதியை அறியார். கடிதமோ அவரிருவரின் பெருங்கவலைக்கிடமாக முதலியார் கைப்பட்டது. கடிதத்தைக் கண்ணுற்ற முதலியாருக்குக் கடுங் கோபம் உண்டாயது. திருச்செல்வனின் மனப்போக்கை வெறுத்தார். அது திலகவதியின் கண்களிலேயே தென்படக்கூடாதென்றெண்ணி, முன்னரே கோபத்தாற் சிறுதுண்டுகளாக்கப்பட்ட கடிதத்தை எரியும் நெருப்பிலிட்டார். அப்பொழுது அச்செயல் தன் அருமைப் புதல்வியின் சீவியத்தையே அழிக்கப் போகின்றதென்பதை அவர் சிறிதும் உணரவில்லை. திலகவதி தன் அன்பை வெளிக்காட்டியிராவிடின் திருச்செல்வன் அக்கடிதத்தை எழுதத் துணிந்திரானென்று அந்நேரம் அவர் சிந்தித்தாருமில்லை. இவர் காதலின் மகிமையைக் கனவிலுங் கண்டவரல்ல! தன்னிரு விவாகங்களுக்கும், முறையே பெற்றாரையும், கணபதிப்பிள்ளையையும் நம்பியிருந்தார். ஆகையால் "உண்மைக் காதல்" இவரை ஓர்போதும் பற்றியதில்லை. பல காதற் கதைகளை வாசித்தும், இக் கொடியநோயால் ஏற்படுங் கொலைகளையுங் குடும்ப முறிவுகளையுங் கண்ணாரக் கண்டும், காதாரக் கேட்டும் சிறுமி திலகவதிக்கும் "பிறிதோர்" இருதயமுண்டென்பதை அவர் அப்பொழுதாயினும் நினைத்தாரில்லை. பெற்றாருடைய சிறார் "மனச் சுயாச்சியமும்" வைத்திருக்கக்கூடாதென்பதே அவர் விளக்கம்! "ஓ! என் செல்வ மகளும் இக் கோர நினைவைக் கொள்ளக்கூடியவளா? இது திருச்செல்வனின் மனத் தடுமாற்றம்!" என்றே நினைத்தார் முத்துவேலு முதலியார்.

திருச்செல்வனே "இன்றுவரும், நாளைவரும்" என்று தன் காதலியின் கடிதத்தைக் காத்திருந்தான். தபாற்காரனைக் காணவே அவன் இருதயந் துடிக்கும்! ஆவலுடன் அவன் கொடுக்குங் கடிதங்களைத் திருப்பிப்பார்ப்பான்; காதலியின் கடிதம் இல்லாதது கண்டு கவலைகொள்வான். "நாளைவரும்!" என்ற எண்ணத்தோடு தன் துக்கம் நிறைந்த மனத்தைத் தேற்றுவான். பாவம்! பலநாட்கள் கழிந்து மாதங்களாயின. "நாளை" ஒருபோதும் வந்ததேயில்லை! திருச்செல்வனின் அன்பு ஆத்திரமாக மாறியது. அவன் கண்களுக்குத் திலகவதி பொதுமகளிரில் ஒருவள் போன்று தோற்றப்படுவாளாயினள். "சீ! குடும்பக் கொடுங்குணம் இவளிலுஞ் செறிந்திருக்குமென்று நினையாது, என் அருமை மைத்துனி, என் இனிய காதலி என்று நினைத்து நேசித்து மோசம்போனேனே; என்னருமை அன்னை எழுதிய உரைகள் எவ்வளவு உண்மையுள்ளன! உண்மையில் அன்புடையாளாயின் என் கடிதத்திற்கு விடை எழுதாதிருக்கின்றாள்? "அன்புக்குமுண்டோ அடைக்குந்தாள்!" எவ்வளவு சங்கடங்களைக் கவனியாது உயிரையும் பொருட்படுத்தாது காதலர்கள் ஒன்றுசேருவதிற் கண்ணாயிருக்கின்றனர். அவர்கள் நினைக்கமுடியாச் செயல்களையே செய்துமுடிக்கின்றனர்; உண்மைக் காதல், காதலருக்கு எவ்வளவு மனத் தைரியத்தைத் அளிக்கிறது. திலகவதிக்கு விவாகம் பல பேசுகின்றனராமே! என்னை உண்மையில் உள்ளன்புடன் நேசித்தாளாயின் ஏன் தன் மன எண்ணங்களைப் பெற்றாருக்குத் தெரியச்செய்தல் கூடாது? ஓ்கா! உண்மையிதுவே! உண்மைக் காதலென்று அவள் நிலையற்ற காமக்கொதிப்பை நினைக்கலானேன்! விபரீத நாகரீக முறைகளில் கல்விகற்கும் கன்னியரில் அரும்பி வளரும் துஷ்டக்குணம் இவளிலும் கூடியிருக்குமென்று கொஞ்சமாவது நினையாது விட்டேன். பல ஆடவரை நேசிக்கச்செய்யும் கொடும்பாவையருள் இவளும் ஒருத்தி" என்று பலவாறு எண்ணி உள்ளம் புழுங்கினன் திருச்செல்வன்.

(தொடரும்)


# குசேலர் சரிதம்

(இரண்டாம் பதிப்பு)
வித்துவான், பிரம்மஸ்ரீ சி. கணேசையர்
அவர்களால் எழுதப்பெற்றது
(ஐந்தாம் வகுப்புக்கு உப பாடமாக உபயோகித்தற்குரியது)

இஃது வித்தியாபகுதியாரின் புதிய ஒழுங்கின்படி பெரியஎழுத்தில்பிரசுரிக்கப்பெற்று அழகிய மூன்று ஆப்டோன் படங்களுடன் வெளிவந்துள்ளது.

வித்தியாசாலைகளின் உபயோகத்துக்குரிய புத்தகமென இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்பட்டது.

விலைசதம் 40

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடஇலங்கைச் சுருட்டுத் தொழிற் சங்கம்.

### ஐக்கிய சேமிப்புச் சங்க ஸ்தாபகம்.

### பொதுக்கூட்ட விபரம்.

வட இலங்கைச் சுருட்டுத்தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று சென்ற சனிக்கிழமை பிற்பகல் ஆறுமணியளவில் வண். வெங்கடேசப்பெருமாள் கோவில் சந்நிதானத்தில் சங்கத்தலைவர் ஸ்ரீமாந் வை. சி. சி. குமாரசுவாமி B. A. (அத்வக்காத்) அவர்களின் தலைமையிற் கூடியது. அத்தருணம் அரசாங்க ஐக்கியசங்கப்பரிசோதகர் ஸ்ரீமாந் வ. சபாபதிப்பிள்ளை அவர்களும் சமுகம் அளித்தார்.

தலைவர், ஸ்ரீமாந் சபாபதிப்பிள்ளையைச் சபையினர்க்கு அறிமுகப்படுத்தி வட இலங்கைச் சுருட்டுத் தொழிற்சங்கத்தின் ஆதாவில் அரசாங்கத்தாரின் மேற்பார்வையிலுள்ள ஐக்கிய சேமிப்புச் சங்கம் ஒன்றை ஸ்தாபிப்பது அவசியம் எனவும் அதன்மூலம் சுருட்டுத் தொழிலாளர்க்கிடையே ஒற்றுமையை வளர்க்கவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இதன்பின் ஸ்ரீமாந் சபாபதிப்பிள்ளை ஐக்கிய சேமிப்புச் சங்கம் என்றால் என்ன என்பதைப்பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினர். நம்நாடு முன்னேறவேண்டுமானல் ஒத்துழைப்பு இயக்கம் நன்கு பரவவேண்டும். எம்நாட்டில் இற்றைக்கு ஒரு தலைமுறைக்குமுன் இருந்த ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இப்போது இல்லை. தொழின்முயற்சி குன்றிவிட்டது. டம்பச் செலவுகள் அதிகரித்துவிட்டன. எமது முந்தையோர் அநுசரித்த ஒறுப்பன்வு முறைகளை நாம் இனிக் கையாளுதல் வேண்டும். குற்றஞ்செய்தலை அறவே ஒழிக்கவேண்டும். இவற்றைச் சங்கமூலமாகவே செய்ய முடியும் என்று ஐக்கிய சேமிப்புச் சங்கத்தின் அம்சங்களைப்பற்றி விரிவாக விளக்கினர்.

சங்க காரியதரிசி ஸ்ரீமாந் அ. க. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு ஆண்டு காலத்திற்குமுன் நிறுவப்பெற்ற வட இலங்கைச் சுருட்டுத் தொழிற்சங்கம் இற்றைவரை எய்தியுள்ள அதி அபிவிருத்தியைக் குறிப்பிட்டு, தொழிலாளிகளின் ஒற்றுமையைக்கெடுக்கச் சில சுயநலப்புலிகள் செய்த விஷமப் பிரசாரத்தைப் பொருட்படுத்தாது, சுருட்டுத் தொழிலாளிகள் ஒற்றுமையுடன் இருந்ததைப் பாராட்டி, இந்த ஒற்றுமை இன்னும் அதிகமல்ல ஒரு ஆண்டு காலத்திற்கு இருக்குமானல் சுருட்டுத் தொழிலுக்கு விமோசனம் நிசசயமாய்க் கிடைக்கும் என்று உத்தரவாதம் சொல்லி ஐக்கிய சங்கப் பரிசோதகர்க்கும் சமுகம் அளித்த அங்கத்தவர்களுக்கும் நன்றிகூறினர்.

இதன்பின் சங்க உதவித் தனதிகாரி ஸ்ரீமாந் நா. மயில்வாகனம் சுருட்டுத் தொழிலாளர்க்கிடையே ஒற்றுமை இருக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினர். பின்னர் இச்சங்கத்தாதரவில் ஓர் ஐக்கிய சேமிப்புச்சங்கம் நிறுவுதல் வேண்டுமென்ற தீர்மானம் சர்வாங்கீகாரமாக நிறைவேற்றப்பட்டது.

இரவு எட்டுமணியளவில் கூட்டம் மங்கலமாக நிறைவெய்தியது.

(கடிதம்)

---


**யாழ்ப்பாணம் இரகுநாதையர்**

ஈசுர வருஷ

**வாக்கிய பஞ்சாங்கம்**

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தனலக்ஷ்மி புத்தகசாலை,
சுன்னுகம்.


## யாழ்ப்பாணப் புராதன குணதோஷ வாராய்ச்சி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

" தம்பலப்பூச்சி "யையும் " தாம்பூல எச்சி "லையும் குறிக்கும். ஆகவே

தம்பலை = தம்பல — சிவப்பு (நிறமான) + ஐ (பெயர்விகுதி)—இடம்

தம்பலை, நாம் வழங்கும் " செம்பாடு " என்னும் பெயருக்குச் சமம்.

கி. மு. 300-ம் வருஷமளவில், Megasthenes என்னுங் கிரேக்க இதிகாசகாரன் இலங்கை " Taprobane " என்றழைக்கப் பட்டதாகக் கூறியிருக்கிருர் (A. I. M. p. 251). இப்பெயர், " தப்ப பன்னி" யென்னும் பாளிச்சொல்லின் திரிபு எனக் கொள்ளப்படும். "தாம்ர பர்ணி " என்னுஞ் சமஸ்கிருதச் சொல்லின் கிரேக்கவடிவமென்பது பொதுவாக ஆசிரியரின் கொள்கை. அதற்காதாரமாக, "தாம்ரபர்ணி" என்னும் பெயர் திருநெல்வேலியிலிருக்குந் " தாமிரபருணி " ஆற்றின் கரையிலிருந்து சிலசனங்கள் இலங்கையிற் குடியேறி, அவ்வாற்றின் பெயரைத் தாம் குடியேறின விடத்திற்கு வைத்தார்களென்று கதை கட்டினர் (A. I. M. p. 253; A. J. p. 104). ஓர்வேளை Taprobane, "Dwipa Ravana" என்பதின் கிரேக்கவடிவம் என்றும் சொல்வார் A. I. M. p. 254).

ஆனல், சமஸ்கிருதத்தில் வழங்கப்பட்ட இலங்கைப் பெயரான " தாம்ரபர்ணி, " " தம்பலை " யென்னுந் தமிழ்ச்சொல்லின் சமமான சொல்லென்பதும் இதிலிருந்துற்பத்தியானதென்பதும் என் துணிவு.

தாம்ரபர்ணி = தாம்ர வர்ணி
= தாம்ர (செம்பு) + வர்ண (நிற) + இ — பெயர் விகுதி (இடம்)
= தம்பல (சிவப்புநிற) + ஐ – பெயர்விகுதி (இடம்)
= தம்பலை

ஆற்றுப்பெயராகிய ' தாமிரபருணி ' வருணன் – புனல் வேந்தன் (புனல்-ஆறு) என்னும் பெயரின் பெண்பாலாகிய " வருணி " யின் திரிபாகிய " பருணி " யமைந்தசொல். கிழக்கோடும் ஆறுகள் பெண்பாலானவை. தாமிரபருணி பத்துப் புண்ணியநதிகளிலொன்ருனதாலும் திருநெல்வேலியின் முக்கியமான நதியானதாலும் அதையோர் பெண்தெய்வமாக்கினர். அது " பொருநன் " என்னும் பெயரின் பெண்பாலாகிய " பொருநை " என்று மழைக்கப்பட்டது. ஆகவே இலங்கைப்பெயராகிய "தாம்ரபர்ணி" யும் ஆற்றுப்பெயரான " தாமிரபருணி " யும் சமமானவையல்ல. இது நிற்க, Ptolomy என்னுங் கிரேக்க ஆசிரியர் " River Solen " என்று சுட்டியது தாமிரபருணியே யென்பது சிலஆசிரியரின் கொள்கை. ஆனல், இப்பெயர் எப்படி வந்ததென்று யாராலு மிதுவரையிற் கூறமுடியவில்லை. (A. I. M. p. 59) 'Solen' சிவப்புமணல் எனக்கருத்துள்ள "சலந்தி"யென்னுந் தமிழ்ச்சொல்லை மூலமாய்க்கொண்டவோர் தமிழ்ச்சொல்லின்கிரேக்கவடிவம் என்பதுஎன்னபிப்பிராயம். ஆற்றின்பெயர் 'சலந்தை'(சலகந்தை-சலந்தை)யாயிருந்திருக்கலாம்.

இலங்கைப் பெயரை " Taprobane என்றும் இலங்கைவாசிகளை "Palaiogonoi" என்றும் Magasthenes கூறியிருக்கிருர். Taprobane, தாம்ரபர்ணி யென்னுஞ் சமஸ்கிருதச் சொல்லிலிருந்துற்பத்தியான தென்போர், "Palaiogonoi" என்னுஞ் சொல்லும் சமஸ்கிருத அல்லது பாலிச் சொற்களிலிருந்து வந்ததாகச் சொல்வர். ஆனல், " Palaiogonoi " என்பது " பழைய உகர் " (உகன் – உகர்) என்னுந்தமிழ்ப் பெயரின் கிரேக்க வடிவமென்பது என் துணிவு. பழைய உகரை நாம் தற்போது "முக்குகர்" " முற்குகர் " (முன் + உகர்) என்றழைக்கிருேம். இதுவரையில் இச்சாதிப் பெயருக்குக் கல்விமான்கள் கொடுத்த நானுவித விபரீத அர்த்தங்களைப் பின்பு கூறுவேன். ஆயின், Palaiogonoi என Megasthenes கூறியது முக்குகான்றி வேருெருவருவருமல்லவெனும் என் துணிவு ஓர் நிராட்சேப நிரூபணமாதலால் அது புராதனவாராய்ச்சியிலதிக பிரயோசனமுள்ளதென்பதை இங்கு கூறத்தகும். " Palaiogonoi " தமிழ்ச் சொல்லிலிருந்து வந்ததுபோல " Taprobane " யும் நம்மூரில் வழங்கப்பட்டவோர் தமிழ்ச் சொல்லிலிருந்தே வந்ததென்பதும் அச்சொல் " தம்பலை " என்னும் பெயருக்குச்சமமானதென்பதும் என் துணிவு.

Tapro-bane = தம்பழ + பணை (மருத நிலம்)?
= தம்பல + பணை (?)
= தம்பலை
= செம்பாடு

தமிழ் 'ழ' கிரேக்க பாஷையில் 'R' ஆக வருவதை 'Damirike' – தமிழகம் (A. I. M. p. 49) 'Soretai' – சோழதேசம் (A. I. M. p. 64) என்னுஞ் சொற்களிற் காணலாம். 'Tapro' 'தம்பழ' வின் வடிவமென்பது தெளிவு. ஆகவே, தம்பலைப் பதியை தம்பழப் பணை அல்லது அதைபொத்த பெயரால் முன்னேர் வழங்கினரெனத் தோன்றுகிறது.

'தம்ப பன்னி' யென்னுஞ் சிங்கள (பாலி)ப் பெயரும் 'தம்பலபணை' யின் மாற்றுகத் தோன்றுகிறது. 'தம்ப' 'தம்பல' வின் சிதைவென்பது வெளிப்படை. தமிழ் 'ண' சிங்களத்தில் 'ன' ஆகக்கூடும். 'யாழ்ப்பாணப் பட்டணம' 'யாப்பா பட்டுன' வாக வருவதைக் காண்க.

"பன்னி" யென்னுஞ் சொல் "இலை" யென்னுங் கருத்துள்ளதென்பர் (A. I M. p. 253). "தம்பல இலை" எனக் கருத்துள்ள பெயர் ஓர் தேசத்திற்கியையுமா? வாயுபகவான் பாப்பிய செம்பாட்டுப் புழுதியினற் சிவந்த மா இலைகளைப் பார்த்தோ விஜயன் அவ்விடத்திற்குத் தம்பபன்னி (பன்னி - இலை) யெனப் பெயரிட்டான்? அந்நிலத்துச் சிவப்புப் புழுதி புயகரங்களிற் புரண்ட காரணத்தாலவ்விடம் தம்பபன்னியெனப் பெயரிடப்பட்டதென்றல்லவோ மகாவம்ச ஆசிரியர் கூறினர்? இலை இதிலிலையே! ஆகவே, "பன்னி" சமஸ்கிருத "பர்ணம்" (இலை) தமிழ் "பன்னம்" (இலை) என்னுஞ் சொற்களின் சமமல்ல. வன்னியரிருந்த இடம் வன்னியானது போல் பன்னகன் (பன்னகாபாணன் = சிவன்) இருந்தவிடம் "பன்னி" யாயிற்ருே?

சிவபெருமான் கீரிமலைச்சாரலில் வசித்த காரணத்தால் நகுலம் புண்ணியபுரம் தர்ஷிஸ் என்னும் பெயர்களால் நமது நாடு அழைக்கப்பட்டு வந்ததுமன்றி, அவருக்கும் ஓர் பெயர் நமது நாட்டினிமித்த முண்டானதாகத் தோன்றுகிறது.

"வேடர்குல மாதுபுணர் வேலாயுத கரன் செங்காடன் புதல்வன் கதிர்காமன்"

செங்காடு-ஓர் சிவஸ்தலமென அகராதி கூறும். உற்றுப் பார்க்கின் அது "செம்பாடு" எனத் தோன்றும். ஏனெனில், செங்காடே செவ்வைபண்ணப்பட்டுச் செம்பாடானது. செங்காட்டில் வசித்த காரணத்தால் "செங்காடன்" எனப்பட்டார். ஆகவே, "செங்காடு", "செம்பாடு", "தம்பலபணை"(?) "தம்பலை", "திருத்தம்பலைப்பதி" யென்னும் பெயர்களால் நமதுநாடு பண்டுதொட்டு வழங்கப்பட்டதென்பதற்கு ஐயமில்லை.

விஜயன் கரைசேர்ந்தவிடம் இலங்கையின் முதலாம் (விசேஷ?) பட்டணமென்று மகாவம்ச ஆசிரியர்தாமே கூறினர். விஜயன் வரவின்பின்தான் அவ்விடத்துக்கோர் பெயர் அவனுற் கொடுக்கப்பட்டு அதுவோர் மாட்சிமை தங்கிய இடமாக வந்ததென்பது புழுதிபுரண்ட சம்பவத்தின் புரட்டுக் கதையன்ருே? கி. மு. 300ம் வருஷமளவில், அதாவது, விஜயன்வரவுக்கு இரண்டரை நூற்ருண்டுகளின் பின் தம்பபன்னி வாசிகளைச் சிங்களவரென Megasthenes அழையாது விட்ட காரணம யாதோ? அக்காலத்தில் முக்குகர் (Palaiogonoi) இலங்கை முழுவதையும் குடிகொண்டிருந்தாரா? தம்பபன்னி (Taprobane) முக்குகரின் வாசஸ்தானமாயிருந்தா லல்லவோ அவர்கள் அதின் வாசிகளாவர்? முக்குகரின் சுவதேசம் இன்றும் யாழ்ப்பாணமல்லவா? அவர்கள் சிங்கள நாட்டிலிருந்துவந்து யாழ்ப்பாணத்திற் குடியேறினரென்று சரித்திரமாவது கர்ண பாரம்பரியமாவது உண்டா? கட்டுக்கதைதானுமில்லையே!

இவற்றை யாராய்ந்தறிந்தபின், தம்பபன்னி யாழ்ப்பாணத்திலிலது. யாழ்ப்பாணத்திலுேர் மேன்மை பொருந்திய பகுதியின் பெயராகிய " திருத்தம்பலைப்பதி " வேஷம் மாறி " Taprobane " யென இலங்கையினிற்பெயராக வந்திலது. " Palaiogonoi " முக்குகரைச் சுட்டிய பெயரல்லவென யார் ஆட்சேபிக்கக்கூடும். ஓர் வேளை, கந்தரோடை (கந்தர்வன் ஓடை—கந்தரஓடை. பின்வரும்) கத்துறு கொட வென்னுஞ் சிங்களப் பெயரிலிருந்துற்பத்தியானதெனக் கொள்ளும் கலைஞர், தம்பலை தம்பபன்னியிலிருந்து பிறந்ததெனக் கூறுவாராக்கும்.

திருவடிநிலை, சிவஞெளி பாதமலை, செங்கடகநகரி (செங்காடன்–செங்கடன்–செங்கடகன்) முதலிய பெயர்களுஞ் சிவனேடு சம்பந்தப்பட்டவை. (வரும்)

---


**நவமணி**

ஒரு சிறந்த தமிழ் வாரப் பத்திரிகை உயரிய கட்டுரைகளுடனும், வெளிநாட்டுச் செய்திகளுடனும், ஞாயிறுதோறும் வெளிவருகிறது. இதன் ஆசிரியர் T. P. பக்கிரிசாமி.

மனேஜர்,
'நவமணி' ஆபீஸ்,
2/25. மீரான்சாயபுவீதி,
மவுன்ட்ரோட், சேன்னை'


## விளம்பரம்

இத்தால் சகலருமறியும்படி அனலைதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது மலாய்நாட்டில் சிகாமற்றை வாசஸ்தானமாகவுங்கொண்ட சுப்பிரமணியர் வேலுப்பிள்ளை ஆகிய நான் வெளிப்படுத்துவதாவது:– 1936-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ந் திகதி அ. சிவம் என்பவரால் ஏமாற்றப்பட்டு தம்பின் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஓர் தத்துவத்திற் கையெழுத்திட்டேன் என்றும், அனலைதீவிலுள்ள எனது ஆதனத்தை ஈடுவைப்பதற்குக் குறித்த தத்துவத்தில் நான் யாரையும் நியமிக்கவில்லை என்றும், குறித்த தத்துவத்தை நான் எவ்விததிலும் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் இதனுற் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

சிகாமற், இங்ஙனம்
16–2–37 சு. வேலுப்பிள்ளை
(279) 7–3–37—4-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபார தேவதாரு

# வனங்கள் பதிவு செய்யப்பட்டன

இப்பத்திரிகையை வாசிக்கும்போது இக்கடுதாசி எப்படி, எங்கே உண்டாக்கப்படுகின்ற தென்பதைப்பற்றியும் இதை இன்னும் உண்டாக்குவதற்குப் போதிய அளவு தொழிற்படாத பொருள்கள் இருக்கின்றனவா வென்பதைப்பற்றியும், நீர், எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா. அப்பொழுதுதான் மரமும், மரச் சோத்தியும் தற்கால நாகரீக வைபவத்தில் எத்துணை முக்கிய அம்சமாகத் தொழிற்படுகின்றனவென்பதையும் இதில் பணம் முதலிடுவதினல் எத்துணை லாபமுண்டு என்பதையும் உணருவீர்.

இப்பணமுதலீடு மிகப்பிரயோசனமுள்ளதும், 680 தீவிரவளர்ச்சியுடையதும் அவற்றின் பாதுகாப்புக்கு உத்தரவாத முடையதுமான தேவதாருமரங்களைக்கொண்ட சொரியலான ஒரு ஏக்கர் நிலத்தைக் குறிக்கும்.



உலகின் எல்லாப்பாகங்களிலுமுள்ள அதி தீவிர சித்தமும் மிக்க உபாயமும் உள்ள வியாபாரிகளினல் இது வரையில் 500000 தங்கப்பவுண்கள், வியாபாரவளர்ச்சிச் சாதனங்களில் முதலிடப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் நீங்கள் மிக்க சாவதான மானவும் செட்டானவும் பழக்கங்களிற் பேர்பெனவர்கள். ஆகவே இன்னும் மேலதிகமாக இதைப்பற்றி நீங்கள் விசாரிப்பீர்களானல் இப்பணமுதலீடு உங்கள் மனதைக் கவரவேண்டும். கவரும்.

ஒவ்வொரு சாதனமும் எடுக்கும்போது ரூ. 67 ச. 50ம் பின் 30 மாசங்கட்கு மாசாமாசம் ரூ. 13 ச. 50 கட்டவேண்டிய தோன்றுகும்.

மதிக்கப்பட்ட வரும்படி 2000 ரூபா முதல் 4500 ரூபா வரையில் ஒவ்வொரு 10—12 வருடங்கட்கும்.

"நியூஸிலண்ட்" நாட்டிலேயுள்ள வனம் 6-கோடியே 30 லட்சம் ஏக்கரிலிருந்து 1 கோடியே 20 லட்சம் ஏக்கராகக் குறைக்கப்பட்டு விட்டது. இந்த மரக்குறைவை நிவிர்த்தி செய்வதற்குப் புதிதாகச் செய்கைபண்ணப்படும் வனம் 50 லட்சம் ஏக்கர் நடப்பட வேண்டியது அவசியம்.

இச்சங்கத்தின், இலங்கையின் பிரதான காரியாதிகாரி இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருக்கின்றனர். அவர் சாதனங்கள் புதிதாகச் சேருபவர்களுக்குக் கொடுக்கின்றனர். யாழ்ப்பாணக்காரியாலயத்திற்கு எழுதினல் அவர் சந்தோஷமாக உங்களை வந்து சந்தித்து இவ்வியாபாரத்தைப்பற்றி இன்னும் நன்கு விளக்குவார். அவர் வருவதினல் நீங்கள் எவ்வித கடமையும் உடையவர்களாகமாட்டீர்கள்.

எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்.

தொழிலிலிருந்து இளைப்பாறியபின்னர் இப்பண முதலீட்டின் பலனை அனுபவியுங்கள்.

உங்கள் குழந்தைகட்காக.

அவர்களுக்கு நல்ல கல்வியூட்டுவதற்கு நிச்சயம் பண்ணிவைத்தல் ஒவ்வொரு பெற்றரின் பெருமையும் கடமையுமாகும்.

## "சீ. பி. எவ்." சாதனங்கள்

நஷ்டம்தராதபடி பத்திரப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை நினைவு கூருங்கள்

இலங்கையின்
பதிவுபண்ணப்பட்ட காரியாலயம் :-
ஹொங்கொங் வங்கிக் கட்டிடம்,
கொழும்பு

யாழ்ப்பாணம் காரியதரிசி
சுப்பிரமணியம்-நாகலிங்கம்
நெடுந்தெரு, காங்கேசன்துறை

10-5-36.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 7 } Chunnakam, Jaffna, April 4th 1937, Sunday. { No. 36

## THE LANKA BENEFIT CORPORATION Ltd.,
BANKERS,

### தி லங்கா பெனிபிற்கோர்பரேஷன் லிமிடெட்
வங்கிக்காரர்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| Authorised Capital | Rs. 5000000.00 |
| Issued Capital | 3000000.00 |
| Reserved Capital | 2000000.00 |
| Subscribed Capital | 1000000.00 |
| Value of one Share | 10.00 |

*Board of Directors*

1. Dr. S. சுப்பிரமணியம், Retired Provincial Surgeon, 'Octagon' Jaffna.
2. திரு V. சோமசுந்தரம், Pensioner, F. M. S. Thirunelvely, Jaffna.
3. திரு A. M. சாமுவேல், Head Master, A. M. School, Navaly. Manipay.
4. திரு P. சுப்பிரமணியம் Retired Tea Maker, Alaveddy.
5. திரு T. செல்லப்பா, Manager, Central Co-oporative Stores Ltd., Jaffna.
6. திரு,S.வேலுப்பிள்ளை, Teacher,Myliddy, Kankesanthurai.
7. திரு S. S. K. வாளரசன் Head Master, M. M. School, Vannarponnai.
8. திரு J. C. செல்லையா, Pensioner Sandilipay, Manipay.
9. திரு T. செல்லத்தம்பி, Managing Director.

கைத்தொழில்களையும் வேறும் ஆதாயம் பெறக் கூடிய முயற்சிகளையும் ஊக்கப்படுத்தும் நோக்கமாகப் பங்காளருக்குக் குறைந்த வட்டிக்குப் பணங் கொடுக்கப்படும்.

பணம் போடுபவர்களின் போடுதொகைகளுக்கு உயர்ந்தவட்டி கொடுக்கப்படும்

தவணைப் போடுதொகைகளுக்கு நூற்றுக்கு 8 வீதம்
சேமப் போடுதொகைகளுக்கு நூற்றுக்கு 5 வீதம்
நடப்புப் போடுதொகைகளுக்கு நூற்றுக்கு 3 வீதம்

**ஏஜண்டுகள் தேவை**

மாதமொன்றிற்கு ரூபா 50/- க்குக் குறையாத சம்பளம் கொடுக்கப்பெறும். இச்சமுதாயத்தைப்போல் எச்சமுதாயத்திலும் இவ்வளவு உயர்ந்த சம்பளத்தை ஏஜண்டுகள் பெறுதல் அரிதிலும் அரிது. வேண்டிய விபரத்திற்கு விரைந்து மேற்படி காரியாதிகாரிக்கு எழுதவும்.

த. செல்லத்தம்பி
காரியாதிகாரி.

14-2-37

## நீர் அழிவுக்கு
சுவாமி பரிபூரணனந்தர் அவர்களது

# அப்ரேக் செந்தூரம்

**கைகண்ட அரிய மருந்து**

20 நாள் 40 வேளை மருந்து விலை ரூபா 16—0—0

"இந்தமருந்தை ஒரு சாய்புக்குக் கொடுத்ததில் 15 நாட்களில் அவருக்குச் சர்க்கரை யில்லாமல் நீர் சுத்தமாயிருக்கிறது" என்று

புதுக்கோட்டை, தலைமை வைத்திய சுகாதார அதிகாரி
டாக்டர் எம். ஜி ராமச்சந்திரராவ் எம். பி. சி. எம்.
எழுதுகிறார்.

இதற்கும் மற்றும் பல வியாதிகட்கும் மருந்து வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

ஏழைகட்கும், யாத்திரீகர்கட்கும் இராமேசுரத்தில் இலவச சிகிச்சை அளிக்கப்படும்.

**சுவாமி பரிபூரணநந்தா,**
ஸ்ரீ ராமகிருஷ்ண சித்த வைத்தியசாலை, இராமேசுரம்.

(68) 9-8-36—7-37.

## சரித்திர கதாவாசகம்

ஆசிரியர்: இ. தர்மலிங்கம் அவர்களால்
புதிய சரித்திரபாடத்திட்டத்திற்கு ஏற்ப எழுதப்பட்டவை

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | சதம் | 25 |
| மூன்றும் வகுப்பு | சதம் | 30 |
| நான்காம் வகுப்பு | சதம் | 40 |

வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
சுன்னாகம்

## Sri Lanka Book Depot
## ஸ்ரீ லங்கா புத்தகசாலை
**வண்ணார்பண்ணை**

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும் வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனா முதலியனவும், கோப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்
ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப்படுத்தினோம்.

இது சலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்தேமுஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு. சாத்தாவாளி, நீர்முள்ளி விதை, நாகம்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவள பஸ்பம் வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம். சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்சவாய்வு இன்னும் அநேக கடுமையானவியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள்.

இதன்விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொலைவாய் ராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியாடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை
இலக்கம் 33. பழைய வாடி ரோட்டு,
கோட்டைமுனை, மட்டக்களப்பு.

7-3-37-4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு [illegible] ம. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யி லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1937-ம் ஆ ஏப்பிரல்மீ 4-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.